
GOKULAM

கோகுலம்




ரூ.6/-

பிப்ரவரி 2003



பாபு, கோபு வீட்டுக்குச் செல்ல வழி காட்டுங்கள்!

பாதி தெரியும் பொருட்களின் பெயர்களைக் கண்டுபிடியுங்கள்!



விடைகள் :

1. சோஃபாசெட்
2. கத்திரிகோல்
3. ஹாரன்
4. மூலை மட்டம்
5. இஸ்திரி பெட்டி
6. புத்தகம்
7. காம்பஸ்
8. தொலைபேசி
9. கிரிக்கெட் மட்டை
10. தபால்பெட்டி
11. மூக்குக் கண்ணாடி
12. ஷூ

கோகுலம்

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
ஆசிரியர் பொறுப்பேற்று
அச்சிட்டு வெளியிடுபவர் :
கி.ராஜேந்திரன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 97

உதவி ஆசிரியர் :
எஸ். சுஜாதா

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்

தொலைபேசி :
2 234 5622 / 23 / 24
தொலைநகல் :
044 - 2 234 5621

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
gokulam@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.72/-
ஆறு மாதம் : ரூ.36/-
வெளிநாடு
(விமானத்தபால்) :
ஒரு வருடம் : 24 யு.எஸ். டாலர்
இலங்கை : ரூ.400/-

Bharathan Publications Private Limited, Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 097.

குழந்தைகள் மனம்
கவர்ந்த இதழ்

ஆழ்கடல் புதையல் வேண்டுமா?

பக்.40







சாக்லேட்டும் ஏழு முந்திரிப் பருப்புகளும் மேடையில் நாடகம் நடத்துகின்றன.

பக்.51

நேரம் வரும் காத்திரு! புத்தம் புதிய தொடர்கதை

பக்.35





பிராணிகள், பறவைகளுக்கு உயிரியல் பூங்கா இருப்பதைப் பார்த்திருப்பீர்கள். வண்ணத்துப் பூச்சிக்கு ஒரு பூங்கா

பக்.76

பிப்ரவரி 2003 மலர் : 21 இதழ் : 1

கோகுலம்

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும். - பாரதியார்.



ரயில்

சட்டையைப் பிடித்தபடி 'குப் குப் குப் குப் ரயில் வண்டி; கூவிப் போகுது ரயில் வண்டி' என்று பாடிக் கொண்டு சென்றிருக்கிறேன். எனக்குப் பிடித்த விளையாட்டுகளில் இதுவும் ஒன்று!

அன்புள்ள ஜக்கு...

● ஆ. சந்தியா, நல்லூர்.

? ஃபிளையிங் ஃபாக்ஸ் என்பது என்ன?

ஒரு வகை பழந்தின்னி வௌவாலுக்குப் பெயர்தான் பறக்கும் நரி. ட்ரொபஸ் என்ற இந்தப் பழந்தின்னி வௌவால்களின் முக அமைப்பு, நரியின் முகம் போன்று இருப்பதால் 'பறக்கும் நரி' என்று அழைக்கப்படுகிறது. இதன் உடல் ஓரடியாக இருந்தாலும் இறக்கையின் நீளம் 5 முதல் 6 அடி இருக்கும். இதன் உடலில் நரியின் உரோமம் போன்று பழுப்பு நிற உரோமங்கள் காணப்படும். இவை கூட்டமாக மரக்கிளைகளில் வாழக் கூடியவை. வாழை, மா, கொய்யா, பழங்கள் இவற்றின் உணவு. தாவரங்களின் மகரந்தச் சேர்க்கைக்கு இவை பெரிதும் உதவுகின்றன.

● வீ. கலாதேவி, கடைப்பாடி

? ஜக்கு, உனக்கு ரயில் விளையாட்டுப் பிடிக்குமா?

வரிசையாக ஒருவர் பின்னால் ஒருவர் சட்டையைப் பிடித்தபடி 'குப் குப் குப் குப் ரயில் வண்டி; கூவிப் போகுது ரயில் வண்டி' என்று பாடிக் கொண்டு சென்றிருக்கிறேன். எனக்குப் பிடித்த விளையாட்டுகளில் இதுவும் ஒன்று!

● ப. காளிதாசன், நீர்விளங்குளம்

? ஞாபக மறதி எனக்கு ரொம்ப அதிகம். இது ஏன்? எப்படி நினைவில் வைத்துக் கொள்வது?

நாம் பார்க்கும் நிகழ்ச்சி, அறியும் செய்தி ஒவ்வொன்றும் நம் மூளைக்குள் அதனதன் இடத்தில் ஒழுங்காக அடுக்கப்படுகிறது. சரியான கோர்வையில் ஒருங்கிணைக்கப் படுகிறது. மேலும் மேலும் புதிய விஷயங்கள் அதன்மீது வைத்து அடுக்கப் படும்போது, பழைய விஷயம் அடியில் புதைந்து விடுகிறது. இதனை வெளிக் கொண்டு வர சரியான மீள்பார்வைப் பயிற்சி தேவை. அப்படி பயிற்சி செய்யா விட்டால் அந்த விஷயம் நமக்கு மறந்து விடும். மூளையால் எந்த ஒரு விஷயமும் மறக்கப்படுவதில்லை. ஞாபக மறதிக்கு நம் அக்கறையின்மையும் விருப்பமின்மையும்தான் அடிப்படைக் காரணமாகிறது. எனவே ஒரு விஷயத்தை நீங்கள் அடிக்கடி நினைவுக்குக் கொண்டு வந்து அசை போட்டு வைத்துக் கொண்டால், மறதி ஓடி விடும்.

விளையாட்டுப் பிடிக்குமா?

● சி. சிவகண்மணி, கருப்பம்புலம்.

? பச்சை மையைச் சாதாரணமாக எல்லோரும் பயன்படுத்தலாமா?

அரசாங்க அலுவலகத்தில் கெஸட்டட் அதிகாரிகள்தான் பச்சை மையைப் பயன் படுத்துகிறார்கள். மற்ற இடங்களில் உயர் பதவி வகிப்பவர்கள் பச்சை மையால் எழுது கிறார்கள். சாதாரணமாக நாம் எழுதுவதற்கு நீலம் அல்லது கறுப்பு மையே சிறந்தது. காரணம், எழுத்துகள் பளிச்சென்று தெரிவதுதான்.

● ஜி.எஸ். கார்த்திக், கோபிசெட்டிப்பாளையம்

? என் வயது 15. நான் இந்த வயதிலிருந்தே உடற்பயிற்சி செய்ய ஆரம்பிக்கலாமா? இதனால் என் இயல்பான வளர்ச்சி பாதிக்கப்பட வாய்ப்பு உள்ளதா? திறந்த வெளியில்தான் செய்ய வேண்டுமா?

உடற்பயிற்சி செய்வதே உடலை ஆரோக்கியமாகவும் சுறுசுறுப்பாகவும் வைத்துக் கொள்வதற்குத்தான். இதில் இயல்பான வளர்ச்சி எல்லாம் எப்படி பாதிக்கும்? நீங்கள் கவலைப்படாமல் தாராளமாக உடற்பயிற்சி செய்யலாம். திறந்தவெளியில் சுத்தமான காற்றை சுவாசித்தபடி உடற்பயிற்சி செய்தால் மிகவும் நல்லது. திறந்தவெளி இல்லாத பட்சத்தில் வீட்டிலேயே உடற்பயிற்சி செய்யலாம். எட்டு வயதிலிருந்தே உடற் பயிற்சி செய்ய ஆரம்பிக்கலாம். நான் உடற் பயிற்சி செய்து எவ்வளவு ஸ்மார்ட்டா இருக்கேன்னு பார்த்தாலே தெரியுமே!

● ஆர். வசந்த், திருக்காட்டுப்பள்ளி.

? உனக்கு மரம் ஏறத் தெரியுமா ஜக்கு?

யாரைப் பார்த்து என்ன கேள்வி கேட்டாய் வசந்த்? உன்னோட பாணி யில் சொல்லணும்னா 'சூரியனுக்கே டார்ச்சா?'

● எஸ். வனிதா குமாரி, போடி.

? எறும்பு எப்படி சர்க்கரையைத் தேடிப் போகிறது?

எறும்புகள் சமூகத்தில் தேனீயைப் போலவே ராணி எறும்பு, ஆண் எறும்புகள் மற்றும் வேலைக்கார எறும்புகள் என மூன்று பிரிவுகள் உள்ளன. வேலைக்கார எறும்புகளில் சில உளவாளி எறும்புகளும் உண்டு. இவை எப்பொழுதும் உணவைத் தேடி அலைந்து கொண்டிருக்கும். இனிப்பை அறிந்தவுடன் புற்றுக்குத் திரும்பி வந்து, மற்ற எறும்புகளுக்குச் செய்தியைத் தெரிவிக்கும் வகையில் தன் அடிவயிற்றை நிலத்தில் அழுத்தி ஒரு வித வாசனைத் திரவத்தை வெளியேற்றும். அந்த வாசனையை நுகர்ந்து மற்ற எறும் புகள் சாரை சாரையாகச் சர்க்கரையை நோக் கிப் படை எடுக்கின்றன.

மதுரை மாவட்டச் சிறப்பிதழ்

மதுரை மாவட்டச் சிறப்பிதழுக்குப் படைப்புகள் வந்து கொண்டிருக்கின்றன. மார்ச் கோகுலம் மதுரை மாவட்டச் சிறப்பிதழாக மலர இருக்கிறது. அனுப்ப நினைப்பவர்கள் உடனே உங்கள் படைப்புகளை அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

அடுத்தது திண்டுக்கல் மாவட்டச் சிறப்பிதழ்

திண்டுக்கல் மாவட்ட பள்ளி மாணவ, மாணவியர் இப்பொழுதே தங்களின் படைப்புகளை அனுப்ப ஆரம்பிக்கலாம். கதைகள், கவிதைகள், துணுக்குகள், ஜோக்ஸ், புதிர்கள், அனுபவங்களை எழுதி அனுப்பலாம். இது தவிர திண்டுக்கல் மாவட்டத்தின் சிறப்புகள், வரலாற்று அம்சங்களையும் எழுதலாம். கடைசி தேதி **15.2.2003.** பிரசுரமானால் பரிசு உண்டு.




நாயும்

விருந்தில் வீசிய வடைத்துண்டை,
விரும்பி உண்ணக் காகமுமே,
விரைந்து மூக்கால் அதைப் பற்றி,
பறந்து சென்றது மரத்தருகே.

வாலை ஆட்டி நாயொன்று,
வந்தது அங்கே ஆசையுடன்
வடையை மெல்லப் பறித்திடவே,
வஞ்சக எண்ணமுங் கொண்டதுவே.

''பட்டுக் கறுப்பு உடலழகு,
பார்வை சாயும் விழியழகு,
வெட்டெனப் பறக்கும் வேளையிலே
விந்தை உந்தன் சிறகழகு!''

''எட்டி யெட்டிப் பார்த்திடவே
எடுப்பாய் உந்தன் கழுத்தழகு:
எவருக்குண்டு அழகழகு?''
என்றே குரைத்தது நாயுந்தான்.



காகமும்




''ஏனோ பொய்யாய்ப் புகழ்மொழிகள்,
என்ன வேண்டும், வடைதானே?
தனியாய்த் தின்ன மாட்டோம் நாம்
தருவோம் பகிர்ந்து தடையின்றி.

''என்றும் நன்றியுடையவரே,
எங்களைப் போல நீங்களுமே,
ஏனோ பகிர்ந்திட மறுக்கின்றீர்
இனமாம் நாயையே முறைக்கின்றீர்!''

கரைந்தே உரைத்துக் காகமது
கால் விரலிடுக்கிய வடைத் துண்டை
கனிவா யளித்தது நாயிடமே;
குரைத்தது நாயும் நன்றியுடன்!

ஆர்.பி. சாரதி



உங்களிடமிருந்து...

✉ "யார் பலசாலி? என்ற படக்கதையில் ஹார்ன்பில்லின் கொடுமையான ஆட்சியை முறியடிக்க, ஆந்தை கொடுத்த யோசனை பலே! பலே! 2002 ஆம் ஆண்டு கோகுலம் சுழல் கோப்பையை வென்ற தூத்துக்குடி, புனித அலாய்சியஸ் பள்ளிக்கு வாழ்த்துகள். இந்த ஆண்டு சுழல் கோப்பையை நாங்கள் விடுவதாக இல்லை" என்கிறார் நல்லூரி லிருந்து எஸ். அமீர்ஜான்..

கோகுலம் கோப்பை எங்களுக்கே!

✉ "கோகுலம் இதழைத் தவறாமல் படித்து வருகிறேன். அதில் வெளியிடும் செய்தித் துளிகளையும், துணுக்குகளையும் பத்திரப்படுத்தி வைத்திருக்கிறேன். 'மதுரை மாவட்டச் சிறப்பிதழ்' கண்டு மகிழ்ந்தேன். எங்கள் மாவட்டச் சிறப்பிதழ் எப்போது வரும் என்று ஆவலுடன் எதிர்பார்க்கிறேன். யார் பலசாலி? படக்கதை அருமை" என்கிறார் க.கருமத்துப்பட்டியிலிருந்து ச. அழகுவேல்.

✉ "முயன்றால் முடியாதது எதுவுமில்லை என்பதற்கு மிகச் சிறந்த உதாரணம் துர்கா காத்யாயனி - சௌம்யாயனி சகோதரிகள்தான். நான்கு வருட முயற்சியில் கிடைத்த இந்த வெற்றிக்கு, என் மனம் நிறைந்த நல்வாழ்த்துகள்" என்கிறார் புதுக்கோட்டையிலிருந்து ஆர். கீர்த்திவாசன்.

✉ பள்ளங்கோயிலிலிருந்து மு. அகமது ஆதில், "குடியரசுத் தலைவர்கள் அணிவகுத்த 2003 காலண்டர் புதுமையாக இருந்தது" என்கிறார்.

✉ "நான் கோகுலம் நடத்தும் ஓவியப் போட்டியில் தவறாமல் கலந்து கொள்வேன். இதுவரை நிறைய தடவை பரிசும் பெற்றிருக்கிறேன். பரிசாகக் கிடைத்த பணத்தில் கலர் பாக்ஸ், ஓவிய அட்டை போன்றவற்றை வாங்கியிருக்கிறேன். கோகுலம்தான் என் திறமையை எனக்கே வெளிச்சம் போட்டுக் காட்டியது. இப்பொழுது நிறைய ஓவியப் போட்டியில் கலந்து கொள்கிறேன். என் தன்னம்பிக்கையைத் தூண்டிவிட்ட கோகுலத்துக்கு நன்றி" என்கிறார் கும்பகோணத்திலிருந்து சு. ஸ்ரீவித்யா.

✉ நல்லூரிலிருந்து ஆ. சந்தியா "ஜனவரி இதழில் வெளியான அனைத்து படைப்புகளும் அருமையாக இருந்தன. புதிதாக ஆரம்பிக்கப்பட்ட அன்புள்ள ஜக்குவை கைதட்டி வரவேற்கிறேன். சுழல் கோப்பைத் திட்டத்தில் முதல் ஐந்து இடங்களைப் பெற்ற பள்ளிகளின் பட்டியலில் எங்கள் பள்ளியும் இடம் பெற்றிருப்பது கண்டு எங்களுக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது" என்கிறார்.



✉ "சின்னமனூர் சின்னப்பட்டாளம் மிகவும் விறுவிறுப்பாக ஆரம்பித்து விறுவிறுப்பாகவே முடிந்துவிட்டது" என்கிறார் திருச்செந்தூரிலிருந்து என். முத்து லக்ஷ்மி.

✉ ஆத்தூரிலிருந்து கே. பிரபாகர், "கிட்டான், உதாரணம், செந்தில், முத்துகுமார், சிட்டழகு ஆகியோரை மறக்க முடியாது. கனக சபைக்கு ஒரு சலாம்" என்கிறார்.


✉ "அறையில் அடைபட்டுக் கிடந்த சிட்டழகு மீட்கப்பட்டவுடன்தான் நிம்மதி ஏற்பட்டது. அவனை மீட்கப் போராடிய அத்தனை பேருக்கும் பாராட்டுகள்" என்கிறார் சிவகாசியிலிருந்து வி. ரம்யா.

கழுதை எப்படி மனிதனானது?


கதை: பா.கவிதா, புதுடெல்லி.

படம்: மூர்த்தி




ராமு ஊர்த் தலைவரை நோக்கி ஓடினான்.
வா, என் அருமை கழுதையே!
என்ன முறைக்கறே? கழுதையா இருந்த உன்னைப் பண்டிதரிடம் சொல்லி மனிதனாக்கியது நான்தான்.
இவன் பைத்தியம் போலிருக்கு. அடித்து விரட்டுங்கள்.
அடி வாங்கிய ராமு மீண்டும் பண்டிதரிடம் சென்றான்...
ஐயா, அவனுக்கு ரொம்பத் திமிருங்க. என்னையே பைத்தியமுன்னு சொல்லிட்டான். அவனை மறுபடி கழுதையாகவே மாற்றிடுங்க.
பண்டிதர் தோட்டத்தில் கட்டி வைத்திருந்த கழுதையை அவனிடம் ஒப்படைத்தார்.
நன்றி ஐயா!

நூல் அறிமுகம்



பாடல்களின் தேன்கூடு!

திரும்பி வந்த மான் குட்டி - குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா - பக்.80 இருபது ரூபாய் - குழந்தைப் புத்தக நிலையம், விற்பனை உரிமை : பாரி நிலையம், 90 பிரகாசம் சாலை, சென்னை - 600 001.

வெல்லக் கட்டியில் எந்தப் பகுதி மிக இனிப்பாக இருக்கும் என்பதைச் சொல்ல முடியுமா? அதேபோலத்தான் இதில் உள்ள எட்டுக் கதைகளும். ஒவ்வொன்றும் ஒவ்வொரு சுவை. எல்லாம் ஏற்கனவே கோகுலத்தில் வெளிவந்து பெரிய வரவேற்பைப் பெற்றவை. பொன்னனின் சுதந்திரம், திரும்பி வந்த மான்குட்டி ஆகியன படிப்போர் மனதைப் பண்படுத்தும் என்பது உறுதி.

கிள்ளை மொழி - புலவர் கோ.அருளாளன் - பக்.112 ரூபாய் இருபத்தைந்து - திருவள்ளுவர் பதிப்பகம், பசனை கோயில் தெரு, நல்லாண் பிள்ளை பெற்றாள், செஞ்சி வட்டம், தெ.ஆ. மாவட்டம். 604 152.

சிறுவரை வாய்விட்டுப் பாடி ஆட வைக்கும் பாடல்களின் தேன்கூடு. எளிய சொற்கள். தாளம்போட வைக்கும் சந்தம். சிறுவரைக் கவரும் எல்லாப் பொருள்கள் மீதும் பாடல்கள் உள்ளன. புதிய நோக்கிலும் குறைவில்லை. எருதையும், காகத்தையும் எறும்பையும் காட்டி நல்லதை உணர்த்தவும் தவறவில்லை.

எருதைக் காண்கின்றாய் தினமும்
என்ன கற்றாய் அதனிடம்?
அருமை யாகவே உழைத்திடும்
அதனின் உழைப்பை உணர்ந்தாயோ?
எதனைக் கண்ட போதிலும்
ஏற்பாய் அதனின் நல்லதையே
அதனால் வாழ்வில் உயர்வாயே
அகிலம் போற்ற சிறப்பாயே. (பாடல் - என்ன கற்றாய்?)

பசுமைப் படை - தேவி நாச்சியப்பன் - பக்.60 - பதினாறு ரூபாய் - பழனியப்பா பிரதர்ஸ், கோனார் மாளிகை, 25, பீட்டர்ஸ் சாலை, சென்னை - 14.


கால்குலேட்டர் என்ற கணினி கையடக்கமாகக் கிடைக்கும்போது எதற்காக வாய்பாடைக் கடுமையாக மனப்பாடம் செய்து கணக்குப் போட வேண்டும்? இந்த வினா 'நண்பன் சொன்னால்,' கதையில் வரும் ராமுவைப் போலவே உங்கள் எல்லோர் மனத்திலும் எழலாம். இதற்குத் தீர்வும் கதையிலேயே உள்ளது. இதைப் போன்ற அருமையான பத்துக் கதைகளின் மலர்க் கொத்து இது.

சிறுவர்களுக்குப் புத்தர் சொன்ன கதைகள் - பக்.128 - முப்பத்தைந்து ரூபாய் - பேராசிரியர் எ.சோதி - நன்மொழிப் பதிப்பகம், 41, கங்கை வீதி, வசந்த் நகர், புதுச்சேரி - 605 003.

பாரத நாட்டுப் பழங்கதைகள் பிரிவில் போதி சத்துவர் கதைகள் என்ற புத்தர் ஜாதகக் கதைகள் சிறப்பான இடம் பெற்றவை. ஆனால் இவற்றுள் பெரும் பாலானவை பெரியவர்களுக்கானவை. இவற்றிலிருந்து சிறுவர்க்கேற்றதாக 25 கதைகளைப் பிரித்தெடுத்து பெரிய எழுத்தில் தனக்கே உரிய நடையில் கண்கவரும் முழுப் பக்கப் படங்களோடு வழங்கியுள்ளார் ஆசிரியர்.

- ரே

என். மாதவன்



எலியாரின் எமலோக யாத்திரை!

பகோடா பாக்கெட்டுடன் பாலுவின் அப்பா வந்தார். மூலைக் கடையின் பகோடா மணத்தை நுகர்ந்த எலியாருக்கு வாயில் நீர் ஊறியது. எப்படியும் இரவு ஒரு கை பார்க்க உத்தேசம் செய்தார். இரவு ஓட்டின் சந்துகளிலிருந்து பைபாஸ் ரைடராகப் புறப்பட்டார். மிகச் சிறிய இரவு விளக்கு மட்டும் பிரகாசித்தது. மூக்கை மேலும் கீழும் ஆட்டிக் கொண்டு கீச்... கீச்... என ஹாரன் அடித்துக் கொண்டு வந்தார். பகோடா வின் வாசம் சுண்டியிழுக்க வேகமாகப் பாய்ந்தார். ஆசையோடு பகோடா வைக் கடிக்க... டப் என எலிப்பொறி மூடிக் கொண்டது. அங்குமிங்கும் ஓடியவர் ஆடிப் போனார். என்ன செய்வதென்று தெரியவில்லை. திருவிழாவில் காணாமல் போன குழந்தையைப் போல் விழித்தார்.

''நல்லா மாட்டிக்கட்டும், காலையில தண்ணீர்ல முக்கி சாகடிக்க வேண்டியாதுதான்'' பாலுவின் அப்பா உரக்கச் சொன்னார்.

''இந்த எலி பண்ணின லூட்டிக்குக் கட்டையால அடிச்சுதான் எம லோகம் அனுப்பணும்,'' இது பாலுவின் அம்மா.

இரவின் நிசப்தம், அனைவரும் தூங்கினர். எலியாரும் தப்பிக்க முயன்று சோர்ந்து போய் உறங்கத் தொடங்கினார். சாகப் போகும் பயத் தில் வேறு என்ன கனவு வரும்? எமலோகத்தில் எமதர்ம ராஜா முன்பாக எலியார் நிறுத்தப்பட்டிருந்தார்.

''என்ன சித்திரகுப்தா இந்தப் பாவக்கார எலியின் கணக்கை முடித்து விட்டாயா?'' கனைத்தார் எமதர்மர்.

''மன்னிக்கணும், மகாராஜா! இவர்களது கணக்குகள் அடங்கிய புத்தகங்களை இவர்களது சகாக்கள் கடித்துக் குதறிவிடுகின்றனர். எனவே கம்ப்யூட்டரில் பதித்துள்ளோம். ஒரு நிமிடம் என்னோட புரோகிராமர் வந்திடட்டும், பார்த்துச் சொல்லிடறேன்'' பல்லிளித்தார் சித்திரகுப்தர்.

''என்ன இவர்களுக்கு எவ்வளவு தைரியம்! நமது லோகத்துக்கு வந்து நமது கணக்குப் புத்தகங்களைக் காலி செய்கிறார்களா? இதை ஏன் என்னிடம் முன்னமே சொல்லவில்லை?'' கோபித்துக் கொண்டார் எமதர்மர்.

''மன்னருக்குக் கோபம் வேண்டாம். இதை நான் தங்களுக்குப் பலமுறை கூறிவிட்டேன்'' ஞாபகப்படுத்தினார் சித்திரகுப்தர்.

இதற்குள் டென்ஷனான எலியார் ''என்னோட கணக்கைச் சீக்கிரம் முடிங்க. நான் என்னோட சொந்தக்காரங்களைப் பார்க்க வேணாமா?'' என்றார்.

''சரி, இதோ புரோகிராமர் வந்துவிட்டார்'' என்று கூறிய சித்திரகுப்தர் எலியாரின் கணக்கைக் கேட்டார். ''எமதர்மரே இந்த எலியார் தனது வாழ்நாள் முழுக்க புண்ணியம் எதுவுமே செய்யவில்லை. பாவந்தான் செய்திருக்கிறார்'' என்றார் புரோகிராமர்.




இதைக்கேட்ட எலியார் ''எமதர்மரே, உங்க புரோகிராமர் கண்ணும் ஒரு கண்ணா. ஒழுங்காக அவரது சோடாப்புட்டிக் கண்ணாடியை எடுத்துப் போட்டுப் பார்க்கச் சொல்லுங்க. என்னோட வாழ்நாள்ல நான் எந்தப் பாவமும் செய்தவனில்லை. என்னுடைய வாழ்நாள்ல எவ்வளவு எலிகளைப் பெற்றுக் கொடுத்திருக்கிறேன் தெரியுமா? எங்கள் வம்சத்தினர் ஒரு குடும்பமா செயல்பட்டா மூன்று வருடங்களில் ரெண்டு கோடி பேரா உருவாகி விடுவோம். நாங்க இல்லைன்னா எப்படி பூனையாரும் பாம்பண்ணாச்சியும் பசியாருவாங்க?'' வாதிட்டார் எலியார்.

''என்ன சித்திரகுப்தரே! இந்தப் பொடியன் இப்படி குழப்புகிறானே'' சிந்தனையில் ஆழ்ந்தார் எமதர்மர்.

''மன்னிக்கணும் மகாராஜா, எலியார் பூனையாரும் பாம்பண்ணாச்சியும் பசியாற எலிகளைப் பெத்துக் கொடுத்திருக்கலாம். ஆனால் உலக உணவு உற்பத்தியில் 5% தானியங்களை அழிச்சுடறதாகவும் அதனால 'மனித குலத்தின் மிகப் பெரிய எதிரி' அப்படின்னும் யுனெஸ்கோ சொல்லியிருக்கு. அதனால எலியாரின் தர்க்க ரீதியான வாதத்துக்கு மயங்கிட வேண்டாம்'' என வேண்டிக் கொண்டார் சித்திரகுப்தர்.

''எமதர்மராஜா! எங்க இனம் உலக உணவு உற்பத்தியில் 5% தானியங்களை அழிக்கறது உண்மைதான். ஆனால் நாங்க சாப்பிடறது ஒரு

சதவீதம்கூட இருக்காது. எங்க சிறுநீர், மலம் கலப்பதால் தான் மீதி அழியுது. அதனால் கொஞ்சம் தண்டனையைக் குறைக்கலாம்'' என வாதாடினார் எலியார்.



இதற்குள் இடையே நுழைந்த சித்திர குப்தர் ''எமதர்மா, இவர்கள் சொல்வது நியாயமில்லை. எந்த ஒரு பொருளையும் முழுமையாகச் சாப்பிடுவதில்லை. கடித்து கடித்து துப்புகின்றனர். புத்தகம், பிளாஸ்டிக் பக்கெட், பாலிதீன் கவர் என எதையும் விடுவதில்லை. எனவே இவர்களால் நஷ்டங்கள் அதிகம். எந்த விதமான பாரபட்சமும் காட்ட வேண்டாம்'' என்றார்.

''மகாராஜா, எங்களோட பல்லின் வளர்ச்சி மிக அதிகமானது. அதவாது ஆண்டுக்கு 13 செ.மீ. வரை வளரக் கூடியது. எனவேதான் நாங்கள் எதையாவது கடித்து துப்பிக்கிட்டிருக்கோம். இதனால் எங்க பல்லோட வளர்ச்சி மட்டுப்படுது. அதனால் இந்தக் குற்றச்சாட்டையும் தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்'' மன்றாடினார் எலியார்.

விசாரணை முடிந்தது. ''இந்த எலியாரைக் கொண்டு போய் எண்ணெய் கொப்பரையில் போடுங்கள்'' என்றார் எமதர்மராஜா.

''ஆஹா! எமதர்மனின் கருணையே கருணை. நல்ல அக்மார்க் எண்ணெய்க் கொப்பரையில் போடுங்கப்பா. அதுதான் ரொம்ப நல்லாயிருக்கும்'' என்றார் எலியார்.

''என்ன கிண்டலா உனக்கு? சாதாரண எண்ணெய்க் கொப்பரையிலா, கொதிக்கும் எண்ணெய்க் கொப்பரையிலா?'' பயமுறுத்தினார் சித்திரகுப்தர்.

அதற்குள் இரண்டு கிங்கரர்கள் வந்து இழுத்துக் கொண்டு போக, திடுக்கிட்டு விழித்தார் எலியார். தான் எலிப் பொறியினுள் அகப்பட்டுக் கிடப்பதையும் கண்டது கனவென்பதையும் உணர்ந்தார். இதற்குள் பொழுது விடிந்தது. பாலுவின் அம்மாவும் அப்பாவும் வந்தனர்.

தூக்குத் தண்டனைக் கைதிபோல முடங்கிக் கிடந்தார் எலியார். விஷயம் தெரிந்த பாலு, அப்பா அம்மாவிடம் எலியாரை உயிருடன்விட மன்றாடினான். இதனால் எலியாருக்குச் சிறிது நம்பிக்கை வந்தது. பாலு எலிப் பொறியை எடுத்துக் கொண்டு வயல் வெளிக்குச் சென்றான். மெல்ல எலிப்பொறியைத் திறந்து விட்டதுதான் தாமதம், தப்பித்தோம் பிழைத்தோம் எனப் பறந்தார் எலியார்.

கலைமகளின் தலைமகள்!

இந்தியாவின் பாரம்பரியக் கலைகளுக்கு உயிர் கொடுத்தவர், ஜனாதிபதி பதவியை ஏற்க மறுத்தவர் கலாக்ஷேத்ரா ருக்மணி தேவி அருண்டேல்.

'கலைக் காவலர்', 'கலைமகளின் தலை மகள்' என்ற பட்டங்களுக்கு முற்றிலும் தகுதி யானவர் ருக்மணி தேவி. நமது நாட்டின் பாரம் பரிய, பெருமை மிக்க கலையான பரதநாட்டி யம் 'சதிராட்டம்' என்ற பெயரில் குறுநில மன்னர்கள் மற்றும்



• ருக்மணி தேவி

ஜமீன்தார்கள் ஆகியோரால் மட்டுமே ரசிக்கப்பட்டு வந்தது. கோயில் உற் சவங்களின் போதும் சதிராட்டம் ஆடப்படும். அதிலும் சமுதாயத்தில் குறிப்பிட்ட பிரிவைச் சேர்ந்த பெண்மணிகளே இந்தச் சதிராட் டத்தை ஆடிவந்தனர். ஆனால் இந்தப் பாரம் பரிய அழகியல் கலை சமுதாயத்தின் ஒட்டு மொத்தப் பிரிவினராலும், கற்றுக் கொள்ளப் பட வேண்டும், ரசிக்கப்படவேண்டும் என்று பாடுபட்டு வெற்றி பெற்றவர் ருக்மணி தேவி. கலாக்ஷேத்ரா என்னும் கலைக்கோயிலை நிர்மாணித்து, ஆடல், பாடல் என்று கலை களின் சகல பரிமாணங்களையும் இளைய தலைமுறைக்குக் கற்றுக் கொடுக்க அவர் எடுத்துக் கொண்ட முயற்சிகள் இன்று வீண் போகவில்லை. பரதநாட்டியம் என்ற பெயரில் ஒரு கௌரவமான இடத்தைப் பிடித்திருக் கிறது ஆடல் கலை.

பாரம்பரியக் கலைகளுக்கு உயிரூட்டிய பெருமை மட்டுமல்ல; ருக்மணி தேவிக்குப் பல முகங்கள் உண்டு. அவர் ஒரு கல்வியாளர்.

குழந்தைகளுக்குக் கல்வி போதிப்பதில் 'மாண்டிஸோரி' முறை என்ற அணுகுமுறை யைப் புகுத்தியவர். மேடம் மரியா மாண்டி ஸோரி அம்மையாரைச் சென்னைக்கு அழைத்து, தனது கல்விக் கூடத்தில் பொறுப் பாகப் பல வருடங்கள் இருக்கச் செய்தவர் ருக்மணி தேவி. அவர் ஒரு பிராணிகள் நலன் விரும்பி. ஒருமுறை தோட்டத்தில் நண்பர் களுடன் பேசிக் கொண்டிருந்தார் ருக்மணி தேவி. அந்த நேரத்தில் சற்றுத் தொலைவில் ஒரு பூனை அணிலைத் துரத்திச் சென்று பிடிக்க முயன்றது. அதைக் கவனித்த ருக்மணி தேவி, செடி, கொடிகளை விலக்கி விட்டு தாவிச் சென்று அந்தப் பூனையைச் செல்லமாக விரட்டியடித்தார்.

தியோசபிகல் சொசைட்டி என்னும் பிரம்ம ஞானசபையின் செயல்பாடுகளில் இவருக்கு முக்கியப் பங்கு உண்டு. இரண்டு முறை பாராளுமன்ற மேலவை உறுப்பினராகவும் இருந்திருக்கிறார். அப்போது, பிராணிகளுக் குக் கொடுமை செய்வதைத் தடுக்கும் சட்டத் தைக் கொண்டு வந்தார்.

ருக்மணி தேவியின் பிறந்த நாள் நான்கு வருடங்களுக்கு ஒரு முறைதான். ஆம்! பிப்ரவரி 29ம் தேதியன்று பிறந்தவர். இது

அவரது நூற்றாண்டு. அப்பா நீலகண்ட சாஸ்திரி கட்டடப் பொறியாளர், அம்மா ஷேசம்மா. நீலகண்ட சாஸ்திரி மிகவும் முற்போக்கான சிந்தனையாளர். அப்போது சமூகத்தில் நிலவி வந்த பால்ய விவாகத்தை எதிர்த்தவர். ருக்மணி தேவியுடன் உடன் பிறந்தோர் ஏழுபேர். பிரம்ம ஞான சபையின் செயல்பாடுகள் நீலகண்ட சாஸ்திரியை மிகவும் கவர்ந்தன. 'உண்மையை விட உயர்ந்த மதம் ஏதுமில்லை, சகோதரத்துவமே நமது அடிப்படை. அந்த நோக்கில் உயரிய ஆன்மிகத் தேடலும், தாகமும் வேண்டும்' என்ற கொள்கைகளைக் கொண்டது பிரம்ம ஞான சபை. எனவே அரசுப் பதவியில் ஓய்வு பெற்ற பிறகு சென்னைக்கு வந்து பிரம்ம ஞான சபையில் தம்மை இணைத்துக் கொண்டார். ருக்மணி தேவிக்குப் படிப்பு சென்னையில் தொடர்ந்தது. பிரம்ம ஞான சபையில் பல சிறந்த ஆங்கிலேய, இந்திய அறிஞர்கள் பணிபுரிந்து கொண்டிருந்தார்கள். அவர்களில் மிக முக்கியமானவர் டாக்டர் அன்னிபெசண்ட் அம்மையார்.



• ருக்மணி தேவியுடன் பிரபல மணிப்புரி நடனக் கலைஞர்

ருக்மணி தேவியை ஒரு சங்கீத வித்வானாகவும், சமஸ்கிருத அறிஞராகவும் உருவாக்க வேண்டுமென்பதே அப்பா நீலகண்ட சாஸ்திரியின் நோக்கமாக இருந்தது. மகா வைத்தியநாத ஐயர்தான் பாட்டு சொல்லிக் கொடுத்தார். ருக்மணி தேவி பள்ளியில் இறுதி வகுப்பு படித்துக் கொண்டிருந்த போதே அப்பா காலமாகி விட்டார். அதன் பின் தேச நல நிதிக்காக பிரம்ம ஞான சபையினரால் நடத்தப்பட்ட மாலினி என்ற நாடகத்தில் ருக்மணி தேவி முதன் முதலாக நடித்தார். மைக் இல்லாத நிலையில் கணீரென்ற அவரது குரல் ரசிகர்களைக் கட்டிப் போட்டது. பிரம்ம ஞான சபையின் செயல்பாடுகளில் முக்கியப் பங்கு கொண்டு, பெசண்ட் அம்மையாரின் அன்புக்குப் பாத்திரமாக இருந்தவர் அருண்டேல். சிறந்த கல்வியாளர். அருண்டேலுக்கும் ருக்மணி தேவிக்கும் திருமணம் நடைபெற்றது.



அருண்டேல் அவர்களுடன் பல நாடுகளுக்குப் பயணம் மேற்கொள்ளும் வாய்ப்பு கிடைத்தது ருக்மணிக்கு. அப்போது இசை – நடன குழுவை நடத்தி வந்த அன்னா பவ்லோவா என்ற

பெண்மணியைச் சந்தித்தார். அவர் மேடையில் நடத்திய அதிசயங்கள் ருக்மணியைப் பெரிதும் கவர்ந்தன. அவரது பாணியிலேயே நடனம் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற ஆசை வந்து விட்டது. அன்னா இதை வரவேற்றாலும் "ஒரு இந்தியர், இந்திய நடனங்களைக் கற்றுக் கொள்வதுதான் சிறந்தது" என்று ஆலோசனை சொன்னார். அதன்படி இந்தியா திரும்பியதும், பரத நாட்டியப்



பயிற்சியைத் துவக்கினார் ருக்மணி.

அடையாறு ஆலமரத்தின் கீழ் நடந்த அவரது அரங்கேற்றம் அனைவரையும் அசத்தியது. அவர் காட்டிய நடன முத்திரைகள் மற்றும் வெளிப்படுத்திய உணர்வுகள், ஒரு தேர்ந்த கலைஞரை நினைவூட்டின. பாடல் கலையில் தேர்ச்சி கண்டது மிகவும் கைகொடுத்தது.

அந்த அரங்கேற்றத்துக்குப் பிறகு ஆடல் கலையின் மேல் ருக்மணிக்கு இருந்த ஆர்வம் பல மடங்கு அதிகரித்தது. இந்தப் பாரம்பரியக் கலையைக் காப்பாற்ற வேண்டும் என்ற ஆசையும், ஆர்வமிருந்தும் கற்றுக் கொள்ள வாய்ப்பு இல்லாதவர்களுக்கு ஒரு தளத்தை உருவாக்கிக் கொடுக்கும் விருப்பமும் ஏற்பட்டது. நண்பர்கள் துணையுடன் 'இன்டர்நேஷனல் அகதமி ஆஃப் ஆர்ட்ஸ்' என்ற அமைப்பு உருவானது. ஆடல், பாடல் மற்றும் வாத்தியக் கலைகளைச் சொல்லித்தர மிகச் சிறந்த இசைப் பேரறிஞர்கள் வரவழைக்கப்பட்டனர்.

மெலட்டூர் பாகவத மேளா என்பது இசை, நடனம் மற்றும் நாடகம் இணைந்த ஒரு சிறந்த கலைக்காட்சி. மடிந்து சிதிலப்பட்டுக் கொண்டிருந்த அந்தக் கலைக்கு உயிரூட்டியவர் ருக்மணி தேவி. பாகவத மேளா கலைஞர்களைக் கலாக்ஷேத்ராவுக்குக் கூப்பிட்டு, இளம் தளிர்களுக்குச் சொல்லித்தர வைத்தார். அதே போல் தமிழில் நாட்டிய நாடகங்கள் என்ற புதிய வெளிப்பாட்டைக் கொண்டு வந்தவர் அவர்தான். அதற்கான கதைப் பாடல்கள் அமைப்பதோடு, இசை, மேடை அமைப்பு, லைட்டிங் என்று எல்லாவற்றையும் பார்த்துக் கொள்வார். ரசிகமணி டி.கே. சிதம்பரநாத முதலியார் அவர்களால் குற்றால குறவஞ்சி அறிமுகப்படுத்தப்பட, அதை அட்டகாசமாக நாட்டிய நாடகமாகத் தயாரித்தார்.

"மனித குல வாழ்க்கையிலும், முயற்சியிலும் கலைகளுக்கு ஒரு முக்கியப் பங்கிருக்கிறது. கலைகளின் தாக்கம் கண்ணுக்குத் தெரியாமல் மனித குலத்தை ஆன்மிகப் பாதையில் நடைபோட வைக்கிறது" என்பார் ருக்மணி தேவி. அவருக்கு எண்பது வயது நிறைந்த போது, "நீங்கள் உங்கள் சாதனைகளைச் சொன்னால் இளைய தலைமுறைக்கு ஒரு உந்து சக்தியாக இருக்கும்" என்று கேட்டார் ஒரு பத்திரிகையாளர். "எண்பது வயது ஒரு பெரிய விஷயமா? மனிதராக பிறந்த ஒவ்வொருவரும் வயதாகி வாழ்கிறார்கள். இப்போதும் பல சாதனைகளை நிகழ்த்த முடியும் என்று நினைக்கிறேன்" என்று அவருக்குப் பதில் சொன்னார் ருக்மணி தேவி. அதற்கு இரண்டு வருடங்களுக்குப் பிறகு மறைந்தார். ஆனால் கலாக்ஷேத்ரா இன்னமும் வாழும், எட்டுத் திக்கும் கலைமணம் வீசும்.

— ப்ரியன்

ஆர்.பொன்னம்மாள்



உதவிக்கு வரலாமா?

ஒரு நாள் இராமானுஜர் சீடர்களுக்குப் பாடம் நடத்திக் கொண்டிருந்தபோது, "அலங்காரப் பிரியன் வேங்கடவன். அவனுக்கு அலங்காரம் செய்யும் மலர்கள் அடிவாரத்திலிருந்து வருவதற்குள் வாடி விடுகின்றன. திருமலை மேல் ஒரு நந்தவனம் அமைத்து புஷ்ப கைங்கரியம் செய்ய யார் முன்வருகிறீர்கள்?" என்று கேட்டார்.

திருமலையில் பனி கொட்டும். 900 ஆண்டுகளுக்கு முன் பேருந்து போக்கு வரத்து கிடையாதாகையால் காடுகள் அதிகம். அதில் கொடிய விலங்குகளும் வாழ்ந்தன. திறந்த உடம்போடு வேலை செய்தால் உடல் நலம் கெட்டு இறைப்பணி தடைபடும். அத்துடன் தண்ணீர் வசதி கிடையாது என்பதால் அனைவரும் மௌனமாயிருந்தனர்.

குரு முகம் வாட அனந்தாழ்வார் எழுந்தார்.

"அப்பணியை எனக்குத் தரவேண்டும்" என்று பணிவோடு கூறினார். இராமானுஜர் சந்தோஷத்தோடு அவரைக் கட்டி அணைத்துக் கொண்டார். இதனால் அவருக்கு 'அனந்தான் பிள்ளை ஆச்சாரியார்' என்ற பெயர் ஏற்பட்டது.

"நீதானடா வீரமுள்ள ஆண்பிள்ளை" என்று புகழ்ந்தார் இரா மானுஜர். திருமலையில் ஒரு செழிப்பான இடத்தைப் பூந்தோட்டம் நிறுவ தேர்ந்தெடுத்துக் கொடுத்தார். அந்த இடத்தைச் சுற்றிப்

பாறைகளாயிருந்தன. அதனால் தண்ணீர் வசதிக்காக ஒரு ஏரி வெட்ட முடிவு செய்தார் அனந்தர்.

அனந்தருக்கு 48 வயது. அவர் மனைவிக்கு 35 வயது. அவள் ஒன்பது மாத கர்ப்பிணி. ஏரி வெட்ட ஆரம்பித்தார் அனந்தாழ்வார். வெட்டி, கூடையில் அள்ளித் தரும் மண்ணை, தூரத்தில் உள்ள பள்ளத்தில் கொட்டிவிட்டு வருவது மனைவியின் பணி. ஏறி இறங்கி நடந்து சென்றதால் அவளுக்கு மூச்சிறைத்தது. தொப்பலாய் வியர்த்து புடைவை உடம்போடு ஒட்டிக் கொண்டு நடக்கவே சிரமப்பட்டாள். ஆனாலும் புருஷன் வியர்க்க வியர்க்கப் பாடுபடும்போது நாம் சும்மா உட்கார்ந்திருப்பதா என்று எண்ணினாள்.

பதினேழு வயது வாலிபன் ஒருவன் அனந்தாழ்வாரிடம் சென்று, "ஐயா, எதற்காகப் பள்ளம் தோண்டுகிறீர்கள்?" என்று விசாரித்தான்.

"இங்கே ஒரு நந்தவனம் அமைத்து திருவேங்கடமுடையானுக்குப் புஷ்பக் கைங்கர்யம் செய்யச் சொல்லி குருநாதர் உத்தரவு. மழைக் காலத்துக்குள் ஏரி வெட்டி விட்டால் தண்ணீர்ப் பஞ்சம் இருக்காதில்லையா?" என்றார்.

"ஐயா! அந்தக் கடப்பாரையை என்னிடம் கொடுங்கள். நீங்களும், உங்கள் மனைவியும் அந்த மர நிழலில் அமர்ந்து ஒழுங்காக வேலை நடக்கிறதா என்று பாருங்கள்! நான் வலிமையுள்ள வாலிபன். சாயங்காலத்திற்குள் வேலையை முடித்துக்



காட்டுகிறேன்" என்றான்.

அனந்தாழ்வார் புன்னகையுடன், "தம்பி! நீ சொல்வதெல்லாம் சரி, கூலிக்கு ஆள் வைக்க வசதியில்லாதவன் நான்" என்றார்.

"உங்களிடம் நான் கூலி கேட்டேனா? உங்களது இறைப்பணியில் நானும் பங்கு பெறுகிறேன்" என்றான் இளைஞன்.

"எனக்குக் குருநாதர் இட்ட பணியை உன் மேல் சுமத்துவது மன சாட்சிக்குப் பொருந்தாத செயல். உன்னால் என் வேலை கெடுகிறது. தெய்வத்தொண்டு செய்ய வேண்டுமென்று நினைத்தால் சமையலில் உதவிக்குப் போ, சந்தனம் அரைத்துக் கொடு. அடிவாரத்திலிருந்து சாமான் கொண்டு வா. விறகு வெட்டித்தரலாம். செய்ய வேலையா இல்லை? உடம்பெல்லாம் நகைகள்! இடுப்பிலே மயில்கண் வேஷ்டி! வேலை செய்கிற உடம்பா இது! வசதியான வீட்டுப் பிள்ளை போல் தெரிகிறாய்! உன் பெற்றோர்கள் வந்து சண்டை பிடிப்பார்கள்! போ, அந்தண்டை" என்று விரட்டினார் அனந்தாழ்வார்.

"வயதான காலத்தில் கஷ்டப்படுகிறீர்களே என்று உதவிக்கு வந்தால் இப்படி துரத்துகிறீர்களே!" என்று வாலிபன் கடப்பாரையைப் பிடுங்க, அனந்தாழ்வார் ஆவேசத்துடன், "வல்லடி வழக்கா பண்ணுகிறாய்! ஒரே போடுதான்" என்று கடப்பாரையை ஓங்க, இளைஞன்



தலை தெறிக்க ஓடினான்.

அனந்தாழ்வாரின் மனைவி மண் கொட்டுமிடம் சென்று, "அம்மணி! அந்த மண் கூடையை இப்படி தாருங்கள்! நீங்கள் மண்ணை அள்ளிக் கொண்டு அந்த மரத்தடிக்கு வந்தால் போதும். நான் சீக்கிரம் பள்ளத்தில் மண்ணைக் கொட்டிவிட்டு, கூடையைக் கொண்டு வருகிறேன்'' என்று கூடையைப் பிடுங்கிக் கொண்டான்.

''அப்பனே! என் கணவர் உன்னை மண் வெட்டவே ஒப்புக் கொள்ளவில்லை! நான் வேலை வாங்கினால் கோபிப்பார்" என்று தயங்கினாள் அவள்.

"அவருக்கு ஏனம்மா தெரியப் போகிறது? நான்தான் மரத்தின் மறைவில் ஒளிந்து கொள்வேனே! உங்கள் சிரமம் புரியாத மனுஷர் அவர். நீங்கள் போங்கள். அவர் சந்தேகப்படப் போகிறார்" என்று கூற, அவள் கூடையுடன் நகர்ந்தாள்.

அனந்தாழ்வார் வெட்டிக் குவித்திருந்த மண் சீக்கிரமே கரைந்தது. மண் வெட்டக் காத்திருந்தாள். ''என்ன நீ! சீக்கிரம் வந்து விடுகிறாய்! பக்கத்திலேயே கொட்டி விடுகிறாயா? யாராவது சண்டைக்கு வரப் போகிறார்கள்!'' என்றார் அனந்தாழ்வார்.

"ஸ்வாமி! அப்போது ஏரி வெட்டுகிறேன் என்று வம்பு பண்ணிய பையன் பாதி வழியில் கூடையைப் பிடுங்கிக் கொண்டு போய் மண்ணைக் கொட்டி விட்டு வருகிறான்" என்று மனைவி சொல்லவும், அனந்தாழ்வார் அடங்கா சினத்துடன் மேலேறி வந்தார். மரத்தின் மறைவிலிருந்து இவரைப் பார்த்த இளைஞன்

தலை தெறிக்க ஓடினான்.

கையில் கடப்பாரையோடு அனந்தாழ்வார் துரத்தினார். பெருத்த ஏழிலைப்பாலை மரம். செழித்த கிளைகளும், இலைகளுமாய் பரந்து விரிந்திருந்த மரத்தில் ஏறி ஒளிந்து கொண்டான் வாலிபன்.

அனந்தாழ்வார் மரத்தடிக்கு வந்தார். அவரது வயது மரம் ஏற முடியாமல் தடுத்தது.

"அடேய்! மரத்திலிருந்து கீழே இறங்கு. உன் உதவி வேண்டாமென்ற பிறகும் என் மனைவிக்கு நீ ஒத்தாசை செய்திருக்கிறாய்! இதில் ஏதோ உள் நோக்கம் இருப்பதாக

வீடுகளில், எலிகளின் தொல்லையால் நாம் படும்பாடு கொஞ்சநஞ்சமல்ல. வீட்டுக்கு மட்டுமின்றி நாட்டுக்கும் பெரும் நஷ்டத்தை ஏற்படுத்துபவை, இந்த எலிகள். தென் கிழக்கு ஆசிய நாடுகளில் சுமார் 200 வகையான எலிகள் உள்ளன. அவற்றால் சுமார் 400 லட்சம் டன் உணவு தானியங்கள் அழிக்கப்படுகின்றன!

உலகம் முழுவதும் சுமார் 1700 வகையான எலிகள் உள்ளன. சராசரியாக ஆண்டுக்கு ஒரு எலி 600 குட்டிகள் வரை போடுமாம்! எலியை உலகிலிருந்து முழுமையாக அழிப்பது இயலாத காரியமாகவே தோன்றுகிறது!

— மார்க்கண்டன்

நான் எண்ணுகிறேன். உன்னை விட மாட்டேன்" என்று கூச்சலிட்டார் அனந்தர்.

"சரி, நான் மரத்திலிருந்து கீழே இறங்குகிறேன். ஆனால் என்னை ஒன்றும் செய்ய மாட்டேன் என்று வாக்களிக்க வேண்டும். அது மட்டும் போதாது. மரத்திலிருந்து பன்னிரண்டு அடி தள்ளி நிற்க வேண்டும். அதற்குப் பரிசாக இந்த மயில் கண் பட்டு வேஷ்டியையும், இந்த வைர மோதிரத்தையும், மகர குண்டலங்களையும் தருகிறேன்" என்றான் கிளை மறைவிலிருந்த வாலிபன்.

அனந்தாழ்வார் இளைஞன் கேட்டபடி வாக்களித்து பன்னிரண்டு அடி தள்ளி

வயல் வெள்ளை, விதை கறுப்பு; கையால விதைக்க, வாயாலே அறுவடை — அது என்ன?
விடை: புத்தகம்

நின்றார். மரத்திலிருந்து சரசரவென்று இறங்கிய வாலிபன் ஆறடி உயரம் வந்ததும் தொப்பென்று குதித்து ஓடத் தொடங்கினான். அனந்தாழ்வார் கோபத்தோடு துரத்தினார்.

இடைவெளி அதிமாகிக் கொண்டு வரவே ஆத்திரத்தோடு கடப்பாரையை வீச, அது இளைஞன் முகத்தைத் தாக்கியது. சரேலென்று இளைஞன் கோவிலுக்குள் புகுந்து கொண்டு, கதவைச் சார்த்தித் தாளிட்டான். அனந்தாழ்வார் கோபத்தோடு படியிலேயே உட்கார்ந்திருந்தார்.



மாலை நேரம் வந்தது. அர்ச்சகர்கள் வந்தனர். நடந்த விஷயங்களை அனந்தாழ்வார் கூற, "குழந்தாய்! கதவைத் திற. பெருமாளுக்கு ஆராதனை செய்ய வேண்டும். காலம் தப்பினால் ராஜ தண்டனை கிடைக்கும். ஊருக்குக் கேடு வரும்" என்றார் ஒரு வயோதிக அர்ச்சகர். 'தடால்' என்று கதவு திறந்தது. கூடி நின்ற பக்தர்கள் அனந்தாழ்வாரோடு கோவிலெங்கும் வாலிபனைத் தேடினர்.

சன்னதி திறக்கப்பட்டது. சன்னதிக்கு வந்த அனந்தாழ்வார், "என்ன அநியாயம்! பெருமாள் முகத்தில் ரத்தம் வழிந்து பட்டு வேஷ்டியை நனைக்கிறதே" என்று அலறினார்.

அர்ச்சகர்களும், பக்தர்களும் பதறினர்.

அப்போது பெருமாளிடமிருந்து, "அனந்தா! நீயும், உன் மனைவியும் படும் சிரமம் என்னை வருத்தியது. உதவி செய்யவே வந்தேன். நீ என்னை நம்பாமல் கடப்பாரையை வீசி ஏற்படுத்திய காயம்தான் இது" என்று குரல் வந்தது.

அனந்தாழ்வார் திருமால் ஒளிந்த ஏழிலைப்பாலை மரத்துக்கு ஓடினார். அதன் காய்களைப் பறித்து வந்தார். பஞ்சுபோன்ற அந்தக் காயினால் உதிரத்தைத் துடைத்துக் கொண்டே,

"ஏழுமலையானே! வந்தது நீயென்று அறியாத பாவியானேனே! இந்தக் கைதானே கடப்பாரையை எறிந்தது" என்று தரையில் கையை அறைந்து கொண்டு அழுதார்.

ஏழிலைப்பாலைக் காய்கள் உதிரப் போக்கைத் தடுத்து நிறுத்தும் சக்தி வாய்ந்தவை. வேங்கடவன் முகத்திலிருந்து இரத்தம் வழிவது நின்றது. துடைத்துக் கொண்டிருந்த அனந்தாழ்வாரின் கைகளில் திருமாலின் மகர குண்டலங்களும், மோதிரமும் கழன்று விழுந்தன. இடுப்பிலிருந்த பட்டு வேஷ்டியும் நழுவி விழுந்தது.

"இவற்றை நான் அனந்தனுக்கு அளிப்பதாக வாக்குக் கொடுத்திருக்கிறேன்" என்று அசரீரி ஒலித்தது. அனந்தாழ்வார் பயபக்தியோடு அவற்றை எடுத்து மார்போடு அணைத்துக் கொண்டார்.

அனந்தாழ்வார் நிறுவிய நந்தவனம் 'இராமானுஜம்' என்ற பெயரில் இன்றும் திருமலையில் புஷ்ப சேவை செய்து கொண்டு வருகிறது.


இரவில் கிடைப்பது; இரவல் கிடைக்காதது – அது என்ன?



மசாலா

மின்மினி

மின்மினிப் பூச்சிகளில் 10,000 பூச்சிகள் ஒரே இடத்தில் இருந்தால் 40 வாட்ஸ் பல்பு எரியும்போது எவ்வளவு வெளிச்சம் கிடைக்குமோ அவ்வளவு வெளிச்சம் கிடைக்கும். மின்மினிப் பூச்சிகளில் ஆண் பூச்சிகளுக்கு மட்டுமே இந்த ஒளிரும் உடம்பு உண்டு. இப்பூச்சிகளின் உடம்பில் கொஞ்சம் அதிகப்படி பாஸ்பரஸும், பாதரசமும் கலந்திருப்பதுதான் இந்த ஒளிரும் தன்மைக்குக் காரணம்.



வல - இட பக்கங்கள்

புத்தகத்தின் வலப் பக்கமுள்ள பக்கங்களுக்கு ரெக்டோ என்று பெயர். இடது பக்கமுள்ள பக்கங்களுக்கு வெர்சோ என்று பெயர்.

உருவானது எப்படி?

இருதயத் துடிப்பை அறிய உதவும் ஸ்டெதஸ்கோப் என்னும் கருவியைக் கண்டுபிடித்தவர் ரெனே லேனக் என்ற ஃபிரஞ்சுக்காரர். 1814ல் சிறுவர்கள் விளையாட்டினைக் கூர்ந்து பார்த்து இக்கருவியைக் கண்டுபிடித்தார். சிறுவன் ஒருவன் பலகையைக் கம்பினால் தட்டினான். மற்றொரு சிறுவன் ஒரு தாளைக் குழாய் போல் சுருட்டி பலகையில் வைத்து காதால் உற்றுக் கேட்டான். சிறுவர்களின் இந்த விளையாட்டு ஸ்டெதஸ்கோப் கண்டுபிடிக்க உதவியது.

- யு.ஏ.ஞானகுரு, மடுகரை




சிலந்தி

சராசரியாக அரை மில்லியன் சிலந்திகள் ஒரு ஏக்கர் நிலப்பரப்பில் இருந்து வலைபின்னுமானால் அந்த இழைகளின் நீளம் உலகை ஒரு சுற்றுச் சுற்றிவரக் கூடிய அளவு இருக்கும். (ஒரு நாளைக்கு நூற்பது மட்டும்). அதுவே பத்து நாட்களுக்கு நூற்கும் இழையின் நீளம் நிலவைத் தொட்டு விடும் தூரத்துக்குச்

பாப்கார்ன்





சமமாக இருக்கும்!

- விஜி,
சென்னை

நிறம்

வண்டுகள் நீலம் மற்றும் சிவப்பு வண்ண மலர்களைத்தான் அதிகம் நாடுகின்றன.

வண்ணத்துப் பூச்சிகளுக்கு வெள்ளை, சிவப்பு ஆகிய வண்ணம் கொண்ட மலர்களென்றால் அதிக விருப்பம்.

ஈக்களோ அதிகமான வாசனை கொண்ட ப்ரௌன் வண்ண மலர்களில்தான் பெரும்பாலும் காணப்படும்.

எதிரொலிப் பாலம்

மஸாசெட்ஸில் நியூடன் அப்பர் ஃபால்ஸ் என்ற கால்வாயின்மீது ஒரு பாலம் உள்ளது. அதனை எதிரொலிப் பாலம் என்பார்கள்.

இந்தப் பாலத்தின் கீழ் நின்று கொண்டு ஒரு முறை கூவினால் அது ஒரு முறையல்ல, இரண்டு முறையல்ல, பதினேழு முறைகள் தொடர்ந்து எதிரொலியை



எழுப்புகிறது. இது ஆச்சரியமாக உள்ளதால் அங்கே எப்போதும் கூவுவதற்குக் கூட்டம் நிரம்பி வழிகிறது.

- எஸ்.மோகன்ராஜ், சீர்காழி

பிரமிடு

பாரோஹ் - இவர்தான் எகிப்து பிரமிடுகள் தோன்றக் காரணமாக இருந்தவர். இவர் எகிப்து அரசராக இருந்தபோது தங்களின் தெய்வமான ஒசிரிஸ், பிறக்கிறவர்களையும், இறக்கிறவர்களையும் காக்கும்




என நம்பினார். அதன்படி அவர் இறந்ததும் அவர் விரும்பியபடி கடவுளிடம் ஒப்படைப்பதற்காக அழகிய சமாதி ஒன்றை எழுப்பினார்கள். இதுதான் முதல் பிரமிடு. தொடர்ந்து இப்படி அழகாகக் கலை நயத்துடன் எழுப்பப்பட்ட சமாதிகளே இன்று பிரமிடுகளாகப் பெரும்புகழுடன் திகழ்கின்றன.

கொட்டாத தேனி

தேனீக்கள் சேர்க்கும் தேன் அனைத்துமே இனிக்கும் என்று நினைக்க வேண்டாம். சில வகைத் தேனீக்கள் சேர்க்கும் தேன் உப்புக் கரிக்கும். பிரேசில் நாட்டில் கோயாஸ் மாநிலத்தில் இத்தகைய தேனீக்கள் ஏராளமாக இருக்கின்றன. இவை உப்புச் சுவையுடைய தேனையே சேகரிக்கின்றன. உப்புத் தேனைச் சேகரிக்கும் தேனியிடம் பயமின்றி நெருங்கலாம். இந்தத் தேனி யாரையும் கொட்டுவதில்லை.

- என். ஜரினா பானு, திருபட்டினம்



ஒருவகைத் தவளை நிறத்தை மட்டுமல்ல தன் உருவத்தையே மாற்றிக் கொள்கிறது. இவற்றின் முதுகில் வெள்ளி போன்ற பளபளப்பான வெந்நிறப்பட்டை விழுந்திருக்கும். அப்பட்டை அவற்றின் பின்னங் கால்களிலும் காணப்படுகிறது. இந்தப் பட்டைகளை எதிரிகள் தென்படும்போது விதவிதமாக மாற்றி அதன்மூலம் தன் உருவத்தையே அடிக்கடி மாற்றிக் கொள்கிறது. அந்த உருவத்தைக் கண்டு அவற்றின் எதிரிகள் குழப்பமடைந்து நிற்கும் போது தவளை, தப்பியோடி விடுகிறது.

- சு.விக்னேஷ், தூத்துக்குடி

திருக்குறள்

திருக்குறளில் இடம் பெறும் மலர்கள் இரண்டே இரண்டு. அவை அனிச்ச மலர், தவளை மலர். திருக்குறளில் இடம் பெறும் ஒரே பழம் நெருஞ்சிப்பழம். மரங்கள் : பனை, மூங்கில். விதை : குன்றிமணி. திருக்குறளில் வள்ளுவர் பயன்படுத்தாத உயிரெழுத்து 'ஔ' ஆகும்.

- நெ.இராமன், சென்னை

நிறமாற்றம்

கிழக்கு ஆப்ரிக்காவில் வாழும்




விசிறி

விசிறி, பல நாடுகளில் பல விதங்களில் பயன்படுத்தப்படுகிறது. ஜப்பானில் விசிறியைப் பல சடங்குகளில் பயன்படுத்துகின்றனர். ஒருவன் வாலிபன் ஆனதும் அவனுக்கு ஒரு விசிறி பரிசளிப்பது இவர்கள் வழக்கம். குற்றவாளி தூக்கு மேடை ஏறும்போது கையில் விசிறி இருக்கும். எகிப்தியரின் மதச் சடங்குகளிலும் விசிறி உண்டு. கி.மு. 600 முதலே கிரேக்க நாட்டில் விசிறி பயன்படுத்தப்பட்டு வந்தது. ரோமானிய மணப் பெண், மணக் கோலத்தில் வரும்போது ஒரு வகை விசிறி வைத்திருக்கும் வழக்கம் இன்னும் உண்டு. கிறிஸ்துவ ஆலயங்களில் வெள்ளியில் செய்யப்பட்ட விசிறிகள் பயன்படுத்தப் பட்டுள்ளன.

நம் நாட்டில் வெய்யில் காலத்தில் கைகளில் நிச்சயம் விசிறி இருக்கும். இன்றும் கிராமங்களில் விறகு அடுப்பு பயன்படுத்துவோருக்கு, விசிறுவதற்கு விசிறி தேவை. கோடை காலத்தில் நீர் மோர், பானகம் போன்றவற்றோடு விசிறியையும் தானமாக அளிப்பது தென்னிந்தியாவில் வழக்கம். பர்மாவில் அழகழகான விசிறிகளோடு நடனம் ஆடுவது உண்டு.

- எஸ்.ராஜம், கரூர்.



உழக்கையும் ஆழாக்கையும் வறுத்தவர்!

"அண்ணாச்சி, எனக்கு ஆயிரம் ரூபாய் கடனாகத் தந்து உதவ வேண்டும்" என்று பணிவோடு விண்ணப்பித்தான் குப்பன்.


"மாசா மாசம் வட்டியை ஒழுங்காகக் கட்டிவிட வேண்டும். இல்லையேல் நான் பொல்லாதவனாக இருப்பேன்" என்று எச்சரித்தபடியே, இன்னதேதியில் இன்னாருக்கு இவ்வளவு தொகை கடனாகக் கொடுக்கிறேன், மாசம் இவ்வளவு வட்டி என்று எழுதி, அதில் கையெழுத்து வாங்கிக் கொண்டு, ஆயிரம் ரூபாய் கொடுத்தார் லேவா தேவி தொழில் நடத்தும் வரதப்பன்.

முதல் இரண்டு மாதங்கள் வட்டியை ஒழுங்காகக் கொடுத்தான் குப்பன். அதன்பின் பண்டிகை வந்தது. விருந்தாளிகள் வந்தனர். மனைவிக்கு உடம்பு சரியில்லாமல் போயிற்று. வரதப்பன் வட்டி வசூலிக்க வரும்போதெல்லாம் ஏதாவது சாக்குச் சொல்லி அனுப்பி வைத்தான் குப்பன். மூன்று மாத வட்டி மொத்தமாகக் குப்பனைப் பயமுறுத்தியது.

"அறுவடை முடிந்ததும் தந்து விடுகிறேன்" என்று உறுதி அளித்தான். அறுவடை சமயம் மழை பொய்த்ததால், பாதி விளைச்சலே தேறியது. கிடைத்த நெல் சாப்பாட்டுக்கே போதாது!

வரதப்பனை ஏமாற்ற திட்டம் போட்டான் குப்பன்.

நாலாவது மாதம். வரதப்பன் வந்ததும், "நாளைக் காலையில் களத்து மேட்டுக்குப் பத்திரத்தோடு வாருங்கள். தாமோதரனிடம் நிலத்தை அடமானம் வைத்திருக்கிறேன். அவன் நாளைக் காலையில் களத்து மேட்டில் வைத்து பணம் கொடுப்பதாகச் சொல்லி இருக்கிறான். என்கிட்டே இருந்தால் செலவழிந்து விடுகிறது. உடனே கைமாற்றி விடுகிறேன்" என்றான் குப்பன்.



• தாய்லாந்தில் வசிக்கும் ஒருவகை வெளவால்கள்தாம் பாலூட்டி விலங்குகளில் மிகச் சிறியது. இதன் எடை பத்துப்பைசாவின் எடை தான்.

— ராவியாகனி

வரதப்பனும் அதை நம்பி அதிகாலையிலேயே களத்து மேட்டுக்குப் பத்திரத்தோடு போனார். குப்பன் சுள்ளிகளைப் போட்டுக் குளிர் காய்ந்து கொண்டிருந்தான்.

"குப்பா! தாமோதரன் வந்து விட்டுப் போய் விட்டானா?" என்று பரபரப்பாகக் கேட்டார் வரதப்பன்.

"இல்லை. வருகிற நேரம்தான். பத்திரம் கொண்டு வந்தீர்களா?" என்று கேட்டான் குப்பன்.

"எடுத்து வந்திருக்கிறேன்" என்று மடியிலிருந்து எடுத்துக் காட்டினார் வரதப்பன்.

"இப்படி கொடுங்கள். என்னுடையது தானா என்று பார்க்கிறேன்" என்றவன், வாங்கிப் பிரித்துப் படித்தான். பிறகு சடாரென்று நெருப்பில் போட்டு விட்டான். காகிதம் எரிந்து விட்டது.

தூரத்தில் குப்பனின் சினேகிதன் தாமோதரன் வந்து கொண்டிருப்பதைப் பார்த்தார் வரதப்பன். அவன் அருகில் வந்ததும் "அடமானப் பணத்தில் ஆயிரத்தை என்னிடம் கொடு. பத்திரத்தைக் குப்பனிடம் கொடுத்துவிட்டேன்" என்று அவசரமாய் சொன்னார் வரதப்பன்.

தாமோதரன் விழித்தான்.

"குப்பா! வரதப்பன் என்ன சொல்கிறார்? அடமானப் பணமா?" என்று கேட்க, குப்பன், "பாவம், வரதப்பனை யாரோ ஏமாற்றி விட்டார்கள் போலிருக்கிறது. வந்ததிலிருந்து இப்படித்தான் முன்னுக்குப் பின் முரணாகப் பேசுகிறார்" என்று எழுந்தான்.

வயல் வேலைக்கு வந்தவர்கள் வேடிக்கை பார்த்தார்கள். யார் சொல்வது நிஜம் என்று தெரியவில்லை!

வரதப்பன் பஞ்சாயத்துத் தலைவரிடம் முறையிட்டார். பஞ்சாயத்துத் தலைவர் மிகவும் நல்லவர். நேர்மையாக வழக்கை விசாரித்து தீர்ப்பு சொல்பவர். அவருக்கு வரதப்பனைப் பற்றி நன்றாகத் தெரியும். வரதப்பனின் காதில் ஏதோ கிசுகிசுத்தார்.

மறுநாள் பஞ்சாயத்து கூடியது.

குப்பன் வரவழைக்கப்பட்டான். வரதப்பன் மூன்று கற்களைக் கொண்டு அடுப்பு உண்டாக்கி, சுள்ளிகளால் தீமூட்டி அடுப்பில் பெரிய வாணலியைப் போட்டு, பழைய காசுகள், ஆழாக்கு, உழக்கு, 25,50 கிராம் எடைக்கல் எல்லாவற்றையும் போட்டு வறுத்துக் கொண்டிருந்தார்.

'ஆயிரம் ரூபாயை வட்டியோடு இழந்ததற்கே வரதப்பனுக்குப் பைத்தியம் பிடித்து விட்டது. இனி அந்தப் பணத்தை யார் கேட்கப் போகிறார்கள்? நம்ம பாடு யோகம்தான்! பைத்தியத்தின் பேச்சு செல்லுபடியாகாது', என்று மனதுக்குள் மகிழ்ந்தான் குப்பன்.

"வரதப்பனிடம் ஆயிரம் ரூபாய் வாங்கியதுண்டா? நாலு மாதமாக வட்டி தரவில்லையா?" என்று விசாரித்தார் தலைவர்.

"ஐயா! பைத்தியத்தின் வார்த்தையை நம்பலாமா? நான் கடன் வாங்கவே இல்லை"

என்று வினயமாகக் கூறினான் குப்பன்.

"வரதப்பன், அப்புறம் வறுக்கலாம். கடன் கொடுத்ததற்கு சாட்சி இருக்கிறதா?" என்று கேட்டார் பஞ்சாயத்துத் தலைவர்.

"வரதப்பன் எழுந்து நின்று, "உழக்கு தீய்ந்து விடும். எல்லாவற்றையும் நன்றாகப் பொரித்து எடுத்து விட்டால் கெடாமல் இருக்குமில்லையா? சரி, உங்கள் கேள்விக்குப் பதில் சொல்கிறேன். சாட்சிப் பத்திரத்தைக் குப்பன் நெருப்பில் போட்டு விட்டானே" என்று அழுதார் வரதப்பன்.

"பைத்தியம் உளறுகிறது. என் நேரமும் உங்களின் பொன்னான காலமும் வீணாகிறது" என்றான் குப்பன்.

"வரதப்பன், சாட்சிப் பத்திரம் எத்தனை பெரிசு?" என்று கேட்டார் பஞ்சாயத்துத் தலைவர்.

"பத்திரம் மூணடி, இரண்டங்குலம்" என்று இரண்டு கைகளையும் அகல விரித்தார் வரதப்பன்.

குப்பன் ஏளனமாய் சிரித்தபடி, "ஒரு சாண் அளவு உள்ள காகிதத்தை மூணடி என்று சொல்கிற இவர் மூளையைப் பொருட்காட்சியில் தான் வைக்க வேண்டும்" என்றான்.

தலைவர், "சபாஷ்! வரதப்பன் மூளையை அப்புறமாய் எங்கு வைக்கிறதென்று தீர்மானிக்கலாம். நிலத்தை விற்று அசலையும், வட்டியையும் ஒருவாரத்தில் பஞ்சாயத்தார் முன்னிலையில் வரதப்பனுக்குக் கொடுக்க வேண்டும். ஏமாற்றியதற்குத் தண்டனையாகப் பஞ்சாயத்துக்கு நூறு ரூபாய் அபராதம் செலுத்த வேண்டும். வரதப்பா! அடுப்பை அணைத்து விட்டு உழக்கு, ஆழாக்கு, எடைக்கல்லோடு வீட்டுக்குப் போங்கள்! வரதப்பனின் பத்திரக் காகிதத்தின் அளவு ஒரு சாண் என்பது ஊருக்கே தெரியும். இனியாவது எவரையும் முட்டாளாக்கத் திட்டமிடாதே" என்றபடி தலைவர் எழுந்து செல்ல, குப்பன் அவமானத்தில் தலை குனிந்தான்!





உயிரினங்களின் சீனியர்!

நள்ளிரவு எழுந்து விளக்கைப் போடுங்கள். இருட்டில் சுதந்திரமாக உலவிக் கொண்டிருந்த கரப்பான் பூச்சிகள் வெளிச்சத்தைக் கண்டதும் ஓடி ஒளிந்து கொள்வதை நாம் சர்வ சாதாரணமாகப் பார்க்கலாம்.

கரப்பான்களை ஒழிக்க எத்தனையோ மருந்துகள், மாத்திரைகளை மனிதன் கண்டுபிடித்தாலும், முற்றிலும் ஒழித்து விட முடியாதபடி எலியைப் போலவே, இதுவும் பெரிய சவாலாக விளங்குகிறது.

பூமியில் உண்டான உயிர்களில் ஜூனியரான மனிதன், சீனியரான கரப்பான் பூச்சிகளை அழிப்பது என்பது அவ்வளவு சுலபமல்ல. கிட்டத்தட்ட 350 மிலியன் ஆண்டுகளுக்கு முன் தோன்றிய உயிரினம் கரப்பான்தான்! கரப்பான் தோன்றி, பல மிலியன் ஆண்டுகளுக்குப் பிறகுதான் டைனோசர்கள் தோன்றின. பூமியில் தோன்றிய மனிதன் உட்பட, ஒவ்வொரு உயிரினமும், பரிணாம வளர்ச்சி பெற்று எவ்வளவோ மாறுதல்களை அடைந்துவிட்டன. ஆனால் கரப்பான்கள் மட்டும் 350 மிலியன் ஆண்டுகளாக எந்த வித மாற்றமும் இன்றி உலகில் பவனி வருகின்றன.

இது ஆர்த்தோபோடோ எனும் பிரிவில், இன்செக்டா வகுப்பில் வரும் உயிரினம். இதன் அறிவியல் பெயர் பெரிபிளனேட்டா அமெரிக்கானா.

கரப்பான் இரவில் உலவும் பூச்சி. வெளிச்சம் என்றால் இவற்றிற்குப் பிடிக்காது. எனவே பகலில் தேவையற்ற சாமான்களுக்கு அடியில், புத்தக அலமாரிக்குள், பழைய பெட்டி, பாறை இடுக்கு,



எஸ். சுஜாதா



மரப் பட்டைக்கு அடியில் என ஒளிந்து கொள்கின்றன.

காகிதம், துணி, தோல் பொருட்கள், இறந்த பூச்சிகள் என எல்லாவற்றையும் அரித்துத் தின்று விடுகின்றன கரப்பான்கள். இவற்றின் வாழ்க்கையில் 'இது பிடிக்காது, அது பிடிக்காது' என்ற விஷயங்களே கிடையாது. சர்வ பட்சணி! ஒன்றும் கிடைக்கவில்லை என்றால் மரக்கட்டையைக் கூடச் சுரண்டித் தின்னும். இதன் உணவுப் பாதையில் எதையும் ஜீரணம் செய்யும் 'என்சைம்' திரவம் சுரக்கிறது.

இவை உண்டு பாழாக்குவதைவிட எச்சமிட்டு அழுக்காக்கிப் பாழாக்குவது அதிகம். இவற்றில் சில இனங்களுக்கு அருவருப்பான துர்நாற்றம்கூட உண்டு. எனவே நமக்கு நோய் வரக்கூடிய அபாயம் இருக்கிறது. வீட்டைச் சுத்தமாக வைத்துக் கொண்டால், கரப்பான் பூச்சிகளிடமிருந்து தப்பித்துக் கொள்ளலாம்.

இதன் உடல் பளபளப்பாக இருக்கும். மேல் தோல் கைட்டின் என்னும் பொருளால் ஆனது. கால்கள் நீண்டு உறுதியுடன் காணப்படும். மிக விரைவாக ஓடக் கூடியவை. தலையில் இரண்டு உணர் கொம்புகள் உண்டு. உணர் கொம்புகளையும் கால்களையும் தாடையில் வைத்து அடிக்கடி சுத்தப் படுத்திக் கொள்ளும்.

ஆண் கரப்பான்களுக்கு மட்டுமே பெரிய இறக்கைகள் உள்ளன. இவற்றால் மட்டுமே பறக்க முடியும்.

பெண் கரப்பான்கள் முட்டைகளை இட்டு, அவற்றை உடல் பிசினால் ஒட்ட வைக்கின்றன. ஒரு பெண் பூச்சி தன் வாழ்நாளில் 14,15 முறை முட்டைகளை இடும்.

வாணிகப் போக்குவரத்துகளினால் உலகம் முழுவதும் கரப்பான்கள் காணப்படுகின்றன. இவற்றில் 1600 இனங்கள் உள்ளன. பழுப்பு, கறுப்பு என மங்கலான நிறங்களில் இவை காணப்படுகின்றன. வீட்டில் வசிக்கும் கரப்பான்களின் ஆயுட்காலம் 13 மாதங்கள்.

கரப்பான் பூச்சியின் உடல் தட்டையாக இருப்பதால் இண்டு இடுக்குகளில் இவற்றால் எளிதாக நுழைய முடிகிறது. எந்தச் சூழ்நிலையையும் சமாளித்து வாழக்கூடிய ஆற்றல் இவற்றிற்கு உண்டு. மனிதனை விட, பல மடங்கு ஒளிக்கதிர் வீச்சை தாங்கக்கூடிய சக்தி கரப்பான்களுக்கு இருக்கிறது.

ஹோட்டல் என்ன விலை?

வள்ளல் அழகப்பச் செட்டியார் ஒருமுறை பம்பாய் சென்றிருந்த போது, அங்கு ஒரு ஹோட்டலில் தங்க அறை



• அழகப்பச் செட்டியார்

கேட்டார். தென்னிந்தியர்களைக் கேவலமாக நினைக்கும் வட இந்திய ஹோட்டல் மானேஜர், அறைகள் இருந்தும் இல்லை என்று கூறிவிட்டார். அப்போது யதார்த்தமாக, "இங்கு எத்தனை அறைகள் உள்ளன?" என்று கேட்டார் அழகப்பச் செட்டியார். அதற்கு மானேஜர் "ஏன் ஹோட்டலை விலைக்கு வாங்கப் போகிறீர்களா?" என்று கிண்டலாகக் கேட்டார், மானேஜர். "என்ன விலை, சொல்லுங்கள்"என்று செக் புத்தகத்தைப் பிரித்தார் அழகப்பச் செட்டியார்! சிறிது நாள் கழித்து அந்த ஹோட்டலை உண்மையிலேயே விலைக்கு வாங்கிவிட்டார்!

– ரா. லாவண்யா, ஆறாம் வகுப்பு,
ஸ்ரீ சேது மாணிக்கம் உயர்நிலைப் பள்ளி, மேலச்சீத்தை
ராமநாதபுரம் மாவட்டம்.

சாகாவரம்

விஞ்ஞானக் கற்பனைகளை ஆதாரமாக வைத்து முதன் முதலில் நாவல் எழுதியவர் ஜூல்வெர்ன். இவர் எழுதிய முதல் நூலை வெளியிட எந்தப் பதிப்பகமும் முன்வரவில்லை. பதினைந்து பதிப்பகங்கள் இவர் நாவலை நிராகரித்தன. பதினாறாவது பதிப்பகம், இவர் நாவலை வெளியிட்டதும் விற்பனை அதிகமாக இருந்தது.


பிறகு உலகப் புகழ்பெற்ற எழுத்தாளராக ஆனார். இவர் எழுதிய நாவல், 'உலகைச் சுற்றி எண்பது நாட்கள்'. பின்னர் கடலுக்குள் மூழ்கிச் செல்லும் கப்பலைப் பற்றி எழுதினார். இவர் எழுதிய பின்புதான் நீர் மூழ்கிக் கப்பல் கண்டுபிடிக்கப் பட்டது.

ஃபிரெஞ்சு எழுத்தாளரான இவர் கதவைச் சாத்திக் கொண்டு மணிக் கணக்கில் யோசிப்பார். பல மணி நேரம் சிந்தித்த பின் இரண்டு வரி எழுதுவார். ஒரு நாவலை எழுதி முடிக்க, ஐந்து ஆண்டு காலம் எடுத்துக் கொள்வார். ஃபிரெஞ்சு இலக்கியத்தில் இவருடைய படைப்புகள் சாகாவரம் பெற்றவையாக உள்ளன.

– ஏ.எல். பாத்திமா,
காரைக்கால்

நல்ல பிரஜை

புகழ் பெற்ற தத்துவ ஞானியான சாக்ரடீஸுக்கு ஏதென்ஸ் நகர நீதிமன்றம் மரண தண்டனை விதித்தது. முந்தைய நாள் அவரது சீடர்கள் அவரைச் சிறையில் சந்தித்து, அவ



• சாக்ரடீஸ்

ரைத் தப்பியோடும்படி கேட்டுக் கொண்டு, அதற்கான வழியையும் காட்டினர்.

உடனே அவர், "நாட்டின் சட்டத்தை மதித்து செயல்பட வேண்டுமென்பதில் நான் முழு நம்பிக்கை கொண்டவன். அவ்வாறு மதித்தால்தான் ஒரு நல்ல பிரஜையாக இருக்க முடியும். நான் ஒரு நல்ல பிரஜையாகவே இருக்க விரும்புகிறேன்" என்று கூறி, தப்பிக்கும் வழியை ஏற்க மறுத்து விட்டார்.

மறுநாள் தண்டனை நிறைவேற்றப் பட்டு, அவர் உயிரை விட்டார்.

— எம். வினோத்,
சங்கரன் கோவில்

எளிமையின் சிகரம்

ஒரு சமயம் புகழ்பெற்ற நீதிபதியான மகாதேவ கோவிந்த ரானடே தம்முடைய நீதிமன்றப் பணியினை முடித்து விட்டு, வீடு திரும்பிக் கொண்டிருந்தார். பம்பாயின் உயர்நீதிமன்ற நீதிபதியாக அவர் இருந்த போதிலும் எளிமையின் இலக்கணமாகத் திகழ்ந்தார். வசதி, வாய்ப்புகள் அனைத்தும் இருந்த போதும், அவற்றை வெளிக் காட்டிக் கொள்ளாமல் வாழ்ந்தார். அவர் நடந்து வரும் வழியில் அவர் மனதை உலுக்குவதாக ஒரு காட்சி இருந்தது. ஒரு வயதான கிழவி சாலையில் கனமான விறகுச் சுமை ஒன்றினைப் போட்டு விட்டு, சாலையில் வருவோர், போவோரிடம் அதனைத் தன் தலையில் தூக்கி வைத்து உதவுமாறு கெஞ்சிக் கொண்டிருந்தாள். ஒருவரும் உதவி செய்வதாகத் தெரியவில்லை. கிழவி புலம்ப ஆரம்பித்தாள். அதற்குள் நீதிபதி அவளருகே நெருங்கி விட்டார். அவரை இன்னார் என்று அறியாத கிழவி, "ஐயா, தயவு செய்து உதவுங்கள். இந்தச் சுமையைத் தூக்கி விடுங்கள். உங்களுக்குக் கோடி புண்ணியம் கிட்டும்" என்று அவரிடமும் கெஞ்சினாள்.


உடனே நீதிபதி எதையும் யோசிக்காமல், கீழே குனிந்து அந்த விறகுச் சுமையைத் தூக்கி கிழவியின் தலைமேல் ஏற்றி விட்டார். பின்னர் அங்கிருந்து எதுவும் நடவாதது போல நடந்து சென்றார்.

— கே. சுதர்ஷன்,
தூத்துக்குடி

சுத்தம்

பல்கலைக்கழக மாணவர் விடுதிச் சமையலறைக்கு ஒரு நாள் சென்று பார்வையிட்ட துணைவேந்தர் ஜாகிர் உசேன், அங்கிருந்த ஜன்னல் கண்ணாடிகளெல்லாம் அழுக்கடைந்து, புகை படிந்து, வெளிச்சம் வருவதைத் தடுத்துக் கொண்டிருப்பதைக் கண்டார். சமையலறைப் பொறுப்பாளரிடம் ஜன்னல் கண்ணாடிகளைத் துடைத்துச் சுத்தப்படுத்தும்படி கூறினார்.


மறுநாள் அவர் அங்கே போனபோது அந்தக் கண்ணாடி




• ஜாகிர் உசேன்

ஜன்னல்கள் துடைக்கப்படாமல், அறை இருண்டு காணப்பட்டது. அதைக் கண்டதும் துணைவேந்தருக்குக் கடுங்கோபம் வந்து விட்டது. அதை அவர் வார்த்தையால் வெளிப்படுத்தவில்லை. வேகமாக அந்த அறையைவிட்டு வெளியே சென்றார். ஒரு வெள்ளைத் துணியை எடுத்துக் கொண்டு திரும்பி வந்தார். தாமே ஒரு ஜன்னல் கண்ணாடியில் தண்ணீர்விட்டு அழுத்தித் துடைத்தார். கண்ணாடி சுத்தமானதும், அறைக்குள் வெளிச்சம் பாய்ந்தது. இருள் விலகியது. எல்லோரையும் ஒருமுறை பார்த்துவிட்டுப் போய்விட்டார். அவர் போனதும் சமையலறை ஊழியர்கள் ஆளுக்கொரு துணியை எடுத்து, மீதியுள்ள ஜன்னல் கண்ணாடிகளையெல்லாம் துடைத்துச் சுத்தப்படுத்தினர்.


— ஆர். அஜிதா,
கம்பம்


அரண்மனையில் எறும்புகள்!
சந்திரகுப்த மௌரியரின் குரு, அரசியல் ஆலோசகர் சாணக்கியர். அவரது ஆலோசனையால் மகத நாட்டு அரசர் நந்தாவைத் தோற்கடித்தார் சந்திரகுப்தர். நந்தாவின் அமைச்சர் ஒருவர் சந்திரகுப்தரை நந்தாவின் அரண்மனைக்கு குடிவரச் சொன்னார்.
அமைப்பு : வேணுவாரியத்
படம் : ரெஜீவ்
நம் அரசர் விரைவில் நந்தாவின் இந்த அரண்மனைக்குக் குடியேற இருக்கிறார்.
இது வசதியாகத் தானே இருக்கிறது?
ஆமாம்.
அரண்மனை சுத்தம் செய்யப்பட்டது. அரசரின் அமைச்சர் வந்து பார்வையிட்டார்.
எல்லாம் நன்றாக இருக்கிறது.
சரி! இன்றே அரசருக்குச் செய்தி அறி விக்கிறேன்.
சந்திரகுப்தருக்குச் செய்தி தெரிவிக்கப்பட்டது.
பொறுங்கள் அரசே! நான் சென்று பார்த்து வருகிறேன்.
சரி.



சாணக்கியர் அரண்மனைக்குச் சென்று பார்வையிட்டார்.
என்ன இது! எறும்புகள் இப்படி ஊர்கின்றன?
எறும்புகள் வரிசையாகச் செல்வதை உற்று கவனித்தார் சாணக்கியர். அவர் மூளை ஏதோ விபரீதத்தை உணர்த்தியது.
எல்லா எறும்புகளும் அரிசி துகள்களை எடுத்துச் செல்கின்றனவே!
இது எப்படி சாத்தியம்? நீண்ட நாட்களாக இங்கு யாரும் வசிக்கவில்லை. பிறகு எப்படி அரிசி வந்தது?
சாணக்கியர் காவலர்களை அழைத்தார்.
சீக்கிரம் அரண்மனையைச் சுற்றிலும் நெருப்பு வையுங்கள்!
என்ன சொல்கிறீர்கள்?


காவலர்கள் அரண்மனையைச் சுற்றிலும் நெருப்பு வைத்தனர். இவ்விஷயத்தை அறிந்த சந்திரகுப்தர் அங்கு வந்து சேர்ந்தார்.
என்ன செய்கிறீர்கள்?
ஆட்சியிலிருக்கும் மன்னர்கள் எப்பொழுதும் கோபப்படக்கூடாது.
நான் எறும்புகள் வரிசையாகச் செல்வதைப் பார்த்த உடனே, எதிரிகள் இங்கே உங்களைத் தாக்க ஒளிந்து கொண்டிருப்பதை உணர்ந்து கொண்டேன். இனி பயம் இல்லை.
குருவே இந்த எளிய மனிதனை மன்னியுங்கள்.
அதன் பின்பு சாணக்கியரின் அறிவு பூர்வமான யோசனைகள் மூலம் அரசர் குலம் பலவித ஆபத்துகளில் இருந்து காப்பாற்றப்பட்டது



நேரம் வரும் காத்திரு!

1. கிரிக்கெட் போட்டி

சுற்றுச்சுவர் கூட இல்லாத, அந்தத் திறந்தவெளி மைதானம் நிரம்பி வழிந்தது. ஏகக் கூட்டம். கூட்டத்தின் அளவைத் தாண்டி ஆரவாரம். இன்னொரு பக்கம் – லவுட் ஸ்பீக்கர் அலறல். அந்தக் கால தமிழ் சினிமாவில் வரும் கோயில் திருவிழா மாதிரியிருந்தது. ஆனால் சினிமாவில் வரும் கபடிக்குப் பதில், இங்கே கிரிக்கெட்.

"இன்னும் சிறிது நேரத்தில், பொற்கேணி கிரிக்கெட் அணி பேட்டிங்கைத் தொடங்க இருப்பவர் அருண். அவருக்குத் துணையாக மறுமுனையில் மட்டை பிடிக்கப் போவது அந்த அணியின் இன்னொரு முக்கிய வீரர் வில்சன்," என்றது ஸ்பீக்கர்.

பன்னிரண்டாம் வகுப்புவரை மட்டுமே படிக்கும் பொடியன்களைக் கொண்ட இந்தப் பொற்கேணி அணி, இந்தப் போட்டியில் கலந்து கொள்வது இது பன்னிரண்டாவது முறையாம்.

சற்று நேரத்திற்கு முன் மைதானத்திற்கு வந்தவர்களின் தகவலுக்காக : "இப்போது பேட்டிங் செய்ய இருப்பது சென்னை – செங்கற்பட்டு சாலையில் உள்ள 'பொற்கேணி மெட்ரிகுலேஷன் ஹையர் செகண்டரி பள்ளி'யின் அணி. இவர்களோடு விளையாடுவது செயிண்ட் பீட்ஸ் பள்ளி அணி. டாஸில் வென்ற செயிண்ட் பீட்ஸ், 25 ஓவரில் 137 ரன்கள் எடுத்துள்ளது. அதற்குப் பதில் சொல்லும் வகையில் பொற்கேணியின் ஆட்டம் எப்படியிருக்கப் போகிறது என்பது தான் எல்லாரது எதிர்பார்ப்பும்."

ரன்னிங் கமெண்டரி தொடர்ந்து கொண்டிருந்தது.

கையில் குளுக்கோஸ் பாக்கெட்களுடன் வந்த பொற்கேணி பள்ளியின் பிரசிடி மோகன், "அருண்..., நிதானமா கவனிச்சி ஆடு! நீ அடிக்கறதுதான் ஸ்கோர். மத்தவங்களை நம்ப முடியாது! வில்சன்..., அருணுக்கு நல்ல ஸ்டாண்ட் கொடுத்து விளையாடணும், தெரியுதா? சிங்கிள்ஸ் எதையும் வேஸ்ட் பண்ணாக்

கூடாது" என்று சொல்லிக் கொண்டிருந்தார்.

இன்னொரு பக்கம் இன்னர் க்ளவுஸைத் தண்ணீரில் நனைத்து முக்கி எடுத்து அருணிடம் கொடுத்துக் கொண்டிருந்தார் பள்ளியின் பிரின்சிபால் வித்யாகர். அவரைப் பொறுத்தவரை ஒருமுறையாவது யூசிசி கப்பை வென்றுவிட வேண்டும் என்பது லட்சியம். தான், பள்ளியின் பிரின்சிபால் என்ற உணர்வே இன்றி பையன்களோடு பையனாக ஒன்றிவிட்டிருந்தார்.

கிரவுண்ட் பக்காவாகத் தயார் செய்யப்பட்டு இருந்தது. பவுண்டரி லைனுக்கெல்லாம் சுண்ணாம்பு வைத்து கோடு போட்டு, கலர் காகிதத்தில் கொடியும் நட்டு இருந்தார்கள்.

பேட்ஸ்மேனுக்குத் தேவையான அத்தனை உடுப்புகளுடன் பவுண்டரி லைனைத் தாண்டி மைதானத்துக்குள் சென்றனர் அருணும், வில்சனும். அருண் இன்னிங்ஸைத் தொடங்கினான்.

"செயின்ட் பீட்ஸ் அணியின் வேகப் பந்து வீச்சாளர் அம்ருத் முதல் பந்தை வீச வருகிறார். ம்... இதோ... வீசுகிறார். அருமையான பந்து. மிடில்... ஆஃப் ஸ்டெம்புகளை இலக்கு வைத்து வீசப்பட்ட இந்தப் பந்தை லாவகமாகத் தடுத்து ஆடுகிறார் அருண். ரன் ஏதும் இல்லை.

"பொதுவாக அருணின் மட்டையடி அந்தக் கால கவாஸ்கரை நினைவுபடுத்துவது போன்றது. இவரது லாவகமான ஆட்டம் தமிழ்நாடு — அண்டர் எய்ட்டீன் அணிக்கு இவரைத் தேர்ந்தெடுக்க உதவியாக இருக்கலாம் என்று தோன்றுகிறது. அடுத்த பந்தை வீசத் தயாராகிறார் அம்ருத்."

பொற்கேணி பள்ளியின் பிஈடி மோகன் டென்ஷனாக இருந்தார்.

"பாருங்கப்பா! இந்த வருஷமாவது ஜெயிக்கணும். இல்லாட்டி மேனேஜ்




மெண்ட்டுக்கு என்னால் பதில் சொல்ல முடியாது. கரஸ்பாண்டண்ட் கறார் பேர்வழியா இருக்கார். யூசிசி கப் போட்டியில நாம கலந்துக்கறதுக்கு ஆகுற செலவு, ஸ்டேட் லெவல்ல செலக்ட் ஆகி விளையாடற மத்த பசங்களுக்குப் பண்ற செலவைவிட அதிகம்னு சொல்றார். இந்த வருஷம் முடியவே முடியாதுன்னார். அப்புறம் பிரின்சியும் நானும் சொல்லி... போராடித்தான்... பர்மிஷன் வாங்கினோம். அதனால் இப்ப ஜெயிக்காட்டி அவ்வளவுதான். அதனால பார்த்து ஆடுங்க!"— எச்சரித்துத்தான் அவர்களை ஆட அனுப்பியிருந்தார்.

கமெண்ட்ரி தொடர்ந்து கொண்டிருந்தது. மறுபக்கம் கூட்டத்தினரின் அரட்டையும் கூடிக் கொண்டிருந்தது.

"இந்தப் பசங்க நல்லா விளையாடுவானுங்கப்பா! எப்படியாவது இந்த முறை ஃபைனல்ஸ"க்கு வந்துட்டா போதும், ஜெயிச்சுடுவானுங்க!" ரசிகர் ஒருவரின் கமெண்ட்.

"இந்த வருஷம், ஸ்ட்ராங்கான டீம் எல்லாம்

சின்னக் கொண்டைக்காரி, ஊரையே கொளுத்துவாள் — அவள் யார்?
விடை: தீக்குச்சி



இவங்க குரூப்லயே வந்துடுச்சுங்க! அதனால தான் கொஞ்சம் சஸ்பென்ஸா இருக்கு!" இன்னொரு கமெண்ட்.

பொற்கேணி அணி ரசிகர்கள் மோகனை விட ஆர்வமாக இருந்தனர்.

முதல் ஓவர் முடிந்தது. இந்நிலையில் பொற்கேணி ஸ்கோர் 12 ரன்கள். தேவையான தைவிட அதிகமான ரன்ரேட் இருந்தது. அடுத்த ஓவர் தொடங்கியது.

"..........பந்து தூக்கி அடிக்கப்பட்டுள்ளது. அவுட்டாக..... வாய்ப்பு! ஆம். அவுட். விக்கெட் கீப்பரிடம் கேட்ச் கொடுத்து அவுட்டானார் வில்சன். அவரது மட்டையில் பட்ட பந்து மேல் நோக்கிக் கிளம்ப... கீப்பர் மெள்ள நகர்ந்து அருமையாக கையுறையில் வாங்கிக் கொண்டார் அந்த கேட்சை! பொற்கேணி அணி 2வது ஓவரிலேயே 15 ரன்களுக்கு தனது முதல் விக்கெட்டை இழந்தது." வில்சன் 2 ரன்களுடன் பெவிலியன் திரும்பினான்.

"வில்சன் அவுட்டானதில் அவரது இடத்துக்குக் களம் இறங்குவது, சுரேஷ். கடந்த போட்டியில், இவர் 24 ரன்களை எடுத்திருந்தார்" வர்ணனை இப்படியாகத் தொடர்ந்தது.

''அடுத்து யாருப்பா? அருணாவது நின்னு ஆடாட்டி அவ்வளவுதான். பொற்கேணியைக் கழனில போட்டு மிதிக்க வேண்டியதுதான்" பார்வையாளர் தரப்பிலிருந்து வந்தது கமெண்ட்.

கமெண்ட்ரியில் பரபரப்பும், சத்தமும் அதிகமானது.

''நான்கு ரன்கள் கிடைக்குமா... இல்லை! பந்தைத் துரத்திக் கொண்டு ஓடுகிறார் ஃபீல்டர். தடுத்து விட்டார். ஆனாலும் ஹாஃப்வாலியில் எடுத்து கன்னத்தில் ஓங்கி அறைந்தது போன்ற இந்த அடி அருணின் விளையாட்டு நேர்த்தியை விளக்குகிறது. பவுண்ட்ரி தடுக்கப்பட்டதால் 2 ரன்கள் மட்டுமே கிடைத்தது பொற்கேணிக்கு. 32 ரன்கள்."

"எங்கடா இந்த வில்சன்?" என்றபடி வேகமாக வந்த பி.ஈ.டி. மோகன் கோபமாக வில்சனைத் தேடினார். மற்ற பையன்கள் விலசன் அமர்ந்து இருக்கும் திசையில் கைகாட்ட, அவன் மெல்ல எழுந்து தலையைக் கவிழ்த்தபடியே வந்தான்.

வெள்ளைப் பாலில் கறுப்புத்திராட்சை மிதக்குது — அது என்ன?

விடை: கண்

"உன்கிட்ட என்னடா சொன்னேன். ஒப்பனிங் போக வேணாம்டான்னு சொன்னாலும் கேட்க மாட்டேங்கிற! மீறிப் போனா, அதுக்கு ஏத்தமாதிரி கவனமா விளையாடறதில்லை. பார்ப்போம்..., இந்த மேட்ச் ஜெயிச்சா உண்டு! இல்லைன்னா உன்னை பேக் பண்ணிட்டு, அரவிந்தைத்தான் போடணும். பொறுப்பில்லாம என்னடா ஆட்டம் ஆடறீங்க!"

கத்திக் கொண்டேயிருந்தார் மோகன்.

"ட்ரிங்......ட்ரிங்......ட்ரிங்........."

போன் மணி அடித்துக் கொண்டிருந்தது.

அருணின் அம்மா சரஸ்வதி போனை எடுத்தார்.

"ஹலோ..."

"சரசு....... நான்தான் பேசறேன்!" அருணின் அப்பா பிரகாஷ் பேசினார்.

"எங்கிருந்து பேசறீங்க?"

"அருண் ஸ்கூல்ல இருந்துதான்!"

'அருணைப் பார்த்தீங்களா? எப்படியிருக்கான்? எப்படி படிக்கிறானாம்? அவன்கிட்ட போனைக் கொடுங்க!"

"இல்லைம்மா! அவன் இப்ப ஊர்லயே இல்லை. செய்யாறுல ஒரு கிரிக்கெட் மேட்ச் நடக்குதாம். அதுல இவங்க ஸ்கூல் டீமும் விளையாடுதாம். அதுக்குக் கூட்டிட்டு போயிருக்காங்களாம்."

"என்னங்க இது? எப்ப பார்த்தாலும் இந்த மேட்ச்.... அந்த டோர்ணமெண்ட்ன்னு....! எப்பவும் விளையாட்டுன்னு இவன் ஊர் சுத்திட்டு இருந்தா, எப்ப படிக்கறது? ஒழுங்கா கிளாஸ்ஸுக்குக் கூட போறதில்லை போல!"

"அதுக்கு என்ன பண்றது? நல்லா விளையாடறான். கூட்டிட்டுப் போறாங்க!"

"விளையாடிட்டே இருந்தா படிப்பு? அதுக்குத்தான் அவனை ஹாஸ்டல்ல போட வேணாம். வீட்டிலேயே இருந்து படிக்கட்டும். இங்க மெட்ராஸ்லயே ஏதாவது நல்ல ஸ்கூலா சேர்த்துடலாம்ன்னு சொல்றேன். நீங்க எங்க கேக்கறீங்க?"

"சும்மா புலம்பாதம்மா! படிப்பு முக்கியம்தான். அதுகூடவே, ஸ்போர்ட்ஸும் தேவைதான். ஒருவேளை அவன் நல்லா விளையாடி நாளைக்கு டெண்டுல்கர்.... சேவாக்.......மாதிரி வந்தா வேணாங்குதா? அப்படி வரணும்ன்னா இப்படி ட்ரெயினிங் இல்லாம எப்படி முடியும்?"

"ஆமா...! சமாதானம் சொல்ல உங்களை விட்டால் வேற ஆளே வேணாம்!"


"அதைவிடு! நான் இன்னைக்கு இங்கேயே தங்கி நாளைக்கு அருண் வந்ததும் பார்த்துட்டு வரேன். அதைச் சொல்லத்தான் ஃபோன் பண்ணேன்."

"அப்படியா.... சரி! அப்ப அந்த வில்சன், ராகவ், கரீம்.... எல்லாம் எப்படியிருக்காங்கன்னு அவங்களையும் பார்த்து விசாரிச்சிட்டு வாங்க!"

"ராகவ் விளையாடலையாம்! அவங்க மாமா முன்னாடி இங்க ஒர்க் பண்ணார் இல்லையா? அதனால, அவனுக்கு இங்க கொஞ்சம் கன்செஷன் கிடைக்குது போல இருக்கு! கூட ஆள் தேவைன்னு சொல்லி, கூட்டிட்டுப் போயிருக்காங்க போல!"

"அவங்க மாமா இப்ப அந்த ஸ்கூல்ல இல்லையா?"

"இப்ப அவர் இங்க இல்லையாம்! ப்ரொமோஷன்ல இவங்களோட இன்னொரு பிராஞ்சுக்கு வைஸ்பிரின்சிபாலா போயிட்டாராம்! சரி... அதெல்லாம் இப்ப... போன்ல



- உலகிலேயே அதிக வார்த்தைகளைக் கொண்ட புத்தகம் மகாபாரதமாகும்.
- பகவத் கீதை சுமார் 55 மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.
- பத்திரிகைகளே இல்லாத நாடு ஜாம்பியா.

— நெ. இராமன்

எதுக்கு? நேர்ல வந்து பேசறேன்."

"சரி! வேற ஒண்ணும் இல்லையே!"

"இல்லை. வெச்சுடுறேன்."

ஃபோன் கட்டானது.



மைதானத்தில் கரகோஷமும், கைத் தட்டலும் அதிகமாயிருந்தது.

"இப்ப என்ன சார் ஸ்கோர்?" என்றார் மோகன்.

"120 ரன் அடிச்சிட்டானுங்க! சமாளிச்சுடுவானுங்கப்பா...!" என்றார் பிரின்சிபால்.

"விக்கெட்....?"

"4விக்கெட்தான். அருண் ஆடிட்டு இருக்கான். அவன் மட்டும் 65ரன். கவலையை விடுங்க. ஜெயிச்சுடலாம். ஃபைனலுக்குப் போறோம்" என்றபடி சிரித்தார் பிரின்சிபால்.

"ஆடுவானுங்க சார்! நம்ம பசங்க நல்லா ஆடுவானுங்க! அவங்க மேல எனக்கு நம்பிக்கை இருக்கு" என்றார் மோகன்.

தூரத்திலிருந்து இதைக் கவனித்துக் கொண்டிருந்த பொற்கேணி டீம் மாணவர்கள் சிரித்தனர்.

"சார்..... அருண் அடிச்ச 65 ரன்ல 10 ஃபோர் சார்!" என்றபடி மோகனை நோக்கி வந்தான் வில்சன்.

"22வது ஓவர் முடிவில், பொற்கேணி 130 ரன்களை எட்டியுள்ளது. இன்னும் 8 ரன்களே பாக்கி! இன்னும் 3 ஓவர்கள் வீசப்பட வேண்டியுள்ளன. அருண் 70 ரன்கள். விவேக் 18 ரன்கள்."

லவுட் ஸ்பீக்கர் அறிவிப்பு சொன்னது.

அதுவே தொடர்ந்து, "23வது ஓவரை வீச வருகிறார் மலையப்பன். அவர் வீசும் 5வதும் கடைசி ஓவரும் இது. இந்தப் போட்டியில் ஒரு பவுலர் 5 ஓவர்கள் மட்டுமே வீச முடியும். ஏற்கெனவே வீசிய 4 ஓவர்களில் அவர் 3 விக்கெட்டுகளை எடுத்துள்ளார். கொடுத்துள்ள ரன்கள் 20. மலையப்பன் ஓவரைச் சமாளித்து ஆடியது அருண் மட்டுமே! இப்போது அவருக்குப் பந்து வீச ஓடி வருகிறார் மலையப்பன்.... சபாஷ்... அருமையான பந்து! அருணை ஏமாற்றிவிட்டு கீப்பரின் கையுறைக்குள் தஞ்சமானது பந்து. ரன் ஏதும் இல்லை"_ லவுட் ஸ்பீக்கர்.

செயிண்ட் பீட்ஸ் அணி வீரர்கள் கைதட்டி கரகோஷம் செய்தனர்.

"அடுத்த பந்து... மலையப்பன் ஓடி வருகிறார்... பந்து சற்றே முன்னதாக பிச் ஆகி... எம்பி வருகிறது. அதை 'ஹூக்' செய்ய முயல்கிறார்.... ஆனால்... பந்து தவறி தாடைக்கும், தோளுக்கும் இடையில்..... ஆ... அருண் தாடையில் பந்து தாக்கிவிட.... வலியால் துடிக்கிறார்.... வலி பொறுக்க முடியாமல் சாய்ந்த அருண் ஸ்டெம்புகளின் மீதே விழுகிறார். மற்ற வீரர்கள் அவரை நோக்கி ஓடுகிறார்கள். அவரைத் தூக்கி பக்கத்தில் படுக்க வைக்கிறார்கள்."

"ஒருத்தன் மட்டும் வாங்கப்பா..... வாட்டர் பாட்டிலை எடுத்துட்டு!" என்று பிரின்சிபால் முன்னேறினார்.


அதற்குள் 'இனி ஆட முடியாது' என்று அருண் கையாட்ட, அவனைத் தூக்கிக் கொண்டு மைதானத்தை விட்டு வெளியே வந்தனர் மற்ற வீரர்கள். அம்பயர் இருவரும், பி.ஈ.டி. மோகன் மற்றும் பிரின்சிபாலை வருமாறு கையாட்டி அழைக்க, இருவரும் வேகமாக அம்பயர்களை நோக்கி உள்ளே ஓடினர்.

(தொடரும்)


ஆழ்கடல்
46
45
44
43
சங்கிலியைப் பிடித்துக் கொண்டு 40க்குச் செல்லவும்.
25
26
27
28
29
30
24
23
22
21
20
19
18
கருத்து : எஸ்.சுஜித்குமார்
படம் : முத்து
ஆரம்பம்
1
2
3
4
5



றாக்களின் தாக்குதல்.
ண்டும் விளையாட்டைத்
துவக்கவும்.
41
40
39
38
37
புதையல்
31
32
33
34
35
36
ல் தாவரங்கள்
றுக்கிடுவதால்
6க்குத்
திரும்பவும்.
17
16
15
ஆக்டோபஸ்-
ஓர் ஆட்டம்
தவிர்க்கவும்.
14
13
12
11
10
9
முத்துச் சிப்பிகள்-
20க்குச் செல்லவும்
8
7
5



ஆப்பிள் சாப்பிட்டால் டாக்டரிடம் செல்ல வேண்டாமா?

● ப. பொன் இளங்கோ, திருவண்ணாமலை.

? அக்குபங்சர், அக்குபிரஷர் இவ்விரண்டுக்குமுள்ள வேறுபாடு என்ன, டாக்டர்?

! அக்குபங்சர், அக்குபிரஷர் இந்த இரு சிகிச்சைமுறைகளும் சீன நாட்டின் மருத்துவ முறைகளாகும். மனித உடலில் எல்லா இயக்கங்களுக்கும் அடிப்படையாக இருப்பது, உடலில் ஓடும் உயிர்சக்தி என்கிறது சீனமருத்துவம். இந்த உயிர் சக்தியில் ஏதேனும் குறைபாடுகள், மாற்றங்கள் அல்லது தேக்கங்கள் ஏற்படும்போதே உடலில் நோய்கள் உண்டாகின்றன என்றும், உயிர் சக்தியில் ஏற்படும் குறைபாட்டைச் சரி செய்தால் மட்டுமே, நோய் முழுமையாகக் குணமாகும் என்றும் சீன மருத்துவம் நம்புகிறது. இந்த உயிர்சக்தியை ஊக்குவித்து, உடல் இயக்கங்களை மேம்படுத்தி உடல் தானாகவே நோய்களைக் குணப்படுத்திக் கொள்ளச் செய்யும் மருத்துவமுறையை, 'அக்குபங்சர்' என்று அழைக்கிறார்கள். உடலில் பல இடங்களில் உயிர் சக்திக்கான புள்ளிகள் உள்ளன. இவற்றுக்கு அக்குபங்சர் புள்ளிகள் என்று பெயர். உடலில் உள்ள நோயின் தன்மைக்கு ஏற்ப அக்குபங்சர் நிபுணர் மிக மெல்லிய ஊசிகளை அப்புள்ளிகளில் செலுத்தும்போது, உயிர்சக்தி தூண்டப்படுகிறது. நோய் குணமாகிறது என்கிறார்கள். இதுபோல் அக்குபங்சர் புள்ளிகளில் கை விரல்களால் அழுத்தம் கொடுப்பதன் மூலம், நோய்களைக் குணப்படுத்தும் சிகிச்சை முறைக்கு 'அக்குபிரஷர்' என்று பெயர். நோயின் தன்மைக்கேற்ப, எந்தப் புள்ளியில், எந்த முறையில், எவ்வளவு அழுத்தம், எவ்வளவு நேரம் தரப்பட வேண்டும் என்பதை அக்குபங்சர் நிபுணர் அறிவார். அதன்படி அழுத்தம் தரும்போது பல நோய்களைக் குணப்படுத்த முடியும் என்கிறார்கள். இந்தியாவில் நடைமுறையில் உள்ள வர்மக்கலைக்கும் அக்குபங்சர், அக்குபிரஷர் ஆகியவற்றுக்கும் மிக நெருங்கியத் தொடர்பு உள்ளது என்கிறது இந்திய மருத்துவம்.

● தி. மணிமேகலை, நாகர்கோயில்

? தினமும் ஒரு ஆப்பிள் சாப்பிட்டால்

டாக்டரிடம் செல்ல வேண்டியதில்லை என்று கூறுகிறார்களே... இது உண்மையா, டாக்டர்?

! இது உண்மையில்லை, மணிமேகலை! ஆப்பிள் சாப்பிட அடம் பிடிப்பவர்களுக்காகச் சொல்லப்பட்ட ஓர் ஆங்கிலப் பழமொழி (An apple a day keeps the doctor away) இது. எல்லா நோய்களையும் தடுக்கின்ற குணம் ஆப்பிளுக்குக் கிடையாது. என்றாலும் தினமும் ஒரு ஆப்பிள் சாப்பிடுவது உடல் நலனுக்கு நல்லது. ஆப்பிளில் அதிகமாக இருப்பது நீர்ச்சத்து. அத்தோடு நார்ச்சத்து, மாவுச்சத்து, புரதச்சத்து, கொழுப்புச்சத்து, வைட்டமின் - சி, இ, பி மற்றும் சில தாதுச்சத்துகளும் உள்ளன. இதிலுள்ள 'பெக்டின்' எனும் நார்ச்சத்து ரத்தத்தில் கொலஸ்ட்ரால் அளவைக் குறைக்கும் என்பதால், இதய நோய் வராமல் தடுப்பதற்கு இது உதவுகிறது. புற்று நோய் வராமல் தடுக்கும் 'ஆன்டி - ஆக்சிடெண்ட்' எனும் சத்துப் பொருளும் ஆப்பிளில் அதிகம். மேலும்; இது மலச்சிக்கலைத் தடுக்கிறது. நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கிறது. உணவு சாப்பிட்ட பின்பு ஒரு ஆப்பிளைச் சாப்பிட்டால் பற்கள் சுத்தமாகும். குறிப்பாக, பல் இடுக்குகளில் உணவுத் துகள்கள் தங்காது. இதனால் பற்சொத்தை ஏற்படாமல் தடுக்கலாம்.



● **ம. ராஜமாணிக்கம்,**
பட்டுக்கோட்டை.


? குடை ராட்டினத்தில் சுற்றிவிட்டு இறங்கிய பிறகு எனக்குத் தலை சுற்றுகிறது. இது எதனால், டாக்டர்?

! உன் உட்காதுக்குள் மூன்று அரை வட்டக் குழல்கள் உள்ளன. அவற்றுள் 'எண்டோலிம்ப்' எனும் திரவம் உள்ளது. இந்தத் திரவத்தில் பல நுண்ணிய அணுக்கள் உள்ளன. உடல் அசையும்போது, நடக்கும்போது, வாகனங்களில் பயணம் செய்யும்போது இந்தத் திரவமும் அசையும். உடல் அசைகின்ற செய்தி திரவத்தில் உள்ள அணுக்களில் தொகுக்கப்பட்டு, செவி நரம்பு வழியாக மூளைக்குச் செல்கிறது. உடனே உடல் அசைவுகளுக்கு ஏற்ப கை, கால், தலை, தசை அசைவுகளில் மாற்றங்களை ஏற்படுத்தி, உடலை நிலை நிறுத்தவும், சமன்படுத்தவும் மூளை ஆணையிடுகிறது. பொதுவாக, உடல் அசைவுகள் மிதமான வேகத்தில் இருக்கும்போது, இந்தச் சமன்பாடு சரியாக இருக்கும். குடைராட்டினத்தில் நீ வேகமாகச் சுற்றி விட்டு இறங்கியபின், உன் உடல் அசைவுகள் நின்றாலும், காதில் அரைவட்டக் குழல்களில் திரவ அசைவுகள் சிறிது நேரத்திற்கு நீடிப்பதால், மூளையிலும், தலையிலும் அசைவுகள் தொடர்ந்து கொண்டே இருக்கும். இதனால் உனக்குத் தலைசுற்றுவது போல் தோன்றுகிறது. உனக்கு மட்டுமல்ல; பலருக்கும் இவ்வாறு தலை சுற்றுவதுண்டு.


● **இ. அருட்செல்வன்,**
சென்னை - 17.

? விரல் சூப்பும் பழக்கத்தால் தெற்றுப்பற்கள் உண்டாகுமா, டாக்டர்?

! விரல் சூப்பும் பழக்கத்தால் தெற்றுப்பற்கள் உண்டாக அதிக வாய்ப்புள்ளது. பொதுவாக இந்தப் பழக்கம் நான்கு வயதில் நின்று விடும். அதற்குப் பிறகும் இது தொடர்ந்தால் பற்களின் வளர்ச்சியைப் பாதிக்கும். இப் பழக்கத்தின் காரணமாக வெட்டுப்பற்களில் இடைவெளி ஏற்படும். அப் பற்கள் முன்னோக்கித் தள்ளப்படும். இப்போது அண்ணம் உயர்ந்து காணப்படும். கீழ்த் தாடை பின்தங்கிவிடும். இதனால் தெற்றுப் பற்கள் தோன்றும்.



காட்டில் களேபரம்!
காட்டில் ஒருநாள் வேட்டைக்காரர் ஒருவர் ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தார். அப்போது...
ஐயோ! நான் என்ன செய்வேன்? யாராவது காப்பாற்றுங்கள்.
கிர்... கிர்...
ஐயோ! அம்மா...
பயத்தில் வேட்டைக்காரர் துப்பாக்கியையும் தோட்டாக்களையும் விட்டுவிட்டு ஓடினார்.
சிறிது நேரம் கழித்து சோனு குரங்கு அந்தப் பக்கம் வந்தது.
ஹை! இது வேட்டைக்காரரின் துப்பாக்கி!
© 2001 MALAY FEATURES P.B. NO. 608 KOTTAYAM-1
ஆ! தோட்டாக்களும் கூட இருக்கே! இதை வைத்து நான் விளையாடப் போறேன்.
அதோ ஓநாய் வருது- அதைப் பயமுறுத்திப் பார்க்கலாம்.
ம்... அசையாதே! நான் உன்னைக் கொல்லப் போகிறேன்.
ஐயோ துப்பாக்கி!


உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு, சோனுவிடமிருந்து தப்பி ஓடியது ஓநாய்.
சோனுவுக்கு ஒரே உற்சாகம்! தாறு மாறாக சுட்டுத் தோட்டாக்களை வீணடித்தது. மற்ற பிராணிகள் பயந்து ஓடின.
ஏய், இந்தக் காட்டுக்கு இனி நான்தான் ராஜா.
ஓடு, ஓடு.
சோனு முன் ஒரு முயல் தைரியமாக வந்து நின்றது.
உனக்கு எவ்வளவு தைரியம்!
நான் எதுக்கு உனக்குப் பயப்படணும்?
இந்தத் துப்பாக்கிக் குத்தான்.
சோனு, துப்பாக்கியில் எத்தனை தோட்டா பாக்கி இருக்குன்னு பார்த்துட்டுத் தரேன்.
முயல் துப்பாக்கியை வாங்கியது. துப்பாக்கியில் தோட்டாக்களே இல்லை.
சோனுவுக்கு அவமானமாகிவிட்டது.
இனி இந்த மாதிரி காரியம் செய்வியா? ம்...
மன்னிச்சிடுங்க ராஜா.
மற்ற பிராணிகள் துப்பாக்கியை மண்ணுக்குள் புதைத்தன.
அப்பாடா! பிரச்னை ஓய்ந்தது.
ஆமாம்! ஆயுதங்களால் அமைதியை ஏற்படுத்த முடியாதுன்னு புரிஞ்சுக்கிட்டேன்.

மறக்க முடியவில்லை!

கூற அனைவரும் சிரித்து விட்டோம்.

— எம். வினோத்,
சங்கரன்கோவில்.

லஞ்ச்

எங்கள் அப்பாவின் அலுவலகத்தில் அவரது மேனேஜர் மதிய விருந்து கொடுத்தார். அன்று மதியம் அவர் கொண்டு போயிருந்த உணவை வீணடிக்க விரும்பாமல் இரவு



வீட்டில் வைத்து அதைச் சாப்பிட்டுக் கொண்டு இருந்தார்.


அப்போது அப்பாவின் நண்பர் வந்து என் தம்பி மனோவிடம், "உங்க அப்பா என்ன செய்யறார்?" என்று கேட்டார். "லஞ்ச் சாப்பிட்டுக்கிட்டு இருக்கார்!" என்றான் மனோ. உடனே அவர், "ராத்திரி சாப்பிடுறதை லஞ்ச்ன்னு சொல்லக் கூடாது. டின்னர்னு சொல்லணும்" என்று திருத்தினார்.

உடனே மனோ, "ஆனா எங்க அப்பா சாப்பிடுறது மதியம் கொண்டு போன சாப்பாடுதான். அது லஞ்ச்தான் அங்கிள்!" என்று

கமலா வருமா?

நானும், என் நண்பனும் பக்கத்து தெருவில் உள்ள ஒரு டெலிஃபோன் பூத்திற்குச் சென்றோம். அப்போது வேறொரு நபர் ஃபோனில், "கமலா என்னிக்கு வரும்? எத்தனை மணிக்கு வரும்...? சீக்கிரமாக காலையிலேயே அனுப்பி வை!" என்று கூறிவிட்டுக் காசைக் கொடுத்தார். நாங்கள் இருவரும், கமலா அவருடைய மனைவி போலும், ஏதோ தகராறினால் சொந்த ஊருக்குச் சென்று விட்டார், அதனால் இவர் ஃபோன் செய்து வரச் சொல்கிறார் என்று நினைத்தோம். ஆனால் கடைக்காரர் அவரிடம், "என்ன? கமலாவைக் காலையில அனுப்பறாங்களாமா?" என்று கேட்டபோது நானும் என் நண்பனும் துணுக்குற்றோம். அதன் பிறகு அவர் பழ வியாபாரி என்றும், கமலா பழத்தை ஆர்டர் செய்து வரவழைக்கத்தான்





ஃபோனில் பேசியிருக்கிறார் என்றும் புரிந்தது!

— ஜி. குப்புசாமி,
சங்கராபுரம்

ஜாலியாக...

தனியார் தொலைக்காட்சி ஒன்றில் நைலான் பாய் ஒன்றின் விளம்பரம் வெளியானது. அதில் ஒரு மந்திரவாதி பாயின் மீது அமர்ந்திருக்க, அந்தப் பாய் வானத்தில் பறந்தவாறு எல்லா இடங்களுக்கும் செல்வது போல வரும். இதைப் பார்த்துக் கொண்டிருந்த என் ஐந்து வயது தங்கை, "அக்கா, இதே போல நாமும் ஒரு பாய் வாங்கினால் ஸ்கூலுக்கு ஆட்டோவிலே இடிபட்டுப் போயிட்டு வர்றதுக்குப் பதிலா, நாம மட்டும் ஜாலியா போகலாம்ல" என்றாள்.


— ப. சௌந்தர்யா,
பிரின்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி,
மடிப்பாக்கம்.

சண்டே - மண்டே

திங்கட்கிழமை காலை பள்ளி சென்ற போது, ஒரு மாணவன் தலையில் கட்டுடன் வந்திருந்தது கண்டு அனைவரும் விசாரித்தோம். முன்தினம் ஞாயிறன்று விளையாடும் போது ஏற்பட்ட மோதலில் கீழே விழுந்து மண்டையில் காயம் என்று பதில் சொன்னான்.

சில நிமிடங்களில் வகுப்பாசிரியர் (ஆங்கிலப் பாடம் எடுப்பவரும் அவர்தான்) வந்தார். இரு பொருள்பட பேசுவதில் வல்லவரான ஆசிரியர் தலையில் கட்டுடன் வந்திருந்த மாணவனிடம்,

"மண்டேயில் என்னடா?" என்று கேட்க, ஆசிரியரின் குறும்பைப் புரிந்து கொண்டு மாணவனும் "சண்டேயில் வந்தது சார்!"




என்று பதில் சொன்னான். ஆசிரியர் உட்பட நாங்கள் அனைவரும் நெடு நேரம் ரசித்துச் சிரித்தோம்.

— வி. அஜய் ராஜா,
இராமநாதபுரம்

செம்பு

எங்கள் அத்தைப் பெண் சபிதாவை எங்கள் அப்பா பாட சம்பந்தமாகக் கேள்வி கேட்டுக் கொண்டிருந்தார். "உலோகங்களின் பெயர்களைச் சொல்லு?" என்று கேட்டார். அவள், "தங்கம், வெள்ளி, இரும்பு, ம்...ம்..." என்று மேலே சொல்லத் தெரியாமல் இழுத்துக் கொண்டிருந்தாள். நான் அவள் காதில் "செம்பு" என்று சொன்னேன். உடனே அவள் "செம்பு, தவலை, அண்டா, தட்டு, தம்ளர்" என வேகமாகவும் வரிசையாகவும் சொல்ல



ஆரம்பித்தாள். "விட்டால் வீட்டிலிருக்கும் ஒரு பொருளையும் பாக்கி வைக்க மாட்டாள்" என்று அப்பா சொல்ல, அவள் தவறை உணர்ந்து கொண்டாள்.

— எஸ். சௌம்யாயனி,
ஒன்பதாம் வகுப்பு,
புனித அலாய்சியஸ் பெண்கள்
உயர்நிலைப் பள்ளி, தூத்துக்குடி.


நவநாகரீகம்

அன்று தமிழ்ப்பாடவேளை. ஆசிரியர் 'இந்தியாவும் பண்பாடும்' என்ற பாடத்தை விரிவாக நடத்திக் கொண்டிருந்தார். திடீரென்று ஆசிரியர், என் தோழியை எழுப்பி, "நவநாகரீகம் என்றால் எதைக் குறிக்கும் தெரியுமா?" என்று கேட்டார். என் தோழியோ சட்டென்று, "ஒன்பது வகையான நாகரீகங் களைக் குறிப்பதுதான் நவநாகரீகம் சார்!" என்று சொல்லியதோடு, "ஒன்பது வகையான ரத்தினங்களைக் குறிப்பிடும் வண்ணம் 'நவரத்தினம்' என்று சொல்கிறோம் அல்லவா? அது போலவே, ஒன்பது வகையான நாகரீ கங்களைக் குறிப்பிட நவநாகரீம் என்கிறோம். மற்றொரு உதாரணம் நவதானியங்கள் சார்..." என்று சொல்லிக் கொண்டே போக... ஆசிரியர் "தயவு செய்து உட்கார்றியா?" என்றார். அவள் மன்னிப்புக் கேட்டாள்.

— ஏ.எல். பாத்திமா,
காரைக்கால்.


மார்ட்டின் தூக்கம்!

அன்று விடுமுறை. வீட்டில் அனைவரும் பக்கத்து ஊரிலுள்ள பெரியம்மா வீட்டிற்கு விருந்துக்குச் சென்றோம். சாப்பாட்டு வேளை முடிந்ததும், என் பெரியம்மா தன் பையன் மார்ட்டினைப் பற்றிய நிறை குறைகளை வெகு நேரம் பேசிக் கொண்டிருந்தார். அப்போது, "என் மகன் மார்ட்டின் இல்லாமல் நான் தூங்க



மாட்டேன். மார்ட்டின்னா எனக்கு உயிர். முதல் பிள்ளையாக மார்ட்டின் இருக்கிறதால பாசம் அதிகம்" என்று சொன்னார். உடனே என் தம்பி சரியாகக் காதில் வாங்காமல், "பெரி யம்மா!" என் அம்மாவும் நானும் கூட 'மார்ட்டின்' இல்லாமல் தூங்க மாட் டோம்" என்றான். எல்லோ ரும் விழித்தோம். பிறகு அவன் "நான் சொன் னது, 'மார்ட்டின் கொசு வர்த்தி சுருளை" என் றான்.

— ஏ.எல்.ராவியாகனி,
காரைக்கால்.




உளுந்து

மாலையில் வெளியே உலாவச் சென்ற போது சிற்றுண்டி சாப்பிட வழியில் ஒரு டிபன் சென்டருக்கு எங்களை அப்பா அழைத்துச் சென்றார். சர்வர் சூடாக பஜ்ஜியும் உளுந்து வடையும் இருப்பதாகக் கூற, அனைவரும் வடை ஆர்டர் பண்ணலாம் என்றனர். தம்பி மட்டும் பஜ்ஜி கேட்கவே, அப்பா "உளுந்தே சாப்பிடு; உடம்புக்கு நல்லது" என்றார். தம்பி "என்னால் கீழே விழுந்தெல்லாம் சாப்பிட முடியாது அப்பா, உட்கார்ந்து தான் சாப்பிட முடியும்" என்றானே பார்க்கலாம்!

— ஆர். ஜோதி,
மதுரை.

ஏன் எழுதவில்லை?

எங்கள் பள்ளி இருபாலரும் பயிலும் பள்ளி. ஒருமுறை எங்கள் ஆசிரியர் 'நான் ஆசிரியர் ஆனால்...' என்ற தலைப்பில் எல்லோரையும் கட்டுரை எழுதி எடுத்து வரச் சொன்னார். மறுநாள் நாங்கள் எல்லோரும் அவர் சொன்னபடியே கட்டுரை எழுதி விட்டோம். ஆனால் ஒரு மாணவன் மட்டும் எழுதி வரவில்லை. ஆசிரியர் அவனிடம் ஏன் எழுதி வரவில்லை என்று கேட்டார். அதற்கு அந்த



மாணவன் "சார், நேத்து நான் லேட்டு சார், அதனால் நீங்கள் கட்டுரை எழுதி வரச் சொன்னது எனக்குத் தெரியலை சார்" என்று சமாளிக்கப் பார்த்தான். உடனே ஆசிரியர், 'நீ லேட்டா, அப்படின்னா நாளைக்கு நீ, 'நான் 433 A பேருந்தானால்' என்ற தலைப்பில் கட்டுரை எழுதி வா" என்று சொல்ல வகுப்பே கொல்லென்று சிரித்தது. ஏனென்றால் 433 A என்பது எங்கள் பள்ளிக்கு வரும் பேருந்து. அது எப்பொழுதும் தாமதமாகவே வரும்.

— சு. தனலட்சுமி, மயிலாடுதுறை.

கனவில் கடவுள்!

எங்கள் வகுப்பின் கணித ஆசிரியர் நகைச்சுவை உணர்வுடையவர். மாணவர்



களுடன் சகஜமாகப் பழகும் இயல்புடையவர். அன்று காலாண்டுத் தேர்வு எழுதிய விடைத் தாள்களை எங்களுக்கு அவர் விநியோகித்துக் கொண்டிருந்தார். அப்போது ஒரு குறும்புக்கார மாணவன் எழுந்து, "சார், நேத்து என் கனவுல கடவுள் வந்தாரு, 'டேய் நீ ரொம்ப நல்ல பையன்டா. உனக்கு இந்தக் காலாண்டு பரீட்சையில 90 மார்க் கிடைக்கும். நான் சொன்னேன்னு வாத்யார்கிட்ட சொல்லு, அவரு உடனே போட்டுக் குடுத்துருவாரு'ன்னு சொன்னாரு" என்றான்.


"ஆமாம் தம்பி, வாஸ்தவம்தான். உன் கனவுல வந்த அதே கடவுள் அதுக்குப் பிறகு என் கனவுல வந்து நான் அந்தப் பையங்கிட்ட தப்பா சொல்லிட்டேன், அவனை இந்த முறை ஃபெயிலாக்கிடுங்கன்னு சொல்லிட்டுப் போயிட்டாரே!" என்று சிரித்துக் கொண்டே விடைத்தாளைக் கொடுத்தார். உண்மையிலேயே அவன் தேர்ச்சி பெறவில்லை! அவன் அமைதியாக உட்கார்ந்து விட்டான்.

— பா. முருகேசன்,
இராஜபாளையம்.

''ஏண்டா உன் கையெழுத்து இவ்வளவு மோசமா இருக்கு?''

''கோவிச்சிக்காதீங்க சார். ஒரு வேளை நான் டாக்டரா ஆகப் போறேனோ என்னவோ!''

- பா. விஜயசாரதி, திருப்பதி



என்ன வித்தியாசம்?



''என்னப்பா, ஆமை வடை கேட்டு ரொம்ப நேரமாச்சே. எப்போ குடுப்பே..?''

''கொஞ்சம் பொறுங்க... 'ஆமை வடை' மெதுவாத்தான் வரும். அவசரப்படாதீங்க...!''

- துரைமுருகேசன், காரமடை



ராமு : நம்ம கிரிக்கெட் அணி மேட்சில் ஜெயிச்சுடுச்சுன்னு எதுக்குப் பொய் சொன்னே?

சோமு : உனக்கு வந்திருந்த விக்கலை நிறுத்த ஒரு ஷாக் ட்ரீட்மெண்ட் கொடுத்தேன்.

- ஆர். தங்கராஜ், திருப்பூர்



''கம்பு சண்டைக்கும் கராத்தே சண்டைக்கும் சின்ன வித்தியாசம்தானா... எப்படி?''

''அதுலே அடிவாங்குறவங்க 'ஆ... ஊ'ன்னு கத்துவாங்க! இதுலே அடிக்கிறவங்க 'ஆ... ஊ'ன்னு கத்துவாங்க!''

- மு. நியாஸ், தஞ்சாவூர்



ஒரு சாக்லேட்டும் ஏழு முந்திரிப் பருப்புகளும்

அப்பாவுடன் அந்த மனிதர் வந்தார். புதியவர். சிவப்பாக, தூய்மை தெரியும்படியாக, வெள்ளைச்சட்டை வெள்ளைப் பாண்ட் அணிந்தவராக, படிய வாரிய தலை மினுமினுப்பவராக, தங்க ஃப்ரேம் மூக்குக் கண்ணாடி மாட்டியவராக, பாதங்களில் புத்தம் புது தோல் செருப்பு பூண்டவராக, சற்று உயரமாக அவர் காணப்பட்டார்.

இதுக்கு முன் தாரிகா அவரைப் பார்த்தது இல்லை. அப்பாவின் நண்பர்களை அவளுக்குத் தெரியும். இவர் யாரோ புது நண்பர்.

அவள் தன்னைக் கூர்ந்து பார்த்துக் கொண்டிருப்பதை அவர் உணர்ந்து கொண்டிருக்க வேண்டும். புன்னகை காட்டினார். டி.வி. விளம்பரங்களில் பற்பசைக்காகக் காட்டப்படும் புன்னகை.

"உன் பேர் தாரிகாதானே?" இனிய குரலில், தோழமை தெரியக் கேட்டார்.

இவருக்கு அவளுடைய பெயர் எப்படி தெரியும்? அப்பா சொல்லி இருப்பாரோ? அப்பாவைப் பார்த்தாள்.

"அண்ணா ஸ்ரீராம் எங்கே?"

அட, அண்ணாவின் பெயரையும் தெரிந்து வைத்திருக்கிறாரே!

அப்பா சிரித்தார்.

"மாடி அறையிலே அவன் வீட்டுப் பாடம் எழுதிக் கொண்டு இருக்கான்."

வீட்டினுள்ளிருந்து அம்மா வந்தார்.

"வணக்கம், சகோதரி சாருமதி! நலமாக இருக்கிறீர்கள் அல்லவா?"

திடுக்கிட்ட அம்மா, கைகளைக் கூப்பியபடி, அப்பாவைப் பார்த்தார்.

அப்பா சிரித்தார்.

"உங்கள் பெயர் எனக்கு எப்படி தெரிந்தது என்று நினைக்கிறீர்கள்,

இல்லையா?"

வியப்புடன் அவரை அம்மா பார்த்தார்.

"உங்கள் கணவர் சீதாராமன் சொல்லவில்லை."

"பின்னே...?" முகத்தில் வியப்பு உணர்வு மாறாமல் அம்மா கேட்டார்.

''இந்த உலகத்தில் இன்று வாழ்ந்து கொண்டிருக்கும் அத்தனை பேருடைய பெயர்களையும் நான் அறிவேன். முகத்தைப் பார்த்து, புகைப்படத்தைப் பார்த்துப் பெயர் சொல்வேன். இயல்பாக என்னிடம் இருக்கும் ஆன்மீக சக்தி இது."

அவரும் அப்பாவும் சோஃபாக் களில் உட்கார்ந்தனர். ஓடிக் கொண்டிருந்த டீவி. கார்ட்டுன் நெட் வொர்க்கை, அப்பா ரிமோட் கொண்டு அணைத்தார். அம்மா வீட்டினுள் சென்றார்.

அவர்கள் பேசத் தொடங்கினர். அந்தப் புதியவரின் பேச்சுக் குரல் இனிமையாக இருந்தது. பெரியோர் கள் பேசும் போது, அருகில் இருக்கக் கூடாது என்று அப்பா அறிவுறுத்தி இருக்கிறார். ஆகவே எழுந்து சென்று, வாசல் பக்கத்துக் கரும் பளிங்கு பெஞ்ச்சில் உட்கார்ந்தாள்.

ஒரு ட்ரேயில் அம்மா இரு கோப் பைகளை எடுத்து வந்து, அவர்கள் எதிரே டீப்பாய் மீது வைத்தார்.

''வேண்டாம்'' என்றார் அந்த மனிதர். "இவற்றை எல்லாம் நான் அருந்துவதில்லை. குளிர்ந்த நீர் கொடுங்கள். நலம் பல பெற்று வாழ்வீர்கள்."

சற்று நேரம் பேசிய பிறகு, அப்பா அவருடைய அனுமதியுடன் உடை மாற்ற, முகம் கழுவச் சென்றார்.

அந்த மனிதர் திரும்பினார். அவளைப் பார்த்தார். புன்னகை. தலையை அசைத்து அழைத்தார்.

சென்றாள்.

"உட்கார்" என்றார், சோஃபாவில் சிறிது நகர்ந்தபடி.

அமர்ந்தாள்.

''நான் மாஜிக் எல்லாம் பண்ணுவேன். உனக்கு இப்போது என்ன வேண்டும், சொல். வரவழைத்துத் தருகிறேன்."

யோசித்தாள். "சாக்லேட்."

எதிரே வலது கையை நீட்டினார்.

கண்களை இமைத்து விட்டாளோ? அவரு டைய ரோஜா நிற பரந்த கையில் பளிச் என்று தங்க நிற, காகிதம் சுற்றிய சாக்லேட் இருந் தது. லேசான கோக்கோ மணம்.

தந்தார்.

தடவிப் பார்த்தாள். கனமான சாக்லேட் உள்ளே இருக்க வேண்டும்.

"வேறு என்ன வேண்டும்?"



ஒல்லியானவனுக்கு ஒரே காது அந்தக் காதும் ஓட்டை — அது என்ன?

விடை : ஊசி

வேறு என்ன வேண்டும்? நினைத்துப் பார்த்தாள். தேவையான அனைத்தையும் அப்பா வாங்கித் தருகிறார். நிறைய கதைப் புத்தகங்கள் இருக்கின்றன. இரண்டு பேனாக்கள், பென்சில்கள், எரேஸர்கள், கலர் பாக்ஸ் எல்லாம் உள்ளன.

சட்டென்று அவள் கேட்டு விட்டாள். "முந்திரிப் பருப்பு."

கையை நீட்டினார். இமைக்காமல் பார்த்தாள். ஒண்ணு, ரெண்டு, மூணு... என்று ஏழு முழு முந்திரிப் பருப்புகள் அவருடைய உள்ளங் கையில் தோன்றின.

தந்தார். இரு கைகளாலும் பெற்றுக் கொண்டாள். நல்ல குண்டு குண்டு முந்திரிப் பருப்புகள். எக்ஸ்போர்ட் குவாலிடி.

அவரைப் பார்த்தாள். "பெரிசா ஏதாவது உங்களாலே வரவழைக்க முடியுமா?"

"பெரியதாக என்ன வேண்டும்? வர வழைக்கிறேன். ஆனால் ஒன்று. உனக்குத் தேவையானவற்றை நீ சம்பாதிக்க வேண்டும். நான் வரவழைப்பதை நீ உபயோகிக்கக் கூடாது."

''சரி. யானை வரவழைப்பீங்களா?"

"யானையா? இந்த அறை தாங்குமா? வந்து நின்றவுடன், அதோ அந்த டீவி., மேஜை, இந்த சோஃபா அனைத்தும் நொறுங்கி விடும்."

"அப்படீன்னா வேணாம். உம்..." யோசித்தாள். "சிங்கம்?"

"பார்த்து பயந்து அலற மாட்டாயே?"

"வேணாம், வேணாம்'' என்றாள் அவசரமாக. ''பூனைக் குட்டி? அதுவும் வேணாம். இங்கே ஒண்ணு இருக்கு. என்னோட பிரியமான தாத்தா சென்னைக்குப் போயிட்டார். அவரைப் பார்க்கணும் போல இருக்கு. இப்போ கூட்டிக் கொண்டு வருவீங்களா?"

"ஓ!" வலது கையை எதிரே நீட்டி, சுழற்றினார்.

தாத்தா எதிரே சோஃபாவில் உட்கார்ந்திருந்தார். அவளைப் பார்த்துப் புன்னகை செய்தார். ரொம்பப் பிரியமான தாத்தா. கட்டி இறுக அணைத்துக் கொள்ளும் தாத்தா. கதைகள் பல சொல்ற தாத்தா. வீட்டுப் பாடம் பண்ண உதவுகிற தாத்தா.



ஊருக்கு வெளியே பெரிய சத்திரம் — அது என்ன?
விடை: கடல்

''தாத்தா!'' பாய்ந்து அவரிடம் செல்ல முயன்றாள்.

''கூடாது. பக்கத்தில் செல்லக் கூடாது. இங்கிருந்தே பார். பேசக் கூடாது. வருவார். பேச மாட்டார். ஒரு நிமிஷம் தான் இங்கே இருப்பார். பிறகு மறைந்து விடுவார்.'' நகர விடாமல் அவளை அவர் பிடித்துக் கொண்டார்.

அவளுக்கு ரொம்ப ஏமாற்றமாக இருந்தது. ''எப்படி தாத்தா இருக்கீங்க?'' கேட்டாள்.

தாத்தாவிடமிருந்து பதில் இல்லை. புன்னகையுடன் அவளைப் பார்த்தபடி அமர்ந்திருந்தார்.

''பாட்டி எப்படி இருக்காங்க, தாத்தா?''

பதில் இல்லை. அதே புன்னகை. சற்று நேரத்தில் தாத்தாவின் உருவம் புகையாகத் தேய்ந்து மறைந்தது.

பேச்சற்று தாரிகா உட்கார்ந்திருந் தாள்.

உடை மாற்றிக் கொண்டு அப்பா வந்தார். ''தாரிகா என்ன சொல் றாள்?'' வந்தவரிடம் கேட்டபடி அப்பா சோஃபாவில் உட்கார்ந்தார். சட் டென்று எழுந்து, ''சூடா இருக்கே? இங்கே யாராவது எனக்கு முன் உட் கார்ந்து இருந்தாங்களா?'' என இருவரையும் பார்த்துக் கேட்டார்.

வந்தவர் இவளைப் பார்த்தார். 'சொல்லாதே' என்பதான பார்வை.

''பேசிக் கொண்டிருந்தோம். கெட்டிக்காரப் பெண். வாழ்க்கையில் நன்கு முன்னேறி, நாட்டுக்கு உதவு வாள்'' என்று கூறியவர் எழுந்தார். ''சரி. நான் வருகிறேன்'' எனக் கூறி விட்டுப் புறப்பட்டார்.

அவர் சென்ற பிறகு, அப்பா தாரி காவிடம் கேட்டார், ''என்ன சொன் னார் அவர்?''

''என்ன வேணும்னு கேட்டார். சாக்லேட் வேணும்னேன். அப்படி கையை நீட்டினார். சாக்லேட் வந்தது, அப்பா!''

''தின்னுடாதே. மாயம், மந்திரம் இருக்கும்.''

''ஏழு முந்திரிப் பருப்பும் வரவழைச்சுக் கொடுத்தார்.'' கையை விரித்துத் தாரிகா காட்டினாள்.

வியந்து போய் அப்பா நின்றார். ஒரு சாக்லேட், ஏழு முந்திரிப் பருப்புகள்!

அம்மாவும், ஸ்ரீராமும் வந்தனர். அவர்களி டமும் வியப்பு.

அம்மா, அப்பாவிடம் கேட்டார், ''யார் அவர்? முகத்துலே தெய்வாம்சம் ஜொலிக் கிறது!''

''யாருன்னு தெரியல்லே. ஆஃபீஸ்லேருந்து வெளியே வந்தப்போ, இவர் எதிரே வந்து நின்று, 'நீங்க மிஸ்டர் சீதாராமன் தானே?'ன் னார். 'ஆமா. நீங்க யாரு'ன்னு கேட்டேன். 'நான் யாரோ ஒருவன். ஊர் ஊராக, நாடு நாடாகச் சுற்றிக் கொண்டிருப்பவன்'னு சொன்னார். கூடவே பேசிக் கொண்டு வந் தார். ஸ்விட்சர்லாந்து, ஸ்காண்டிநேவியா போய் வந்ததை ரொம்ப சாதாரணமாகச் சொன்னார். கையிலே ஒரு பெட்டி இல்லை. சட்டைப் பையிலும் காசு ஏதும் இருந்ததா தெரியல்லே.''

''தனக்கு வேணுங்கிறதை அவர் அப்பப்ப அந்தரத்துலேருந்து வரவழைச்சுப்பார், அப்பா.''

''சரி, சரி. அந்த சாக்லேட், முந்திரிப் பருப்பை எல்லாம் தின்னு வைக்காதே. குப் பைலே எறி'' என்றார் அப்பா.

குப்பையில் அவற்றை எறிய தாரிகாவுக்கு மனதில்லை. மேஜை மீது ஒரு ஓரமாக வைத்து விட்டு, படிக்கச் சென்றாள்.

இரவு படுத்து உறங்கிய போது கனவு வந்தது.

பெரிய அரங்கம். நிறைய நாற்காலிகள்.

ஒரு ஈயின் உயரம் அதிகமாகப் போனால் ஒரு சென்டிமீட்டர் இருக்கும். அதைப் போல் நூற்றி முப்பது மடங்கு உயரத்துக்கு அது குதிக்க முடியும்.

— ஏ.எல். ராவியாகனி

முறுக்கி முறுக்கியிருக்கும் முறுக்குமல்ல; மூன்று கால் இருக்கும் முக்காலியும் அல்ல; முதுகின் மேல் விழும் அடியுமல்ல – அது என்ன?

விடை: ஜடை

அழகான மேடை. அற்புதமாக மேடை அலங்கரிக்கப்பட்டிருந்தது. வண்ண வண்ண விளக்குகள்.

அத்தனை பெரிய அரங்கில் தாரிகா மட்டும் உட்கார்ந்திருந்தாள்.

மேடையில் திரை விலகியது. சாக்லேட்டும், முந்திரிப் பருப்புகளும் நின்றன. அதே பொன்னிறக் காகிதம் சுற்றப்பட்ட சாக்லேட், ஏழு முந்திரிப் பருப்புகள். ஆனால் அவை ஆள் உயரத்துக்கு இருந்தன. சாக்லேட் சற்று உயரம் அதிகம்.

சட்டென்று விளக்குகள் அணைந்தன. இருட்டு. இருட்டு என்றால், கண்மை இருட்டு. அவளுக்குப் பயம் ஏதும் ஏற்படவில்லை. அது எப்படி பயம் இல்லை? ஆச்சர்யம்!

ஒரு நிமிஷம் இருக்கலாம். விளக்குகள் மீண்டும் எரிந்தன. பிரகாசமோ, பிரகாசம்! எதிரே காலியான மேடை. வான்வெளித்திரை.

பின்பக்கம் இருந்து ஓசை வந்தது. மூச்சு விடும் ஓசை. திரும்பிப் பார்த்தாள். அகல வாக்கில் முன்னால் சாக்லேட் நகர்ந்துவர, பின்னால் முந்திரிப் பருப்புகள் நெளிந்து வந்தன. இரு பக்க நாற்காலிகளுக்கு இடையே அவற்றின் இனிய பவனி.


மேடை ஏறின. நிமிர்ந்து நின்றன.

இசை. 'ஸ்நோ வொயிட்டும் ஏழு குள்ளர் களும்' — நாடகம். ஸ்பீக்கரில் குரல் வந்தது. சாக்லேட் ஸ்நோ வொயிட்டாம், முந்திரிப் பருப்புகள் ஏழு குள்ளர்களாம்! என்ன பொருத்தம்! தாரிகா கைகளைத் தட்டினாள்.

என்ன அற்புதமான நாடகம்! சாக்லேட் சாக்லேட்டாகத் தெரியவில்லை. முந்திரிப் பருப்புகள் முந்திரிப் பருப்புகளாகத் தெரியவில்லை. ஸ்நோ வொயிட், ஏழு குள்ளர் களாகவே தெரிந்தன. அந்தக் கதையை அவள் பல தடவை வாசித் திருக்கிறாள். ரொம்பப் பிடித்த கதை. ஆகவே நாடகத்தை வெகு அழகாக ரசிக்க முடிந்தது.

அடுத்தது என்ன என்று அவள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தபோது, நாடகம் முடிந்த கையுடன் சாக்லேட் டும், முந்திரிப் பருப்புகளும் மேடை யில் வரிசையாக நின்றன. தேசிய கீதம். 'ஜனகணமன...' தாரிகா எழுந்து நின்றாள்.

பாட்டு முடிந்ததும், சோர்ந்து போன சாக்லேட்டும், முந்திரிப் பருப்பு களும் அப்படியே மேடையில் படுத்து விட்டன. விளக்குகளின் ஒளி மங்கி யது.



காலையில் எழுந்தபோது, இரவில் கண்ட கனவு நிஜம் போல மனதில் அச்சாகப் பதிந்திருந்தது. அவசரமாகச் சென்று, மேஜை மீது வைத்திருந்த சாக்லேட்டையும், முந்திரிப் பருப்புகளையும் பார்த்தாள். ஏராளமான எறும்புகள் அவற்றை மொய்த்துத் தின்று கொண்டிருந்தன. அப்போது டெலிபோன் மணி ஒலித் தது.

"ஹலோ சீதாராமன்! நான் கண்ணன் பேசறேன். நேற்று உன் வீட்டுக்கு ஒரு மாஜிக் நிபுணர் வந்து அசத்தியிருப்பாரே! அவர் என்னு டைய சித்தப்பாதான். திடீரென்று உங்களைச் சந்தோஷப்படுத் தணும்னுதான் முன்கூட்டியே சொல் லாமல் அவரிடம் எல்லா தகவல் களையும் சொல்லி அனுப்பினேன். சந்தோஷமா?"

"இரவு முழுவதும் தூக்கமே இல்லை. நீயும் உன் சர்ப்ரைஸும்" என்றபடி போனை வைத்தார் அப்பா.

வெள்ளைச் சிப்பாய்கள் பாதுகாப்பில் ஒரு சிவப்பு ராணி — அது என்ன?

விடை: பல், நாக்கு

போட்டி

1000/- ரூபாய் பரிசு!



ஒவ்வொரு மாதமும் பள்ளி மாணவ, மாணவியருக்காக இந்தப் போட்டி நடத்தப் படுகிறது. நீங்கள் பள்ளி மாணவர் என்பதற்கு அத்தாட்சியாக உங்கள் பெற்றோரின் கையொப்பம் இருக்க வேண்டும். பெற்றோர் கையொப்பம், முகவரி கூப்பன் இல்லாத படிவங்களை ஏற்றுக் கொள்ள இயலாது. மொத்தப் பரிசு ரூ.1000/-. சரியான விடை அளித்தவர்களில் 5 பேர் குலுக்கல் முறையில் பரிசுக் குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப் படுவர். ஒவ்வொருவருக்கும் ரூ.200/- பரிசாக வழங்கப்படும். உங்கள் படிப்புக்குத் தேவையான பொருட்களை இதில் நீங்கள் வாங்கிக் கொள்ளலாம். உங்கள் பள்ளி, வீட்டு முகவரிகளை மறவாமல் குறிப்பிடவும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.

கடைசி தேதி 20.02.2003.

இந்த மாதப் போட்டி

பொருத்துக :

1. ஜிம்பாப்வே	- ஏதென்ஸ்
2. ஜியோ	- சாகுந்தலம்
3. முதல் மாடர்ன் ஒலிம்பிக்ஸ்	- ஹராரே
4. காளிதாசர்	- பூமி
5. கியூபா	- பங்கிம் சந்திர சாட்டர்ஜி
6. வந்தே மாதரம்	- சர்க்கரை கிண்ணம்

ஆசிரியர்,
கோகுலம்,
47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை-600 097.



7. மூடும், திறக்கும் முத்திருக்கும் பெட்டி. பாடும், படிக்கும் பாம்பிருக்கும் சட்டி - அது என்ன?

8. மேலே உள்ள படத்தில் இருப்பது யார்?

குறுக்கெழுத்துப் புதிர்

இடமிருந்து வலம்

1. படிகம் போல் இருக்கும் கரும்புச் சாற்றின் கட்டி (5)
4. வீணையை ஒத்த பண்டைக்கால இசைக்கருவி (2)
5. உலோகங்களில் ஒன்று (3)
6. ஒரு பொருளின் மதிப்பு (2)
8. சிறுவர் என்பதை இப்படியும் அழைக்கலாம் (3)
10. சூரியனுக்கு அருகில் இருக்கும் கோள் (3)
12. ______ செய்ய விரும்பு (3)

வலமிருந்து இடம்

3. கிண்ணம் போல் பூ பூக்கும்; சட்டி போல் காய் காய்க்கும் (3)
7. காலின் அடிப்பாகம் (3)
9. நிறைக்கு எதிர்ச்சொல் (2)
11. கோதுமையை உடைத்தால் ______ (2)
14. தலையாட்டி பொம்மைக்குப் புகழ் பெற்ற ஊர் (5)

மேலிருந்து கீழ்


1. பாலைவனத் தாவரம் (3)
2. குழி (3)
3. கண்ணகி பிறந்த ஊர் (5)
9. மிகப் பெரும் பணக்காரர் (4)


கீழிருந்து மேல்

6. ஓடி ______ பாப்பா (4)
12. ஒரு நிகழ்வை வியந்து, பாராட்டி, ரசித்து சொல்லப்படும் வார்த்தை (5)
13. மாட்டின் இது எருவாகப் பயன்படுகிறது (3)
14. பணம் (3)


- ஞா. மாடசாமி,
சென்னை.

விடை 64 ஆம் பக்கம்





பி.ஆர்.பார்த்தசாரதி



டீ.வி.யும் வானொலியும்

டீ.வி.யில் கிரிக்கெட் நேரடி ஒளிபரப்பு நடந்து கொண்டிருந்தது. ஆங்காங்கே வீடுகளில், கடைகளில், மக்கள் வெறி பிடித்தது போல் பார்த்துக் கொண்டிருந்தனர்.

இந்திய வீரர்கள் பவுண்டரி, சிக்ஸர் என ரன் எடுத்துக் கொண்டிருக்க, பார்வையாளர்கள் ஆர்வம் அதிகமாகியது.

முதல் இன்னிங்ஸ் முடிந்து இடைவேளைக்காக நேரடி ஒளிபரப்பு நிறுத்தப்பட்டது. வீட்டுக்காரரும் டீ.வி.யை அணைத்து விட்டுச் சாப்பிடப் போனார்.

டீ.வி. கலகலவென கிண்டலாக, பக்கத்து அலமாரியில் வைக்கப்பட்டிருந்த டிரான்ஸ்சிஸ்டரைப் பார்த்துச் சிரித்தது.

டீ.வி.யின் சிரிப்பைக் கேட்டு டிரான்சிஸ்டருக்கு அவமானமாகப் போயிற்று.

"என்ன சிஸ்டர்... டிரான்சிஸ்டர்... உன்னை யாரும் இப்போ சீண்டுவதில்லை பார்த்தியா? இனி என் ராஜ்ஜியம்தான் எப்போதும்" என்றது டீ.வி.

"ம்" என்று பெருமூச்சுவிட்ட டிரான்ஸ்சிஸ்டர், "ஆமாம் டீ.வி.யாரே உண்மைதான். நீர்தான் இப்போது வீட்டுக்கு வீடு சூப்பர் மேன். என்னை ஓரம் கட்டி வைத்து விட்டார்கள் என்பது உண்மைதான்."

"என் பெருமை உணர்ந்தாயா சிஸ்டரே... டிரான்சிஸ்டரே.. என்னைப் பார்.. தினமும் என்னைத் துடைக்கிறார்கள்... ஒரு நாள் நான் மக்கர் செய்தால் போதும், என்னவோ வீட்டில் முக்கியமான நபர் உடம்பு சரியில்லாமல் கிடப்பது போல, உடனே மெக்கானிக்கைக் கூப்பிட்டு என் குறையைச் சரி செய்கிறார்கள். என்றும் நானே ராஜா... நானே மந்திரி .. ஹஹ்ஹா..." என்றது டீ.வி.

டிரான்சிஸ்டருக்கு அழுகையே வந்து விட்டது. டீ.வி. சொல்வது உண்மைதான். தன்மீது படிந்த தூசியைத் துடைப்பது கூட இல்லை இந்த வீட்டுக்காரர். இருந்தாலும் தன் பலவீனத்தைக் காட்டிக் கொண்டால் டீ.வி. அதிக அகம்பாவம் பிடித்து ஆடும் என்று தோன்றவே, "எனக்கும் காலம் வரும்" என்றது பயத்துடன்.

"நோ சான்ஸ்" என்றது டீ.வி.

உணவு இடைவேளை முடிந்தது.

வீட்டுக்காரர் டி.வி.யைப் போட்டார்.

கிரிக்கெட் விளையாடும் இரு அணி வீரர்களும் மைதானத்துக்குள் வந்து கொண்டிருந்தனர்.

ஆட்டம் தொடங்கியது.

எதிர் அணிக்காரர் பேட் செய்ய, முதல் பந்தை இந்திய வீரர் காட்ச் பிடிக்க, அரங்கமே அதிர்ந்தது. வீட்டுக்காரரும் அவர் தம் குடும்பத்தினரும் ஒருவர் கையை ஒருவர் தட்டிக் கொண்டு மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்ள, 'கரண்ட்' கட் ஆனது. எல்லோர் முகத்திலும் ஏமாற்றம்.

''அப்பா, ஈ.பி. ஆபீசுக்கு போன் செய்து கரண்ட் வர ஏற்பாடு செய்யுங்க'' என்றான் கடைக்குட்டி கணேஷ்.

ஈ.பி.க்கு போன் செய்த அப்பா ஏமாற்றத்துடன் போனை வைத்தார்.

''டிரான்ஸ்ஃபார்மர் ஒன்று வெடித்துவிட்டதாம். கரண்ட் வர குறைந்தது நான்கு மணி நேரமாவது ஆகுமாம்'' என்றார் அப்பா.


கதவைத் தட்டும் சத்தம் கேட்டு வீட்டுக்காரர் கதவைத் திறந்தார்.

பக்கத்து வீட்டுப் பரமசிவம் நின்றிருந்தார். ''என்ன சார்? கரண்ட் போயிருச்சு! உங்க வீட்டிலே டிரான்சிஸ்டர் இருக்கே, அதை எடுத்துப் போடுங்க. மேட்ச் ரன்னிங் கமெண்ட்ரி கேட்கலாம்'' என்றார்.


வீட்டுக்காரர் முகம் பிரகாசமாக ஆனது. ''அடடே... எனக்கு மறந்தே போச்சு'' என்றவர் டிரான்சிஸ்டரைத் துடைத்து கழட்டி வைத்திருந்த 'செல்'லைப் போட்டு 'ஆன்' செய்தார். கிரிக்கெட் நேரடி ஒலிபரப்பு ஆகிக் கொண்டிருந்தது.

எல்லோரும் ஆர்வமாகக் கேட்க, இந்திய அணி 4 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.


பக்கத்து வீட்டுப் பரமசிவம் போகும் போது, ''சார், டிரான்சிஸ்டரைத் தினமும் துடைச்சு ரெண்டு மணி நேரமாவது கேளுங்க. கரண்ட் இல்லாதபோது இதானே உதவுது'' என்றார்.



டிரான்சிஸ்டரை ஆஃப் செய்துவிட்டு அனைவரும் செல்ல, டி.வி. டிரான்சிஸ்டரைப் பார்த்து ''சிஸ்டர்... என்னை மன்னிச்சிடு. என்னவோ நானே பெரியவன்னு நினைச்சேன். உடனே எனக்கு 'அடி' கிடைச்சது. எல்லோரையும் மதிக்கணும்னு புரிந்து கொண்டேன். சாரி'' என்றது.



''பரவாயில்லை பிரதர். நான் கோபப்படவில்லை'' என்று பெருந்தன்மையுடன் கூறியது டிரான்ஸ்சிஸ்டர்!



பல் துலக்கி


காலையில் எழுந்தவுடன் நாம் எல்லோரும் செய்யும் காரியம் பல் தேய்ப்பதுதான். பல் தேய்க்க வில்லை என்றால் பல வியாதிகள் வரக்கூடும். ஆனால் ஆதிகால மனிதன் பல் தேய்த்தானா என்றால், இல்லை என்ற பதிலே கிடைக்கும். கொஞ்ச காலம் சென்றபின், மனிதன் தன் பற் களைக் கொடிகளாலும், தாவரங் களின் இலைகளாலும் சுத்தம் செய்யும் வழக்கத்தை மேற்கொண் டான். இப்போதும் கூட, கிராமப் புறங்களில் நெல் உமியை எரித்தும், மாவிலைகளாலும் பல் தேய்ப்பதைப் பழக் கத்தில் கொண்டுள்ளனர். பற்களுக்கிடையே மாட்டிக் கொண்டுள்ள உணவுத் துகள்களை அகற்ற பல் குச்சியைப் பயன்படுத்துகின்றனர். பின் சீனா, எகிப்து மற்றும் ஐரோப்பா போன்ற நாடுகளில பல் குச்சியை உபயோகப்படுத்தும் வழக்கம் வளரலாயிற்று. அழகாகத் தயாரிக் கப்பட்ட பல் குச்சியை வைத்திருப்பது என்பது, இந் நாடுகளின் உயர்நிலையையும், தரத்தை யும் காட்டும் அடையாள குறியீடாயிற்று. சில நாடுகளில் பல் குத்தும் குச்சி தாமிரம் வெள்ளி மற்றும் தங்கத்தினால் கூட செய்யப்

பட்டது.

சீனர்கள் தாங்கள்தான் முதன் முதலில் கி.பி. 1498ல் பல் துலக்கியை (டூத் பிரஷ்) தயாரித்ததாகக் கூறுகின்றனர். இருப்பினும், தற்கால பல் துலக்கியின் தந்தை வில்லியம் ஆடிஸ் என்ற ஆங்கிலேயர்தான்! ஆடிஸ், கி.பி. 1770ல் ஒரு குற்றத்திற்காக நியூகேட் சிறையிலடைக்கப்பட்டார். சிறையில் குற்றவாளிகள் பஞ்சையும், துணித் துண்டுகளையும் கந்தக நீரில் நனைத்து, தங்கள் பற்களைச் சுத்தம் செய்தனர். ஆடிஸ் ஒருநாள், தன் பல்லைச் சுத்தம் செய்து கொண்டிருக்கும் போது, பல் துலக்கி பற்றிய ஒரு வித்தியாசமான எண்ணம், மூளைக்குள் மின்னலடித்தது. பல் துலக்கி துணித் துண்டுகளுக்குப் பதிலாக குறு இழைகளை, குட்டையாக வெட்டப்பட்ட முடிகளைப் பயன்படுத்தினால் என்ன என்று நினைத்தார். ஒருநாள் தனக்கு வழங்கப்பட்ட உணவிலிருந்து மாட்டுக் கறியிலுள்ள எலும்புத் துண்டைத் தனியாக எடுத்து வைத்தார் ஆடிஸ். அதன் பின் அவர் ஜெயிலருடன் மிகவும் நட்பாக இருந்து, அவர் மூலம் பசுவின் முடியினைப் பெற்றார். பசுவின் கெட்டியான முடியினை மாட்டு எலும்பில் பொருத்தினார். பின் அதனைப் பல் துலக்கியாகப் பயன்படுத்தினார். இதுதான், இப்போது நாம் பயன்படுத்தும் பல் துலக்கியின் முன்னோர் பிறந்த கதை...!

ஆடிஸ் சிறையிலிருந்து விடுதலை பெற்ற பின், காட்டுக் கரடியின் முடியைப் பயன்படுத்தி பல் துலக்கியைத் தயாரிக்கத் தொடங்கினார். உடனே பல் துலக்கி தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை இங்கிலாந்தில் நிறுவினார். இரண்டாம் உலகப் போர் தொடங்கும் வரை, பல் துலக்கி தயாரிக்க காட்டுக் கரடி முடியே பயன்படுத்தப்பட்டு வந்தது. இதற்குச் சீனத்திலுள்ள காட்டுக் கரடியின் முடியே பயன்பட்டது. ஆனால், சீனாவில் சூங் அரசர், அரசப் பொறுப்பு ஏற்றவுடன், காட்டுக் கரடி முடி ஏற்றுமதி செய்வதைத் தடை செய்தார். இதனால் பல் துலக்கி தொழில் சரியத் தொடங்கியது. பின் கி.பி. 1938ல் டாக்டர். வெஸ்ட் என்ற அமெரிக்கர், பல் துலக்கியின் குறு இழைகளை நைலானால் தயாரித்தார். அப்போது இவை 'மாயப் பல் துலக்கிகள்' என்று அழைக்கப்பட்டன.

இரண்டாம் உலகப் போர் முடிந்து வீரர்கள் நாடு திரும்பும் காலம் வரை, அமெரிக்கர்கள் தினந்தோறும் பல் தேய்க்கும் பழக்கத்தைப் பின்பற்றவில்லை. கி.பி. 1949ல் ஸ்விட்சர்லாந்தில், 'மின் பல்துலக்கி' தயாரிக்கப் பட்டது. ஆனால் இது 1960லிருந்துதான் வணிகரீதியாக தயாரிக்கப்பட்டுப் புழக்கத்திற்கு வந்தது. இதன் பெயர் 'பிராக் சோடென்ட்' எனப்படும். ஸ்விப் என்ற அமெரிக்க கம்பெனியே இதைத் தயாரித்தது.



பல் துலக்கி இல்லாவிட்டாலும் கூட, வேப்பங்குச்சி மற்றும் ஆலம் விழுதை வைத்தே சமாளித்திருந்திருப்போம் நாம்...! பல் துலக்கியும், பற்பசையும், பல்லைச் சுத்தம் செய்வதை எளிதாக்கி, சுவையான, சுகமான, சுவாசத்தைத் தருகின்றன.



கோகுலத்துக்கு சந்தா செலுத்துங்கள்!

புதிர், ஜோக்ஸ், நகைச்சுவைக் கதை, புராணக்கதை, கட்டுரை, துணுக்குகள்... இன்னும் ஏராளமான அம்சங்களையும் தாங்கி வரும் கோகுலத்துக்கு சந்தா செலுத்துங்கள்! உங்கள் நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் பரிசளியுங்கள்.

பெயர் : ....

முகவரி : ....

....

....

ஆறு மாத சந்தா (6 இதழ்கள்) ரூபாய் 36/- ஒரு வருட சந்தா (12 இதழ்கள்) ரூபாய் 72/-. இதை டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். வெளியூர் காசோலைகள் ஏற்கப்படமாட்டா. டிமாண்ட் டிராப்ட் அல்லது மணியார்டரை அனுப்ப வேண்டிய முகவரி :

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்)
47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 097.



புதிர் பக்கம்!

I திருச்சிற்றம்பலம் பஞ்சாயத்தில் எட்டு கிராமம். ஒரு கிராமத்திற்கு எட்டு முகாம்கள். ஒரு முகாமிற்கு எட்டு குடிசைகள். ஒரு குடிசைக்கு எட்டு அகதிகள். ஒரு அகதிக்கு ஒரு நாளைக்குக் கால்படி அரிசி தேவை எனில் திருச்சிற்றம்பலம் பஞ்சாயத்திற்கு ஒரு நாளைக்கு அகதிகளுக்காக மொத்தம் எத்தனை படி அரிசி தேவை?

— சே. உமாராணி, பத்தாம் வகுப்பு,
உமா மகளிர் உயர்நிலைப்பள்ளி,
திருச்சிற்றம்பலம் அஞ்சல்
மயிலாடுதுறை.

II 1) சூப்பர் மார்க்கெட்டிற்குச் செல்லுகிறீர்கள். முதலில் 1020 ரூபாய்க்குப் பொருள் வாங்குகிறீர்கள். அப்புறம் இன்னொரு 1020. பிறகு 20. அப்புறம் இன்னொரு 20. பிறகு 10. இன்னொரு பத்து. மனதிலேயே கூட்டி சட்டென்று சொல்லுங்கள். எவ்வளவு ரூபாய் செலவழித்திருக்கிறீர்கள்?

2) எட்டு மீட்டருக்கு ஒரு மரம் விதம் நடப்பட்டு இருக்கிறது. 48 மீட்டரில் எத்தனை மரங்கள் இருக்கும்?

— என். ஜரினா பானு,
திருபட்டினம்.

III கல்பனாவிடம் ஒரு கூடை நிறைய மாம்பழங்கள் இருந்தன. அந்த மாம்பழங்களை இரண்டாகப் பங்கிட்டால், ஒரு பழம் மீதியாகும். மூன்றாகப் பங்கிட்டால் இரண்டு பழம் மீதியாகும். நான்காகப் பங்கிட்டால் மூன்று பழம் மீதி வரும். ஐந்தாகப் பங்கிட்டால் நான்கு பழம் மீதியாகும். ஆறாகப் பங்கிட்டால் ஐந்து பழம் மீதியாகும். ஏழாகப் பங்கிட்டால் மீதியில்லாமல் சரியாகப் போகும்.

அப்படியானால் கல்பனாவின் கூடையில் எத்தனை மாம்பழங்கள் இருந்தன?


— குட்டி பிரசன்னா,
கரூர்.

IV என் மாமாவிடம் அவரது வயதைக் கேட்டேன். அதற்கு அவர் என் வயதில் கால் பாகத்தைச் சிறுவனாகக் கழித்தேன். ஐந்தில் ஒரு பாகம் வாலிபனாக இருந்தேன். மூன்றில் ஒரு பாகம் மனிதனாக வாழ்ந்தேன். 13 வருடமாக வயோதிகனாக வாழ்கிறேன் என்று கூறினார். அப்படியானால், என் மாமாவின் வயதென்ன?

V எனது சகோதரர் ஒரு லாரி டிரைவர். லைசன்ஸ் இல்லாமல் சாலை விதிகளை மீறி போக்கு வரத்து போலீசாரை லட்சியம் செய்யாமல் ஒருவழிப்பாதையில் சென்று கொண்டிருந்தார். ஆனால் அவரை போலீஸ் ஒன்றும் செய்யவில்லை. ஏன்?

— நெ. இராமன்,
சென்னை

VI கீழே இருக்கும் கட்டத்தில் 5 சொற்களை அமைக்க வேண்டும். ஒவ்வொரு சொல்லும் இடமிருந்து வலமாகவும் மேலிருந்து கீழாகவும் ஒன்



விடைகள்:

I 1024 படி அரிசி

II 1) 2100.
2) 7 மரங்கள்

III 119 பழங்கள்

IV 60 வயது


V லாரி டிரைவர் நடந்து சென்று கொண்டிருந்தார்.

VI

பா	பா			
பா	க்	கு		
	கு	ந்	தி	
		தி	யா	கி
			கி	ளி


றாகவே இருக்க வேண்டும். சொற்களுக்குப் பொருத்தமான குறிப்பு கீழே உள்ளது.

1. விமான விபத்தில் இறந்த இந்திய விஞ்ஞானி.
2. வெற்றிலை ________ சுண்ணாம்பு என்று கூறுவர்.
3. பாண்டவரின் தாய்
4. நாட்டுக்காக வாழ்வை அர்ப் பணித் தவர்.
5. சொல்லிக் கொடுத்தால் திரும்பச் சொல்லும் பறவை.




- த. மணிக்கலா,
நீடாமங்கலம்.

குறுக்கெழுத்துப் புதிர் விடை







பழைய காருக்கு என்ன விலை?

முதலில் சில விசித்திரமான தகவல்களைப் பார்க்கலாமா?


* ஜப்பானியர்களிடம் ஒரு வினோத நம்பிக்கை. மூன்று பேராக நின்று கொண்டு, புகைப்படம் எடுத்துக் கொண்டால், நடுவில் நிற்பவருக்கு ஆகாது என்பது அவர்களின் நம்பிக்கை.

* ஃபிரான்ஸ் நாட்டில், காரில் பயணம் செய்பவர்கள், தங்கள் சீட் பெல்ட்டை அவசியம் அணிந்து கொண்டுதான் பயணம் செய்ய வேண்டும் என்பது கட்டாயம். ஆனாலும், பெல்ட்டால் இழுத்துக் கட்ட முடியாத அளவுக்கு மெகா சைஸ் ஆசாமிகளாக இருந்தால், விதி விலக்கு உண்டு.

* இங்கிலாந்தின் சில பகுதிகளில் வசிக்கும் மக்களிடையே நிலவும் விசித்திரமான நம்பிக்கை ஒன்று உண்டு. மூட்டு வலியால் அவதிப் படுகிறவர்கள், எங்கிருந்தாவது உருளைக் கிழங்கைத் திருடிக் கொண்டு வந்து, வைத்துக் கொண்டால், மூட்டுவலி போய்விடுமாம்.

* 1923ம் வருடம்தான், அமெரிக்காவில் இரவில் வண்ண ஒளி வழங்கும் நியான் விளக்குகள் அறிமுகப்படுத்தப்பட்டன. 'லிட்டில் ஒல்டு நியூயார்க்' என்கிற நாடகம், இந்த நியான் விளக்கு வாயிலாக விளம்பரம் செய்யப்

பட்டது. அப்போது கிடைத்த புள்ளி விவரப்படி, நாடகத்தைப் பார்க்க வந்தவர்களின் எண்ணிக்கையை விட, இந்த நியான் விளக்கைப் பார்க்க வந்த மக்களின் எண்ணிக்கை பல மடங்கு.



பிரார்த்தனை குறித்து, ஒரு சிறுவனுக்கு எழுந்த சந்தேகம், அதற்குத் தரப்பட்ட பதில் இரண்டையும் இப்போது பார்க்கலாம். இது உங்களைப் போன்ற சிறுவர்களுக்கு மட்டுமல்லாமல், பெரியவர்கள் கூட தெரிந்து கொள்ள வேண்டியது தான்.


கேள்வி : ஆண்டவனிடம் பிரார்த்தனை செய்கிறபோது, எனக்கு இது வேண்டும்; அது வேண்டும் என்று கேட்பது தவறு என்கிறார்களே! அது சரியா?

பதில் : ஆண்டவன்தானே இந்த உலகத்தில் உள்ள அனைத்தையும் படைத்தவர்! அவரிடம் நாம் அன்பும், பக்தியும் செலுத்த வேண்டும். எதையும் எதிர்பார்த்து, அன்போ, பக்தியோ செலுத்துவது கூடாது. இறைவனுக்கு, நமக்கு எப்போது எதைத் தர வேண்டும் என்பது தெரியும். நாம் கேட்டு தான் அதைப் பெற வேண்டும் என்று இல்லை. குசேலர், வறுமையில் மிகவும் கஷ்டப்பட்ட நிலையில், கிருஷ்ணரைச் சந்தித்த போதுகூட, தனக்கு வசதிகள் வேண்டும் என்று கேட்கவில்லை. ஆனால், குசேலர் வீடு திரும்பிய போது, எல்லாமே அவருக்குக் கிடைக்கும்படி கிருஷ்ணர் செய்தாரில்லையா?

குசேலர் மாதிரி, சாதாரண மக்கள் பலருக்கும், அவரவர் தேவை அறிந்து, ஆண்டவனே தேவையானவற்றைக் கொடுத்த அனுபவம் இருக்கும்.

ஆனாலும், நாம் கஷ்டத்தில் இருக்கிறபோது, இறைவனிடம், நம் கஷ்டத்தைச் சொல்லி, தீர்த்து வைக்கும்படி சொல்வதில் தவறு இல்லை. காரணம், இறைவனிடம் தமது மனத்துயரங்களைப் பகிர்ந்து கொள்ளுவதே பலருக்கும் மன நிம்மதியையும், கஷ்டத்தை எதிர்த்துப் போராடும் தன்னம்பிக்கையையும் தருமல்லவா?


ம்... படித்து விட்டீர்களா? இனிமேல், பிள்ளையாரிடம் போய், சாமி! நான் பரீட்சையில் பாஸ் பண்ணினால் தேங்காய் உடைக்கிறேன், உண்டியலில் காசு போடுகிறேன், என்றெல்லாம் வேண்டிக்கொள்ள மாட்டீர்கள்தானே?



ஒரு புதிர் போடட்டுமா?

ஜூலிக்கு நான்கு அக்கா. மூத்த அக்காவின் பெயர் பிட்டி. அடுத்த அக்காவின் பெயர் சிட்டி. மூன்றாவது அக்காவின் பெயர் கிட்டி. நான்காவது அக்காவின் பெயர் விட்டி. அப்படியெனில் இந்த நாலு அக்காக்களுடைய கடைக்குட்டித் தங்கையின் பெயர் என்ன?


என்ன? விடை தெரியாமல் விழிக்கிறீர்களா? புதிரின் முதல் வரியை மறுபடியும் படியுங்கள். ம்... என்ன கண்டு பிடித் தாகிவிட்டதா? எஸ்... கரெக்ட்... ஜூலிதான்.



அடுத்து ஒரு சில ஜோக்ஸ் படித்து சிரிக்கலாமா?

ஒரு தாத்தாவிடம், அவருடைய பேரன் கேட்டான்: "தாத்தா! நீங்கள் தும்முகிற போது தலையைச் சற்றுக் குனிந்து, இரு கைகளையும் கொண்டு வாயை லேசாக மூடிக் கொண்டு தும்முகிறீர்களே! நாகரிகம் கருதி அப்படி செய்கிறீர்களா?"

தாத்தா: ம்... இல்லை... அப்படிச் செய்யாமல் தும்மிவிட்டால், வாயிலிருக்கும் பல்செட் வெளியில் போய் விழுந்து விடுமே! அதனைத் தவிர்க்கத்தான்!



ஒருவர்: பெரிசாய், கறுப்பாக, தும்பிக் கையுடன் இருக்கும் மிருகத்தை ஏன் யானை என்று சொல்கிறோம்?

மற்றவர்: சிறியதாய், வெள்ளையாய், தும்பிக்கை இல்லாமல் இருந்தால் அதை நாய் என்று சொல்லிவிடுவோமில்லையா. அதனால்தான்!

ஒருவர் தன்னுடைய பழைய கார் ஒன்றை விற்க விரும்பினார். பலரும் வந்து பார்த்து விட்டுப் போனார்களேயொழிய, யாரும் வாங்க முன் வரவில்லை. ஒருவர் கடைசியாக வந்து பார்த்து விட்டு, தன் பையிலிருந்து ஒரு சின்ன பார்சலை எடுத்து காரின் சொந்தக்காரரிடம் கொடுத்தார்.

"இது அட்வான்ஸா?" என்று கார் சொந்தக்காரர் கேட்டார்.


அதற்கு அவர் சொன்னார்: "இல்லை முழு செட்டில்மெண்ட்."

கார் சொந்தக்காரர் ஆர்வமாய் பார்சலைத் திறந்து பார்த்தார். உள்ளே இருந்தது பணமில்லை; பேரிச்சம்பழம்!

— கௌதம் ராம்

ஆந்தை என்றாலே அருவருப்படைந்து முகத்தைச் சுளித்துக் கொள்கிறோம். ஆனால் அது ஒரு அறிவுமிக்க பறவையாகக் கருதப்படுவதை அறிவீர்களா? புராதன கிரேக்க நாட்டில், ஆந்தையை 'அறிவுத் தெய்வம்' என்றே கொண்டாடினார்கள்! அந்த 'லேபில்' இன்றும் ஆந்தையிடம் ஒட்டிக் கொண்டிருக்கிறது!

— மார்க்கண்டன்





முதல் பரிசு
ரா. **விஷால்,** எட்டாம் வகுப்பு,
ஜவஹர் வித்யாலயா, சென்னை.

வண்ணத் தூரிகை

ஜனவரி இதழில் 'வண்ணத்துப் பூச்சிகள்' என்ற தலைப்பில் ஓவியப் போட்டி அறிவித்திருந்தோம். அதில் பரிசு பெற்ற ஓவியங்கள் இங்கே...



இரண்டாம் பரிசு
க. **ஸ்ரீனிவாஸ்,** வித்யா நிகேதன் மேல்நிலைப் பள்ளி,
புளியகுளம், கோவை மாவட்டம்.

வண்ணத்துப் பூச்சி



மூன்றாம் பரிசு
டி. ஜனார்த்தனன், பதினோராம் வகுப்பு,
சர் எம்சிடிஎம் மேல்நிலைப்பள்ளி, சென்னை.



ஆறுதல் பரிசு
எஸ். ஸ்ரீவித்யா,
ஏழாம் வகுப்பு,
டவுன்
மேல்நிலைப்
பள்ளி,
கும்பகோணம்.



ஆறுதல் பரிசு
எஸ். பிரபு,
தேனி.

செய்தித் துளிகள்

ஜோசிய மோகம்!

ஜப்பானிய மக்களுக்கு ஜோசியக்காரர்கள் மீது அதிக நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. ஜப்பானியர்களிடம் நீங்கள் எதை அதிகம் நம்புகிறீர்கள் என்று கேட்டுக் கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டது. பெரும்பாலோர் நடக்கவிருப்பதை முன்கூட்டியே தெரிவிக்கும் ஜோசியக்காரர்களை முழுமையாக நம்புவதாகக் கூறினார்கள். அடுத்தபடியாக டாக்டர்களையும், போலீசாரையும், ஆசிரியர்களையும் இந்த வரிசையில் நம்புவதாகக் கூறினர்.



நாய்களுக்கு உடல் பரிசோதனை

அமெரிக்காவில் கடந்த ஆண்டு செப்டெம்பர் 11ந் தேதி பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதல் சம்பவத்தின்போது மீட்புப் பணியில் போலீசாருக்கு மோப்ப நாய்கள் பெரிதும் உதவின. கட்டட இடிபாடுகளில் சிக்கியவர்களை உயிருடன் மீட்க உதவிய 131 மோப்ப நாய்களுக்கும் முழு உடல் பரிசோதனை செய்யப்படவுள்ளது. இந்த மருத்துவப் பரிசோதனைக்காக பென்ஸில்வேணியா பல்கலைக்கழகம் 2.50 கோடி ரூபாய் கொடுக்க முன் வந்துள்ளது.

குளோனிங் முறையில் முதல் குழந்தை!

அமெரிக்காவில் மியாமி நகரில் குளோனிங் மூலம் ஒரு பெண் குழந்தை பிறந்துள்ளது. இக்குழந்தை குளோனிங் மூலம் உருவாக்கப்பட்ட முதல் குழந்தை. ஏற்கெனவே கன்றுக் குட்டி, ஆட்டுக் குட்டி, பன்றி போன்றவை குளோனிங் முறையில் உருவாக்கப்பட்டுள்ளன.

விஞ்ஞானிக்கு விருது!

2002ஆம் ஆண்டுக்கான தாதாபாய் நௌரோஜி நினைவு விருது பிரபல விஞ்ஞானி டாக்டர் ஆர்.ஏ. மசேல்கருக்கு வழங்கப்படவுள்ளது. அறிவியல் மற்றும் தொழில் நுட்பத்தில் ஆற்றியுள்ள அரிய பணிகளுக்காக இந்த மதிப்புமிக்க விருது அவருக்கு வழங்கப்படுகிறது. இந்த விருதில் ஒரு லட்சம் ரூபாயும் வெள்ளியிலான நினைவுப் பரிசும் அடங்கும். அறிவியல் தொழில் நுட்ப ஆய்வு கவுன்சிலின் டைரக்டர் ஜெனரலாக மசேல்கர் தற்போது பணியாற்றி வருகிறார்.

இதயத்துக்கு நல்லது!


மாதம் ஒரு முறை மீன் சாப்பிட்டால் மாரடைப்பு நோய் வராமல் தடுக்க முடியும் என்று ஓர் ஆய்வு தெரிவிக்கிறது. வாரத்தில் பலமுறை மீன் சாப்பிடுவோருக்கு மாரடைப்பு நோய் வருவதற்கு வாய்ப்புக் குறைவு என்று பல ஆராய்ச்சியாளர்கள் கூறி வருகின்றனர். ஆனால் மாதத்தில் ஒரு முறை மீன் சாப்பிட்டால்கூட போதும் என்று புதிய ஆய்வு தெரிவிக்கிறது. ஒமேகா எனும் அமிலச் சத்து பெரும்பாலான மீன் வகைகளில் உள்ளது. இதயத்துக்குச் செல்லும் ரத்தக் குழாய்களில் அடைப்பு ஏற்படாமல் இந்த அமிலம் தடுக்கிறது என்று கூறுகின்றனர்.

ஓவியப் போட்டி


உலகிலேயே நீண்ட கழுத்துடைய பிராணி ஒட்டகச் சிவிங்கி. இந்த மாத ஓவியப் போட்டியின் தலைப்பு : ஒட்டகச் சிவிங்கி. ஓவியம் உங்கள் கற்பனைக்கு ஏற்றவாறு எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம். வண்ணத்தில் இருப்பது அவசியம். சிறந்த ஓவியங்களுக்கு முதல், இரண்டாவது, மூன்றாவது மற்றும் இரண்டு ஆறுதல் பரிசுகள் வழங்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது. முகவரியை மறவாமல் குறிப்பிடுங்கள். கடைசித் தேதி 7.2.2003.

8. மாலா தேடிய மாயப் பெண்

கதை: விஜி
படம்: சேகர்




மீண்டும் மாலாவைத் தூக்கிக் கொண்டு கழுகு பறந்தது.
மாலா, குளத் துக்கு ஏதாவது அடையாளம் இருக்கா?
ம்... காயத்தைக் குணமாக்கற பச்சிலை மரம் குளத்துக்குப் பக்கத்தில் இருக்கும்.
நீண்ட நேரப் பயணத்துக்குப் பின் குளத்தை அடைந்தனர்.
உன் நண்பனைக் கூப்பிடு. இன்றே நாம் இங்கிருந்து செல்ல வேண்டும்.
முதலை நண்பா, மாலா வந்திருக் கேன்.


மாலா, என்ன வேணும் உனக்கு?
உன் உதவி எனக்குத் தேவை.
உனக்குச் செய்யாமலா? என்ன?
இந்தக் குளத்திலிருக்கும் பொன் நிற மீனை நீ பிடித்து.தர வேண்டும்.
பொன் நிற மீனா?
ஆமாம்.
அது மந்திர கலாவின் உயிர் புகுந்த மீன். பொல்லாதது.
நீ சாமர்த்தியமாகப் பேசி என்னிடம் கொண்டு வந்து சேர்த்துவிடு.
முதலை குளத்துக்குள் சென்று தேடியது.
உன்னை மாதிரி இன்னொரு மீன் இருக்கு. வா, காட்டறேன்.
அப்படியா! என்னை ஏமாற்றணும்னு நினைக்காதே! அது உன்னால முடியாது.



மீனும் முதலையும் கரையருகே வந்தன.
முதலை சட்டென்று மீனைக் கரைக்கு வெளியே தள்ள, மீன் தரையில் விழுந்தது.
மாலா ஈட்டியை எறிந்தாள்.
உடனே காற்றும் மழையும் அதிகமாகியது.
நாளை அமாவாசை. இப்பொழுதே கிளம்பினால்தான் சரியாக இருக்கும். ஆனால்...
ஆனால் என்ன?
இந்த மழையில் என்னால் பறக்க முடியாது. அந்தக் குகைக்குள் காத்திருப்போம். மழை நின்றதும் கிளம்பலாம்.
சே! மழை எப்போது நிற்கும்? நேரமாகிறதே!
(தொடரும்)



வண்ணத்துப் பூச்சிக்கு ஒரு பூங்கா!

உயிரியல் பூங்காக்களில் விலங்குகள், பறவைகளைத்தான் பார்த்திருக்கிறோம். இந்தியாவில் இருக்கிற முக்கியமான உயிரியல் பூங்காக்களில் ஒன்று ஹைதராபாத்தில் இருக்கிற 'நேரு உயிரியல் பூங்கா'. இது அதிகமான உயிரினங்களைக் கொண்ட மிகப் பெரிய பூங்கா.

இங்கேதான் நம் கண்களைக் கவரும் வண்ணத்துப் பூச்சிகளுக்காக 'வண்ணத்துப் பூச்சிக் காடு' (பட்டர் ஃபிளை சஃபாரி) ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது.

மூன்று ஏக்கர் மலைப் பரப்பில் இந்தக் காடு அமைந்துள்ளது. சில பூங்காக்களில் கண்ணாடிக் கூண்டுக்குள் அடைத்து வண்ணத்துப் பூச்சிகளை வைத்திருப்பார்கள். ஆனால் இந்தப் பூங்காவில் இயற்கையான முறையில் வண்ணத்துப் பூச்சிகளைப் பறக்க விட்டிருக்கிறார்கள்.

வண்ணத்துப் பூச்சி உண்ணும் தாவர வகைகள், அதற்குப் பிடித்த மரங்கள் என, இந்த மூன்று ஏக்கர் பரப்பில் வளர்க்கப் பட்டிருக்கின்றன. இதனால் வண்ணத்துப் பூச்சிகளின் தேவை இங்கேயே பூர்த்தி செய்யப்பட்டு விடுகிறது. எனவே பூச்சிகள் உணவைத் தேடி வெளியே நீண்ட தூரம் செல்ல வேண்டிய அவசியமில்லை. அதனால் எந்தவிதமான தடுப்பும் இன்றி வண்ணத்துப் பூச்சிகள் அங்கேயே சுற்றிச் சுற்றி வந்து நம்மைக் கிறங்கடிக்கின்றன.

முட்டை, கம்பளிப் புழு (லார்வா)





கூட்டுப் புழு (பியூபா), சிறகடித்துப் பறந்து செல்லும் வண்ணத்துப் பூச்சி என அனைத்து நிலைகளையும் இங்கு நாம் கண் கூடாகக் காணலாம். இங்கு ஒவ்வொரு பூச்சியையும் அருகில் சென்று ரசிக்கலாம்; ஆனால் பிடிக்கவெல்லாம் கூடாது.

இங்கு 50க்கும் மேற்பட்ட வகைகளில் வண்ணத்துப் பூச்சிகள் வலம் வருகின்றன.


வண்ணத்துப் பூச்சிக் காட்டில் ஆங்காங்கே தகவல் பலகைகள் அமைக்கப்பட்டுள்ளன. அந்தப் பலகையில் பூச்சிகளின் பெயர், வடிவம், வண்ணம், பழக்க வழக்கம் ஆகியவை கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பலகையில் உள்ள தகவலையும் படித்து விட்டு, அதே மாதிரியான பூச்சியை அங்கு தேடிக் கண்டுபிடிப்பது என்பது சுவாரசியமான விஷயமாக இருக்கிறது.

இந்தியாவில் 1500 வகையான வண்ணத்துப் பூச்சிகள் உள்ளன. காலப் போக்கில் இங்கும் இன்னும் ஏராளமான வகை வண்ணத்துப் பூச்சிகள் வளர்க்கப்படலாம்.

ஒரு கிளையில் நூற்றுக்கணக்கான வண்ணத்துப் பூச்சிகள் அமர்ந்திருப்பது போல் நாம் கனவு கண்டிருப்போம். அந்தக் கனவு, இந்த வண்ணத்துப் பூச்சி பூங்கா மூலம் நிஜமாக்கப் பட்டிருக்கிறது.

அட்டையில் பவித்ரா கையில் இருந்து வண்ணத்துப் பூச்சிகள் பறப்பது அழகுக்காக நாம் செய்த கற்பனை! இந்த மாதிரி நிஜத்தில் செய்ய இயலாது.

வண்ணப்படம்: ஸ்ரீஹரி






உலகக் கோப்பை கிரிக்கெட் துளிகள்...

● உலகக் கோப்பை கிரிக்கெட்டில் முதன்முதலாக செஞ்சுரி போட்டவர் இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த டெனில் ஆமிஸ். இவர் 1975ல் நடந்த முதல் உலகக் கோப்பை போட்டியில் இந்தியா விற்கு எதிராகத் தன் முதல் செஞ்சுரி யைப் போட்டார்.

● இருமுறை உலகக் கோப்பையைப் பெற்றுக் கொடுத்த ஒரே கேப்டன் மே. இந்திய தீவுகள் அணியின் க்ளைவ் லாயிட்தான். இவர் 1975 மற்றும் 1979ம் ஆண்டின் உலகக் கோப்பையை மே. இந் தியத் தீவுகளுக்குப் பெற்றுக் கொடுத் தார்.

● 1979ம் வருட உலகக் கோப்பை இறுதிப் போட்டி இங்கிலாந்து மற்றும் மே.இ. தீவுகள் அணிகளுக்கு இடையே நடந்தது. அதில் இங்கிலாந்தைச் சேர்ந்த 5 பேர் 'டக் அவுட்' ஆனார்கள். கோவார், லார்கின்ஸ், ஓல்டு, டெய்லர், ஹென்ரிக்ஸ் ஆகி யோர்.



• க்ளைவ் லாயிட்

● கலந்து கொண்ட முதல் முறையிலேயே 'செஞ்சுரி' அடித்து சாதனை புரிந் தவர்கள் D.L. ஆமிஸ் (இங்கி லாந்து), G.M. டர்னர் (நியூ சிலாந்து), A.J. ஃபிளவர் (ஜிம் பாப்வே).

● லீக் போட்டிகளில் அதிகமுறை வென்ற அணி மே. இந்தியத் தீவுகள் அணி. அதிக முறை தோற்ற அணி ஜிம்பாப்வே அணி.

● 1979ம் வருட போட்டி யில் மே. இந்திய தீவுகள் அணி, முதலிலிருந்து இறுதி வரை ஒரு போட்டியில் கூட தோற்கவில்லை. அந்த அணிக்குத் தலைமை ஏற்றவர் க்ளைவ் லாயிட்.




• கபில்தேவ்

● மிகக் குறைந்த ரன் எடுத்த அணி கனடா அணிதான். 1979ம் வருட உலகக் கோப்பை போட்டியில் இங்கி லாந்துக்கு எதிராக 40 ஓவர்கள் விளையாடி கனடா எடுத்த ரன்கள் மொத்தம் 45 தான்!

● முதன்முதலாக 10 விக்கெட் வித்தியாசத்தில் வென்றது நம் இந் திய அணிதான். 1975ம் ஆண்டு இந்தியா கிழக்கு ஆப்பிரிக்கா அணியை 10 விக்கெட் வித்தி யாசத்தில் வென் றது.

● அதிகப்படி யான 'மேன் ஆப் த மேட்ச்' வாங்கிய அணி இங்கிலாந்து அணிதான்.

● உலகக் கோப்பை




• ஜாவித் மியாண்டட்

கிரிக்கெட் போட்டியில் அதிகமுறை கலந்து கொண்ட அம்பயர்கள் இங்கிலாந்தின் டிக்கி போர்டு மற்றும் டேவிட் ஷெப்பர்டு.

● மிக மோசமாக பந்து வீசியவர் நியூசிலாந்து பௌலர் மார்டின் ஸ்னேடன்தான். 1983ம் ஆண்டு நடந்த உலகக் கோப்பை போட்டியில் 12 ஓவர்கள் வீசி 105 ரன்கள் கொடுத்தார்.

● அதிகளவு ரன்கள் எடுத்தவர் பாகிஸ்தானின் ஜாவித் மியான்டட். 28 மேட்சுகளில் 1029 ரன்கள்.


• சச்சின்

● 3 முறை செஞ்சுரி அடித்தவர்கள். மே. இந்திய தீவுகளின் விவியன் ரிச்சர்ட்ஸ், பாகிஸ்தானின் ரமீஸ் ராஜா.

● 1983ம் ஆண்டு நடந்த உலகக் கோப்பைப் போட்டியில்தான் கோப்பை, வென்றவர்களுக்கே தரப்பட்டது. கபில் தேவ் தலைமையில் இந்தியா வென்றது.

● 1999ம் ஆண்டு உலகக் கோப்பையை வென்ற அணி பெற்ற பணம் எவ்வளவு தெரியுமா? ரூபாய் 1,27,50,000.

● சச்சின் டெண்டுல்கர் கலந்து கொண்ட முதல் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி 1992ம் வருஷம் நடந்த போட்டிதான். அப்போது அவருக்கு வயது 18.

● மிகக் குறைந்த ரன் வித்தியாசத்தில் வென்ற அணி ஆஸ்திரேலியா அணிதான். 1987 உலகக் கோப்பைப் போட்டியில் இந்தியாவை ஒரு ரன் வித்தியாசத்தில் வென்றது.

- கோ.வீ. இராஜேந்திரன்

1000/- ரூபாய் பரிசுப் போட்டி முடிவு

டிசம்பர் இதழில் அறிவித்த போட்டியில் ஏராளமானோர் கலந்து கொண்டனர். சரியான விடை அளித்தவர்களில் ஐந்து பேர் குலுக்கல் முறையில் பரிசுக்குரியவர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பரிசு பெற்றவர்கள்:


1. ஆர். கிருஷ்ண பிரசன்னா, பதினோராம் வகுப்பு, ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, திருவரங்கம், திருச்சி மாவட்டம்.
2. கா.மாலதி, பத்தாம்வகுப்பு, அரசு உயர் நிலைப்பள்ளி, ஒலையூர், பெரம்பலூர் மாவட்டம்.
3. அ. முகமது யாசீர், பத்தாம் வகுப்பு, அரசினர் மேல்நிலைப் பள்ளி, முத்துப்பேட்டை.
4. ச. கிருத்திகா, ஒன்பதாம் வகுப்பு, புனித பவுல் மேல்நிலைப்பள்ளி, கோவில்பட்டி.
5. என். வெங்கடேசன், ஒன்பதாம் வகுப்பு, அரசினர் மேல்நிலைப் பள்ளி, நல்லூர், காஞ்சிபுரம் மாவட்டம்.

சரியான விடை:

1. ஜிம்மிகார்ட்டர் - நோபல் பரிசு
2. பாண்டா - சீனா
3. குஜராத் பூகம்பம் - 2001
4. காரல் மார்க்ஸ் - மூலதனம்
5. நரேன் கார்த்திகேயன் - கார் பந்தயவீரர்
6. ரசகுல்லா - கொல்கத்தா
7. தீப்பெட்டி
8. முஹர்ரம் பண்டிகை

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள். கலந்து கொண்டவர்களுக்கு நன்றி.

இந்த இதழில் வெளியான விடுகதைகளை எழுதி அனுப்பியவர்கள் சு. மலையரசி, பத்தாம் வகுப்பு, அ.பெ.மே. பள்ளி, திருப்பத்தூர். ரா. ரங்கசாமி, வடுகபட்டி.



காலை எழுந்தவுடன் படிப்பு!

கிறிஸ்துமஸ் விடுமுறையின்போது ஆதித்யா, தன் நண்பன் ரகு வீட்டில் ஒரு வாரம் தங்கியிருந்தான். ரகுவின் அப்பா சிவ னேசன்தான் இந்த ஏற்பாட்டைச் செய்தார்:

"இதோ பார் ஆதித்யா! உன் பிரெண்டு ரகு நல்லா படிக் கிறதாத்தான் சொல்றான்; நானும் கவனிக்கிறேன். ஆனால் மார்க் மட்டும் என்னமோ கம்மியாத் தான் வாங்கறான். என்னன்னே புரியலை. ஒருவாரம் அவனோடு தங்கியிருந்து பாரேன்."

"ஆகட்டும் மாமா" என்ற ஆதித்யா, தன் துணிமணிகளுடன் பாடப் புத்தகங்களை யும் அலாரம் கடிகாரத்தையும் ஸூட்கேஸில் வைத்துக்கொண்டு வந்தான். காலை ஐந்து மணிக்கு அலாரம் எழுப்பிவிட, முகம் கழுவி படிக்கத் தொடங்கினான் ஆதித்யா. ரகுவோ மின் விளக்கு வெளிச்சம் கண்ணில் படாமல் புரண்டு படுத்து, இழுத்துப் போர்த்திக் கொண்டு தூங்கினான். ஏழு மணிக்குத்தான் எழுந்தான். பல் துலக்கி, காப்பி சாப்பிட்டு விட்டு வந்து, தமிழ்ப் பாடநூலை எடுத்து உருப்போட ஆரம்பித்தான்:

''அருவினை... அருவினை... அருவினை... என்ப
உளவோ... என்ப உளவோ..."

அன்று மாலை சிவநேசன் காரி யாலயத்திலிருந்து திரும்பி, கை கால் கழுவி, கையில் காப்பி டம்ளருடன் 'அப் பாடா' என்று சாய்வு நாற்காலியில் அமர்ந் தார்.

"ரகு! இன்னிக்குக் காலையில் ஒரு குறள் படிச்சிட்டிருந்தியே, அதுக்கு அர்த்தம் தெரியுமா?" என்று கேட்டான் ஆதித்யா.

"யாருக்குத் தெரியும்? அது மனப்பாடப் பகுதி; உருப் போட்டேன்" என்றான் ரகு.


"நான் சொல்றேன் கேட்டுக்க" என்றான் ஆதித்யா. "எந்தக் காரியத்தையும் அதற்கு உரிய நேரம் அறிந்து செய்யணும். அதற்குத் தேவையான கருவிகளையும் தயாரா வைச்சுக்கிட்டு செயல்படணும். அப்படி செய்தால் சாதிக்க முடியாத காரியம் என்பதே எதுவுமில்லை என்பது அர்த்தம்.

"நீ அந்தக் குறளைப் படிச்ச அந்தச் செயலையே எடுத்துக்க. அதிகாலை எழுந்து, முகம் கழுவி, பாடம் படிக்கிறது தான் நல்லது. அதுதான் உரிய நேரம். நிதா னமா எழுந்து, சோம்பலுடன் படிக்கக் கூடாது. அப்புறம் எதையும் புரிஞ்சுக்கிட்டுப் படிக்கணும். குறளைப் புரிஞ்சுக்க, எளிய உரைகளைப் பலர் எழுதியிருக்காங்க. அந்தப் புத்தகங்களில் ஒன்று உன்னிடம் இருக்கணும். பிறகு ஒரு ரஃப் நோட்புக், பென்சில் வைச்சுக்கணும். குறளை அர்த்தம் உணர்ந்து, நாலு தடவை எழுதிப் பார்க் கணும். இவைதான் கருவிகள். இப்படி படிச் சால் பரீட்சையில் நல்ல மார்க் வாங்கறது முடியாத காரியமா இருக்காது... இயந்திர கதியில படிக்கக்கூடாது; மனசு லயிக் கணும்... ஒகே?"

"யெஸ், ஒகே!" என்றான் ரகு. தன் படிப்பில்... இல்லை, வாழ்க்கையிலேயே ஒரு திருப்பு முனையாகத் திகழ்ந்த அந்தக் குறளை எழுதி, மேஜை எதிரே பார்வையாக ஒட்டி வைத்தான். எங்கே, நீங்களும் அந்தக் குறளை எழுதுங்க பார்க்கலாம்!

அருவினை யென்ப உளவோ ______
______ ______ ______


– தம்பிப் பயல்



8 வித்தியாசங்களைக் கண்டுபிடியுங்கள்

விடைகள் : 1. மிக்கியின் பட்டன் 2. கையுறை 3. பிரஷ் 4. ஷூ 5. புருவம் 6. மின்னியின் கை 7. வழியும் நீர் 8. கீழே சிந்திய நீர்

முதல் படம் மட்டும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கிறது. மீதி 5 படங்களிலும் ஒவ்வொரு விஷயம் பூர்த்தி செய்யப்படவில்லை. அதைக் கண்டுபிடித்து ஒவியத்தை முழுமை ஆக்குங்கள்.



Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN / PMG (CCR) 496 / 03 - 05*
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 304 * Registered as a Newspaper in Srilanka

